


கலை, பண்பாட்டுப் பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு.

# வெளி

## முதலாவது ஆண்டு மலர்

## 1998

இதழாசிரியர்

**செல்வன் த. மலர்ச்செல்வன்**

வெளியீடு

**கலை, பண்பாட்டுப் பீடம்**

**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## உபவேந்தர் அவர்களின் ஆசிச்செய்தி

கலை, பண்பாட்டுப் பீட மாணவர்கள் வெளியிடும் இச்சஞ்சிகையை நான் வாழ்த்தி வரவேற்கின்றேன். பல்கலைக்கழக மாணவர் மட்டச் சஞ்சிகைகள் பல்கலைக் கழகத்தின் வரலாற்று ஆவணங்களாக அமையும். இளம் உள்ளங்கள் தங்கள் சிந்தனைகளைக் கட்டுப் பாடின்றி வெளியிடுவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. சிந்தனை வெளியீட்டுக்கான எழுத்து ஒரு மனப்பயிற்சியைத் தரும். இந்த மனப் பயிற்சிதான் பின்னர் வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்நோக்கவும் உதவும்.

கலை, பண்பாட்டுப் பீட மாணவர்களுக்கும் இச்சஞ்சிகையின் ஆசிரியர், மற்றும் இதனோடு சம்பந்தப் பட்ட சகலருக்கும் என் வாழ்த்துக்கள்.

**ஜீ.எப்.இராசேந்திரம்**

*துணைவேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்,*
*இலங்கை.*

## பீடாதிபதி வாழ்த்துகிறார்.

கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முதற் சஞ்சிகையான 'வெளி'க்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர் சமூகத்தின் இயல்புகளைத் திரட்டிக் காட்டுவதாக அவர்களது சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவை அமைகின்றன. இவ்வகையில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான இந்தச் சஞ்சிகையும் மாணவர்களின் ஆர்வங்களையும், அபிலாசைகளையும், உலகநோக்கையும் உள்ளடக்கியதாக அமையும் எனக் கருதுகிறேன்.

விரிவுரைகள், கட்டுரைகள், தேர்வுகள் ஆகிய வற்றுடன் இலங்கையின் 'போர்நிலை' நெருக்கடிகளுக்கும் ஏனைய வாழ்க்கை யதார்த்தங்களுக்கும் முகங்கொடுக்கும் மாணவ மாணவிகள் தமது ஆர்வங்களையும், செயற்பாடு களையும் குறுக்கிவிடாது இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆசிரியர் என்ற வகையில் எமக்கு உற்சாகம் தருவதாகும். இத்தகைய 'வெளி' ஆர்வங்கள் தொடர வேண்டும்; பல்வேறு பரிமாணங்களையும், சாத்தியப் பாடுகளையும் எம்மத்தியில் உருவாக்கும் 'வெளி'யாக இச்சஞ்சிகை நின்று நிலவவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சித்திரலேகா மௌனகுரு,**
*பீடாதிபதி,*
*கலை பண்பாட்டுப் பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*
*04-04-98*

## பெரும் பொருளாளர் வாழ்த்துகின்றார்.

ஈழத்தில் தமிழ்க்கலை பண்பாட்டு வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும்போது, அவ்வளர்ச்சியில் தமிழ்ப் பிரதேச பல்கலைக் கழகங்களின் பங்களிப்பு கணிசமானது; காத்திரமானது என்ற உண்மை தெரியவருகின்றது. இவ்விதத்தில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் குறிப்பாக கடந்த ஓரிரு வருடங்களாக முனைப்புற்று வருகின்றமை எனக்குப் பேருவகை தருகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கம் தனது முதல் வெளியீடாகச் சென்ற வருடம் "தழல்" என்ற சஞ்சிகையை வெளியிட்டது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியலைகள் அடங்குவதற்கு முன் கிழக்குப்பல்கலைக்கழகக் கலை, பண்பாட்டுப் பீட மாணவர் ஒன்றியம் "வெளி" என்ற சஞ்சிகையை இவ்வருடம் முதல் முறையாக வெளியிடுகின்றது.

இச்சஞ்சிகை இப்பல்கலைக்கழக மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. இவற்றினூடாக அவர்தம் சிந்தனைகளும் அனுபவங்களும் ஆக்கத் திறன்களும் வெளிக் கொணரப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. கிழக்குப் பல்கலைக்கழக கலை பண்பாட்டுப் பீட மாணவர் ஒன்றியம் தொடர்ந்து இத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று மிகுந்த பூரிப்புடன் வாழ்த்துகின்றேன்,

**வேலுப்பிள்ளை குணரத்தினம்,**
*தலைவர்/சமூகவிஞ்ஞானத்துறை,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

# கலை, பண்பாட்டு மாணவரவைத் தலைவரின் வாழ்த்துரை

எமது கலை, பண்பாட்டுப் பீட மாணவரவையினால் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் ஆண்டு சஞ்சிகை வெளியிடப்படவில்லை. அந்தக் குறையினை "வெளி" என்னும் சஞ்சிகை இந்த வருடம் நிறைவு செய்கிறது.

எமது மாணவரவை உறுப்பினர்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் சஞ்சிகை வெளியீட்டுக்கான வேலைகளை முடித்தமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஒரு பரந்த வெளியினூடாக எவ்வாறு தடையின்றி காற்று வீசுகிறதோ அவ்வாறே இவ் "வெளி" என்ற சஞ்சிகையின் தடையின்றிய வருகையும் அனைவரது அறிவையும் வளர்க்கும் என நம்புகின்றேன். எனவே இனிவரும் காலங்களிலும் எமது மாணவரவையினால் இவ்வாறான சஞ்சிகைகள் வெளிவரவேண்டும் எனவும் வாழ்த்துத் தெரிவிக்கின்றேன்.

**இ.பரமநாதன்,**
*தலைவர்,*
*கலை பண்பாட்டுப்பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

# STUDENTS' UNOIN

Fuculty of Arts & Culture

**EASTERN UNIVERSITY - SRI LANKA**

VANTHARUMOOLAI.
CHENKALADY

Telephone: 065 - 24490

.................... 19....



President:
***Mr.R.Paramanathan.***

Vice - President:
***Mr.S.Partheepan.***

Secretary:
***Mr.R.Vivekanantharajah***

Senior Treasuere:
***Mr. V. Kunarethnam***

Treasurer:
***Miss.N.Nakuladevi***

Editor:
***Mr. T. Malarselvan.***

Committee Member:
***Mr. N.Yothilingam***
***Mr.K.Thiruchselvam***
***Mr.A.Vimalarajah***
***Mr. T.Thavachselvam***
***Miss.P.Sutharsini***
***Mr.A.Vimalasingam***
***Miss.S.Anura.***


## இதழாசிரியரின் இதயத்திலிருந்து

கலை, பண்பாட்டுப் பீடம் 1989ம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட போதிலும் இதுவரை காலமும் கலை, பண்பாட்டுப் பீடம் சார்பாக மாணவர்களினால் ஒரு சஞ்சிகை வெளியிடப் படாதது துரதிர்ஷ்டமே. ஒரு சமூகத்தின் எண்ணங்களை ஆழப்பதிப்பதில் சஞ்சிகையின் வெளிவருகை முக்கியமானது. இந்த வகையில் இந்த ஆண்டு 'வெளி' யினை வெளியிட்டு வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இதனை வெளியிடுவதில் பல சிரமங்கள் இல்லா மலில்லை. ஆக்கங்கள் சேகரிப்பதற்கு 'ஆலாப்பறந்து' திரியவேண்டியுள்ளது. மாணவர்களின் ஆர்வமின்மை; இது தேவையற்றது என்ற அவர்களின் எண்ணப்பாங்கு; 'நோட்ஸ்' குப்பைகளும், விரிவுரைகளும் மாத்திரமே போதும் என்ற பாணியில் ஆளுமைகளைத் தட்டிக்கழிக்கும் ஒரு சோம்பேறித் தன்மைக்குள் தங்களை முடிச்சுப்போடுவது போன்றவை ஒரு நல்ல ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருக்கு மென நினைக்கிறேன்.

இருந்தும் இனிவரும் காலங்களிலாவது எத்தனை கஷ்ட நஷ்டங்கள் வந்தபோதும் தமிழ்கூறும் நல்லுலகில் எமது பீட "வெளியினை" கையேற்றுச் செல்லவேண்டியது நமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இறுதியாகச் சொல்ல விழைவது இதைத்தான், எமது கலை, இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியங்களைப் பேணி வளர்த்து எதிர்காலச் சந்ததிக்கு ஆர்வமுள்ளதாகக் கையளிக்கவேண்டிய பணி எமக்குண்டு. பயம் காரணமாக எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் இருப்பது எம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமனாகும். "வெளிக்கு" படைப்புக்கள், ஆலோசனைகள், வாழ்த்துக்கள் தந்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

"வாழ்க தமிழ்; வெல்க தமிழ்மொழி"

**த. மலர்ச்செல்வன்,**
*பத்திராதிபர்,*
*கலை பண்பாட்டுப் பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

மாணவரவை – 97 / 98



# பின்னவீனத்துவ நிலைமை - லியோதாரின் (Lyotard) சிந்தனை.

பேராசிரியர். சோ.கிருஷ்ணராஜா.

மெய்யியல், சமூகவியல், அழகியல் ஆகிய வற்றில் ஏற்பட்ட புதிய சிந்தனைப் போக்குகளின் இணைப்பிலிருந்து பெறப்பட்டதொன்றே பின்னவீனத் துவம். லக்கான், பூக்கோ, டெறிடா ஆகியோரின் பின்ன மைப்புவாதச் சிந்தனைகளும், ஆலைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட காலத்தில் விஞ்ஞான அறிவில் ஏற்பட்ட விருத்தி, பரம்பல் தொடர்பான சிந்தனைகளும், ஓவியத்தில் அருபமுறைக் கெதிராகவும், கட்டிடக் கலையில் சர்வதேசப்பாணி என்பதற்கெதிராக உருவாக் கப்பட்டவையும் பின்னவீனத்தின் கூறுகளாகும். உயர் பண்பாடு, வெகுஜனப் பண்பாடு என்பவற்றிற் கிடையி லான எல்லைகளைக் களைந்தமையும், பாரம்பரிய பிரிப்பு முறைகளை மீறி புதிய வடிவங் களையும், புதிய கலை மொழியையும் உருவாக்க எத்தனித்த மையும் பின்னவீனத்துவத்தின் இயல்புகளாக எடுத் துரைக்கப்படுகிறது. எனினும் பின்னவீனத்துவம் என்ற கருத்தாக்கம் தெளிவாக வரையறை செய்யப் பட்டுள்ளதோ என்பதில் பலவிதமான ஐயங்கள் தெரிவிக் கப்படுகின்றன. கதம்பம், கூறுபடுத்திப்பார்த்தல், வேறு பாடு, பன்மைத்தன்மை என்பன இதன் சிறப்பியல் புகளாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னவீனத்துவத்தின் எழுச்சியை கருத்து நிலைகளின் இறப்பு (End of Ideology) என்ற கருத்தாக்கத்துடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதுமுண்டு. டானியல் பெல் ( Danial Bell) லிப்செ (Lipset) ஆகியோர் 1950 களில் கருத்து நிலையின் இறப்பு என்ற கருதுகோளை முன்மொழிந்தனர். முதலாளித்துவம், சோஸலிசம், சமூக ஜனநாயகம் ஆகிய கருத்துக்கள் எல்லாம் எடுத்துரைப்புகளே எனக் கூறி, இவையனைத்தும் நடைமுறையிற் சாத்தியமாகா "நற்சமூகம்" என்ற கருத்தாக்கத்தை முன்வைக் கின்றவென விமர்சிக்கப்பட்டது. 1974ல் டானியல் பெல் ஆலைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட சமூகத்தின் வருகை (The coming of Industrial Society) என்ற நூலில் தொழில்நுட்ப சிறப்புத் தேர்ச்சி யாளர்களின் தொழில்நுட்ப அறிவு காரணமாக நாட்டின் பொருளா தாரத்தைக் கட்டுப்படுத்தும் புதிய நிலைமை சமூகத்தில் தோன்றியுள்ளதென்றும், துரித வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் சமூக அமைப்பிலும் இக்காலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகிறார். எடுத்துரைப்புகளின் நிராகரிப்பிற்கு இதுவுமொரு காரணமாயிருக்கலாம்.

பின்னவீனத்துவச் சிந்தனையாளர்களில் லியோதார் குறிப்படத்தக்கவர். கியூபெக் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் கவுன்சில் தலைவரது வேண்டு கோளுக்கிணங்க லியோதார் 1977ல் ஒரு அறிக்கை யொன்றைச் சமர்ப்பித்தார். அவ்வறிக்கை முன்னேறிய சமூகங்களில் காணப்படும் தற்காலத்திய அறிவுநிலை பற்றியதாகும். இவ்வறிக்கையே "பின்னவீனத்துவ நிலமை - அறிவு பற்றிய அறிக்கை (The Post modern Condition: A Report on Knowledge) என்ற பெயரில் நூலாகப் பிரசுரமாகியது. பின்னவீனத்துவத்தின் செல்நெறியை இந்நூல் விரித்துரைக்கிறது. இந் நூலானது மேற்கைரோப்பியச் சமூகத்தை

ஆலைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட சமூகம் என ஏற்றுக் கொள்வதுடன் நுண் இலத்திரனியல் (Micro electronics) ஐரோப்பியச் சமூகத்தின் பண் பாட்டிலும், சமூக அமைப்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்தி வருமென ஏற்றுக்கொள்கிறது. மார்க்ஸிசத்திற்கு எதிரான விமரிசனம் இந்நூலில் இடம் பெற்ற பொழுதும், அதனை எடுத்துரைப்புகள் என்ற வகையீட்டிலடக்கி காரசார மாகக் கண்டிக்கிறது. எடுத்துரைப்புக்கள் தமது முக்கியத்துவத்தை இழந்து விட்டனவெனத் திட்ட வட்டமாகத் தெரிவிக்கிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியே இதற்குக் காரணமாயிற்று. விஞ்ஞானத்தினதும், தொழில் நுட்பத்தினதும் வளர்ச்சி எத்தகைய நியாயப்படுதல் களையும் வேண்டி நிற்ப தில்லை. நடைமுறையினால் அது உறுதிசெய்யப் பட்டுள்ளது. கணனிச் சமூகத்தின் அச்சடிக்கப்பட்ட மின்சுற்றுக்களுக்கிடையே அதிகார அடுக்கு தன் பலத்தை இறுக்கிக் கொண்டிருப்பதை லியோதார் உணரத்தவறிவிட்டாரென விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

உண்மையிலிருந்து கற்பனைக்கும் எடுத்துரைப்பிற்கும், அனுபவ உலகிலிருந்து மொழிக்கும் விஞ்ஞானம் சமயம் அரசியல் என்பன தொடர்பான கோட்பாடுகளிலிருந்து மொழிவிளையாட்டிற்குமாக இடம் பெறும் நகர்வே பின்னவீனத்துவத்தின் வருகைக்கு கட்டியம் கூறுவதாகக் குறிப்பிடும் லியோதார் ஆலைத் தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட கால விஞ்ஞானம் சொல்லாடல் இயல்பு கொண்டதாக, "உண்மை" பற்றி எதுவும் பேசாது முழுமையான பார்வையை நிராகரித்து, கூறுகளாகப் பிரித்துப்பார்க்கும் அணுகுமுறை யுடையதாக மாறி வந்துள்ளதென்கிறார். இம்மாற்றம் பின்னவீனத்துவ குணாம்சமேயாகும். வேறுபாடுகளை உணர்வுபூர்வமாக அங்கீகரித்து ஒத்தியைபற்ற நிலமைகளைச் சகித்துக்கொள்ள பின்னவீனத்துவம் எமக்குக் கற்றுத்தந்துள்ளதென்பது இவரது நிலைப்பாடாகும். இதன்படி இயற்கையையோ அல்லது சமூகத்தையோ முழுமையாக விளக்க முயலும் கோட்பாடுகள் அனைத்தையும் எடுத்துரைப்புக்கள் என நிராகரிக்க வேண்டியேற்பட்டது. லியோதாரின் அபிப்பிராயப்படி பூரணமான புரிந்து கொள்ளலென்பது நடைமுறையிற் சாத்தியமற்றதொரு கற்பனையாகும். இதுவரை சமூகத்தை பூரணமாக விளங்கிக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியையே தழுவியுள்ளன. சமூகம் மிகச் சிக்கானதும், எல்லையற்ற வேறுபாடுகளையும் உள்ளடக்கியதாகும். இதனால் அனைத்து சமூக உறவுகளையும் ஒரு தத்துவத்தி னடிப்படையில் விளக்க முயலுவது இயலாத காரியம். கோட்பாடு என்ற கருத்தாக்கத்தையே முழுமையாக நிராகரிக்கும் பின்னவீனத்துவ வாதிகளும் உளர். எல்லாப் பிரச்சினைகளுக்கும் விடைதரக்கூடிய தத்துவமென்பது ஒரு வெறும் கற்பனை மட்டுமல்ல, ஒரு பயங்கரமான கற்பனையும் கூட என இவர்கள் வாதிடுகின்றனர்,

மொழி ஒரு தொடர்புகொள் சாதனமென்ற வகையில் கடந்த நாற்பது ஆண்டுகளாக விஞ்ஞா னத்தினதும் தொழிநுட்பத்துறையினதும் விசேட அக்கறைக்குரிய ஆய்வுத்துறையாக மாறிவந்துள்ளது. குறிப்பாக மொழியியற் கொள்கைகள், தொடர்பாடற் பிரச்சினைகள், சைபநெத்தியம், கணனியும் அதன் மொழியும், மொழிபெயர்ப்பு, தகவற்சேகரிப்பு, தரவுவங்கி என்பன தொடர்பாக பெருமளவு ஆய்வுகளும் கண்டுபிடிப்புக்களும் நிகழ்ந்துள்ளன. தொழிநுட்பத் துறையில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்கள் மனித அறிவிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. சிற்றுருவாக்கப்பட்டதும் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டதுமான இயந்திரங்களின் வருகையினால் அறிவைப் பெறுவதிலும் அதனைப் பயன்படுத்துவதிலும் பலமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அறிவு தன்னியல்பிலும் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. அளவிடப்படக்கூடிய தகவல்களாக மாற்றமுடியாத அறிவு- அது எத்தன்மைத்தாயினும், காலப்போக்கில் புறக்கணிக்கப்படுமெனவும், எதிர்கால ஆய்வுகள் கணனி மொழி சார்ந்தே இருக்குமெனவும் லியோதார் வாதிடுகிறார். இவரது அபிப்பிராயப்படி கல்வியைப் புகட்டுவதற்கு ஆசிரியர்கள் இன்றியமை யாதவர்கள் என்ற வாதம் கணனி யுகத்தில் காலம் கடந்தவொன்றாகிவிட்டது. அறிவு ஒரு விற்பனைப் பண்டம் என்ற நிலை தோன்றியுள்ளது.

கடந்த சில பத்தாண்டுகளாக கணனி மயமாக் கப்பட்ட அறிவு ஒரு பிரதான உற்பத்திச் சக்தியாக மாறிவந்துள்ளது. விருத்தியடைந்த நாடுகளில் இந்நிலையைத் தெளிவாகக் காணமுடிகிறது. ஆலைத் தொழிலிலும் விவசாயத்திலும் ஈடுபட்ட உடலுழைப் பாளிகள் தொகை கணிசமான அளவு குறைந்து கொண்டே போக, சிறப்புத் தேர்ச்சியாளர், தொழிநுட்ப வியலாளர், வெள்ளாடைத் தொழிலாளர் ஆகியோர் தொகை அதிகரித்து வருகிறது. உலகளாவிய மேலாண்மைக்கான இன்றைய போட்டியில் அறிவு ஒரு பிரதான சத்தியாகத் திகழ்கிறது. கடந்த காலங்களில் பிறநாடுகளைத் தமதாதிக்கத்தின் கீழ் வைத்திருப் பதற்காக எவ்வாறு வல்லரசுகளிற்கிடையே போட்டி நிகழ்ந்ததோ அதேபோல இன்று அறிவையும் தகவற்

தொடர்புகளையும் தாமதாதிக்கத்தில் வைத்திருப் பதற்காகத் தேசிய அரசுகள் போட்டியிடுகின்றன. இன்றைய பின்னவீனத்துவ யுகத்தில் தேசிய அரசுகளின் உற்பத்தியாற்றலில் விஞ்ஞான அறிவே முக்கியத்துவத் தையும் முதன்மையையும் பெறுகிறது. மேலும் விருத்தியடைந்த நாடுகளிற்கும் விருத்தியடைந்து வரும் நாடுகளிற்குமிடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்வதற்கும் விஞ்ஞான அறிவே இன்று பிரதான காரணியாக இருக்கிறது.

இன்றைய கணனி யுகத்தில் விஞ்ஞான அறிவு அரசுகளுக்கும் ஒரு பிரச்சினையாக உளது. அரச நிர்வாகம் நிர்வாகிகளின் கைகளிலிருந்து மீளப் பெறப்பட்டு யந்திரங் களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டுமென வாதிடப்படுகிறது. இவ்வாறு நடைபெறின் இயந்திரங் களில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி சரியான தீர்மானங்களை எடுக்கும் உரிமை எவர்கைகளில் இருத்தல் வேண்டுமென்பது பிரச்சினை யாகிறது.

II

அறிவெனப்படுவது விஞ்ஞான அறிவை மட்டும் சுட்டுவதில்லை. கூடவே இதனுடன் போட்டியிட்டுக் கொண்டு இருப்பதான பிறிதொரு அறிவின் வகையும் உண்டு. இதனை எடுத்துரைப்பு அறிவென லியோதார் பெயரிட்டு அழைக்கிறார். பாரம்பரிய சமூகங்களில் பல எடுத்துரைப்புகள் காணப்பட்டன. நாடோடிக் கதைகள், ஐதீகங்கள், புராணங்கள் என இவை பலவகைப்படும். இவை அத்தகைய சமூகங்களிற் காணப்பட்ட நிறுவனங்களையோ அல்லது பண்பாட்டுக் கூறு களையோ நியாயப்படுத்துவனவாக காணப்பட்டன.

எல்லா எடுத்துரைப்புகளிலும் உண்மை, நன்மை, அழகு என்பன தொடர்பான கருத்துக்கள் விரவி வருவதனால் இவ்வெடுத்துரைப்புக்கள் பண்டைய சமூகத்தின் கட்டுக்கோப்பிற்கான விதிகளையும் வெளிப் படுத்தி நிற்பனவாயுள்ளன. எடுத்துரைப்பு அல்லது கதை சொல்லுதல் மூலமாகத் தரப்படும் அறிவு விஞ்ஞான அறிவுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய தொன்றாகவே காணப்படுகிறது. அருபப்படுத்தல், தருக்கநியதியைப் பேணுதல், அறிதலுக்கான செயற்படு முறைகள் பலவற்றை உள்ளடக்கியிருத்தல் ஆகிய பண்புகள் விஞ்ஞான அறிவிற்கே சிறப்பாக உரியன. எடுத்துரைப்புகளில் இத்தகைய பண்புகள் காணப்படு வதில்லை.

விஞ்ஞான அறிவெனப்படுவது வழங்குநர் - பெறுநர் என்ற இருசாராருக்குமிடையில் நடைபெறுகிற தொரு விளையாட்டாகும். இவ்வறிவிற்குரிய விளை யாட்டில் வழங்குனர் எத்தகைய நகர்வை மேற் கொள்கிறாரோ அதற்குரிய நிருபணத்தையும் தர அவர் கடமைப்பட்டவராகிறார். கூடவே தன் நகர்வுக்கு எதிராக அல்லது முரண்படுகிறவற்றை நிராகரிக்க வல்லவராயும் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. விஞ்ஞான விதிகள் இவ்விளையாட்டை நகர்த்திச் செல்ல உதவியாயிருக்கின்றன. இவ்விஞ்ஞான விதிகளே உண்மை காண்டற்தத்துவம், பொய்யாக்கற் தத்துவம் என அறியப்பட்ட மெய்யியற் கோட்பாடுகளின் ஆதாரமாகும்.

லியோதார் கூறும் விஞ்ஞான விளையாட்டு என்ற கருத்தாக்கம் விக்கன்ஸ்ரைனுடைய மொழி விளையாட்டு என்பதை ஒத்தது. விளையாட்டுக்கள் எவ்வாறு அவ்வவற்றிற்குரிய விதிகளின் அடிப்படையில் ஆடப்படுகிறதோ அவ்வாறே மொழிவிளையாட்டிற்கும் விதிகள் உளவெனக் கூறும் லியோதார், இவ்விதிகள் தேவைக்கேற்ப மாற்றப்படக் கூடியவை என்றும், அத்தகைய மாற்றங்கள் அவ்விளையாட்டில் பங்கு பற்றும் அனைவரதும் சம்மதத்தை உட்கிடையாகவோ அன்றி வெளிப் படையாகவோ பெற்றிருத்தல் வேண்டுமென்றும், விளையாட்டில் வருகிற ஒவ்வொரு நகர்வும் அதற்குரிய விதிகளினடிப்படையில் மேற் கொள்ளப்படுமென்றும் வாதிடுகிறார். ஒழுக்க நியமங்கள் கூட இதற்கு விதிவிலக்கானவையல்ல. பங்குபற்று பவர்களின் சம்மதம் ஆட்ட விதிகளிற்கு இல்லாத பொழுது விளையாட்டே இல்லை யென்றா கிவிடும்.

விஞ்ஞானமாகிய விளையாட்டில் ஈடுபடும் சகபாடிகளிடையே விஞ்ஞான விதிகளே இணக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனினும் இணக்கம் காணப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் உண்மையைக் கண்டறிந்துள்ளரெனக் கூற முடியாது. விஞ்ஞானத்தில் உண்மை என்பது எப்பொழுதும் இரு சாராரினதும் இணக்கத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்பது தெளிவு. வழங்குனர் தெரிவிப்பதை பெறுநரான சகபாடிகள் சரிபார்த்துத் தெரிவிப்பதன் மூலம் அவர்களும் வழங்குனர் ஆகின்றனர். இவ்வாறு விஞ்ஞான விளையாட்டு அறிவைத்தேடிச் செல்கிறது. இவ்வறிவை உற்பத்திசெய்வதற்கு சகபாடிகள் தேவைப்படுவதால் அவர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றனர்.

சகபாடிகள் அதிகரிப்பதை கல்விமுறை உறுதி செய்கிறது. வழங்குனர் எதனை அறிவரோ அதனைப் பெறுநர் அறியவில்லை. எனவே அவர்களைச் சகபாடிகள் ஆக்குவதற்கு போதனை தேவைப்படுகிறது.

கற்பதன் மூலம் அவர்களும் வளங்குனர்க்குச் சமமான தகுதியும் திறமையும் பெறுகின்றனர். பெறுநர் தம் திறனை வளர்ப்பதன் மூலம் தாமறியாததைக் கற்க முயற்சிக் கின்றனரென்பதில் நம்பிக்கை வைத்தே வழங்குனர் களும் (நிபுணர்களும்) செயற்படுகின்றனர். இவ்வாறு விஞ்ஞான அறிவை உற்பத்தி செய்யும் விளையாட்டில் மாணவர்களும் அறிமுகமாகின்றனரென லியோதார் குறிப்பிடுகிறார். விஞ்ஞான அறிவைப் பொறுத்தவரை அதிலடங்கிய எதுவும் நிராகரிக்கப் படலாம். ஒரு புதிய விஞ்ஞானக் கருத்து ஏலவே உண்மையென ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தொன்றுடன் முரண்படின் அவற்றில் யாதாயினும் ஒன்று தவறு என நிராகரிக்கப்படல்வேண்டும். ஒரு விடயம் பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட மொழிவிளையாட்டுக்களை அனுமதியாய ிருக்கும் தன்மையே விஞ்ஞான அறிவை எடுத்துரைப்பு அறிவிலிருந்து வேறுபடுத்துகிறது.

எவ்வாறாயினும் இவ்விருவகையறிவும் வாக்கி யங்களாகவே தொடுக்கப்பட்டிருக்கும். மொழி விளையாட்டின் விதிகளிற்கேற்ப இதில் பங்குபெறுவோர் வாக்கியங்களை நகர்த்திக்கொண்டேயிருப்பர். ஒவ்வொரு நகர்வுக்கும் அதற்கேயுரிய விதிகள் உள. அறிவைப் பெறுவதற்குரிய மொழிவிளையாட்டு சதுரங்க ஆட்டத்தை ஒத்தது. எவ்வாறு சதுரங்க ஆட்டத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் சரியான நகர்வாக்க கருதப்பட்டது. பிறிதொரு சந்தர்ப்பத்தில் சரியான நகர்வாக இருக்க முடியாது போகிறதோ அதுபோலவே அறிவைப் பெறுவதற்கான மொழிவிளையாட்டிலும் ஒரே விதமான நகர்வு எப்பொழுதும் சரியான நகர்வாக இருக்க மாட்டாது.

எடுத்துரைப்பு அறிவின் ஏற்புடைமையை விஞ்ஞான அறிவின் அடிப்படையிலோ அல்லது விஞ்ஞான அறிவின் ஏற்புடமையை எடுத்துரைப்பு அறிவினடிப்படையிலோ மதிப்படல் ஆகாது. இவையிரண்டும் வெவ்வேறு அளவுகோல்களைக் கொண்டுள்ளன. எடுத்துரைப் பானது தனது ஏற்புடமையை தானே உறுதிசெய்து கொள்கிறது. வாதஅமைப்போ அல்லது நிருபணமோ அதற்குத் தேவைப்படுவதில்லை. விஞ்ஞானிகளோ எடுத்துரைப்பு அறிவை எப்பொழுதும் நிராகரித்தே வந்துள்ளனர். அவர்களுடைய அபிப்பிராயப்படி எடுத்துரைப்பு அறிவு ஒருபொழுதும் நிறுவப்பட்டது கிடையாது. நிறுவப்படவும் முடியாது. இதனால் எடுத்துரைப்பு அறிவை நாகரிகத்தடமற்ற அறிவெனவும், பண்டைய மனிதனின் அறிவெனவும், வளர்ச்சி குன்றிய நிலையில் உருவான அறிவென்றும், அபிப்பிராயம் என்றும், கருத்துநிலை என்றும் பலபட வருணிப்பதுண்டு. விஞ்ஞானிகளுடைய அபிப்பிராயப்படி இவை கதை களாகவும் ஐதீகங்களாகவும் புராணங்களாகவும் இருப்ப துடன் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமே ஏற்புடையன. விஞ்ஞானத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்க்கும் போது எடுத்துரைப்புகள் அறிவேயல்ல என்ற முடிவு பெறப்பட்டாலும், விஞ்ஞானத்தின் பெயராலும் எடுத்துரைப்புகள் தரப்படுவதுண்டென லியோதார் வாதிடுகிறார்.

விஞ்ஞானம் ஒரு சிலருக்கே என்ற நிலையி லிருந்து விடுபடுவதற்காக அரசுகள் பெரும் தொகை பணத்தைச் செலவிடுகின்றன. நிறுவன ரீதியான ஆய்வுகளிற்கு அவை உதவுகின்றன. ஆனால் "நிறுவன ரீதியான ஆய்வு" என்ற கோஷத்தின் பின்னால் இரண்டு ஐதீகங்கள் (எடுத்துரைப்புகள்) இருப்பதாக லியோதார் குறிப்பிகிறார். மனித குலவிடுதலைக்காக விஞ்ஞானம் பாடுபடுகிறதென்பது முதலாவது எடுத்துரைப்பாகும். இது பிரெஞ்சுப்புரட்சியின் விளைவாகத் தோன்றிய மானிட வாதம் என்ற நிலைப்பாட்டிலிருந்து எழுகிறது. விஞ்ஞானம் அடிப்படையில் ஒருமைவாத இயல்புடைய தென்பது இரண்டாவது எடுத்துரைப்பாகும். இது முழுமை பற்றி ஜேர்மன் தேசத்து கேகலிய மரபின் விளைவாகத் தோன்றிய ஊகமாகும். இதுபோலவே முன்னேற்றம், ஏகமனதான தாரண்மைக் கோட்பாடு போன்றவைகளும் சமூகம் தொடர்பான ஐதீகங்க ளேயென வாதிடும் லியோதார், பின்னவீனத்துவ யுகத்தில் சமூகம், சமயம், விஞ்ஞானம் என்பன பற்றிய எடுத்துரைப்புகளெல்லாம் தமது செல்வாக்கை இழந்து விட்டனவெனக் குறிப்பிடுகிறார்.

பின்னவீனத்துவ சமூகம் தொழிநுட்ப முன்னேற்ற முடைய சமூகமாகும். இச்சமூகம் எல்லாவகையான எடுத்துரைப்புகளையும், அவற்றின் விதிப்புரைகளையும் நிராகரிக்கிறது. விஞ்ஞானமும் தொழிநுட்பமும் தமது சாதனைகளின் நடைமுறைப் பயன்பாட்டினாலேயே அனைவரது அங்கீகாரத்தையும் பெறுகிறதேயல்லாது வேறு எத்தகைய நியாயப்படுத்தல்களையும் வேண்டி நிற்பதில்லை. இதனால் எடுத்துரைப்புகள் தமது முக்கியத்துவத்தை இழந்துவிடுவதுடன் பகுத்தறிவின் மேலாதிக்கத்தால் அவை படிப்படியாக அற்றுப்போய் விடுகின்றன. சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏலவே தயாரிக்கப்பட்ட தீர்வுகளின் முன்மொழிவை பின்னவீனத்துவம் நிராகரிக்கிறது. பின்னவீனத்துவ அறிவு எத்தகைய சித்தாந்தத்தின் வலைக்குள்ளும் அகப்படாது சுயாதீனமாகச் சிந்தித்து முடிவெடுக்கவும், சொல்லாடவும், கருத்து வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு பரஸ்பரம் அங்கீகரித்துக் கொள்ளவும், ஒத்தியைப்பற்ற சமூகநடத்தைகளை சகித்துக்

கொள்ளவும் உதவுகிறது.

பின்னவீனத்துவ சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கவனத்திற்கெடுத்து செயற்படுத்துவதற்கு பாரம்பரிய சமூகவியல் அதிகம் உதவுவதில்லை யென லியோதார் குறிப்பிடுகிறார். இவருடைய அபிப்பிராயப்படி இன்றுவரை சமூகவியலானது பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் இரு காட்டுருக்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்று தொழிற்பாட்டுவாத முறமைக்கோட்பாடு. இரண்டாவது கூர்ப்பு முரண்பாட்டுக் கொள்கை. இவ்விரு காட்டுருக்களாலும் அவற்றின் எண்ணற்ற மாதிரிகளினாலும் தற்கால மனிதசமூகம் பற்றிய பகுப்பாய்வைச் செய்யமுடியாது. இவற்றிற்குப் பதிலாக பயன்வழி நிலைப்பாடுடைய சமூகவியற் கொள்கையொன்று லியோதாரால் சிபார்சு செய்யப்படுகிறது. இக்கொள்கை எத்தகைய வரலாற்றுப் பணிகளையும் முன்மொழியாது பயன்வழிநோக்கில் யதார்த்தத்தை ஆதாரமாகக் கொண்ட விதிகளினடிப்படையில் சமூகத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறது. பின்னவீனத்துவம் பௌதிகவதீதம் கடந்ததும், ஆலைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்டதும் பன்முகத்தன்மை கொண்டதும், பயன்வழிப் பட்டதுமான சமூக ஒழுங்காக லியோதாரால் கணிப்பிடப் படுகிறது.

தொழில்நுட்பக் கருவிகளில் முதலீடு செய்ய வேண்டிய தேவை தொழிற் புரட்சியால் ஏற்பட்டது. கருவிகளின் பயன்பாட்டால் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. உற்பத்தித்திறனை இலக்காக் கொண்டே கருவிகளும் உற்பத்திசெய்யப்படுகின்றன. கருவிகளின் உச்சப்பயன்பாடு உபரிப் பெறுமமானத்தை உச்சளவினதாக்கிறது. கருவியின் செயற்திறததாலேயே இது சாத்தியமாகிறது. விஞ்ஞானம் இதற்கு உதவுவது மூலம் அது தொழில்நுட்பம் என்ற நிலைக்கு மாறிவருகிறது. இதனால் விஞ்ஞானமே ஒரு உற்பத்தி சக்தியாக இன்று கணிக்கப்படுகிறது. மூலதனச் சுற்றோட்டத்தில் தொழிநுட்ப முதலீடும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

விஞ்ஞான அறிவின் வளர்ச்சியினால் பல கருவிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அதியுச்ச செயற்திறன் என்ற தத்தவத்தின் அடிப்படையிலேயே இக்கருவிகள் உருவாக்கப்படுகின்றன. மிகக் குறைந்த உள்ளீடும் மிகக்கூடிய பயன்பாடுமே அதியுச்ச செயற்திறன் என்பதன் தாற்பரியமாகும். எனவே தொழிநுட்பமும் அதனைச சார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியும் "உண்மையைத்" தேடும் ஒரு விளையாட்டாக இருக்க முடியாது, பயன்வழிப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. பயன்பாட்டில் ஏலவேயுள்ள தொழிநுட்பத்திலும் புதியதொரு தொழிநுட்பமொன்று மிகச் சிறப்பாகச் செயற்படுமாயின், மிகக்குறைந்த சக்தியைப் பயன்படுத்துமாயின், அதுவே "நல்ல" தொழில்நுட்பமாகிறது. நல்ல தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாயின் அதற்குப் பணம் தேவைப்படுகிறது. இதனால் விஞ்ஞானத்தின் விளையாட்டு செல்வந்தர்களின் விளையாட்டாக மாறியுள்ளது. செல்வந்தர் எவரோ அவர் சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் உரிமையுடையவராகக் காணப்படுகிறார். இன்று பணத்திற்கும் உண்மைக்குமிடையில் புதியதொரு சமன்பாடு உருவாக்கப் பட்டுள்ளது.அதாவது உண்மையைக் கண்டறிவதே விஞ்ஞானத்தின் இலக்கென எதிர்காலத்தில் எவரும் கருதமாட்டார்கள். பயன்படுதிறனே அதன் இலக்காக விருக்கும். இன்று விஞ்ஞானிகள், தொழிநுட்பவியலாளர்கள் ஆகியோர் உண்மையைக் கண்டறிவதற்குப் பதிலாக செயற்படுதிறனை அதிகரிக்கவும் அதனால் விற்பனையை அதிகரிப்பதற்குமாக செல்வந்தர்களால் பயன்படுத்தப்படுகின்றனர்.

மூலதனச்சுற்றோட்டமும் முதலீட்டுத் தீர்மானங்களும் பல்தேசியக் கம்பனிகளின் கைகளிலிருப்பது இதற்கு நல்லதொரு உதாரணமாகும். இக்கம்பனிகள் நாடுகளிடையே புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. மேலாதிக்கமும் விஞ்ஞான அறிவும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக பல்தேசியக் கம்பனிகளின் கைகளில் தங்கியிருக்கிறது. அவர்களே மற்றவர்களின் தேவைகள் எவையெவை எனத் தீர்மானிப்பவராகவும் இருக்கின்றனர்.

## III

பின்னவீனத்துவ யுகத்தில் அனைவரது அக்கறையும் சாத்தியத்திலிருந்து சாதனத்திற்கும், உண்மையிலிருந்து நடைமுறைப் பயன்பாட்டிற்குமாக மாற்றம் கண்டுள்ளது. இம்மாற்றம் தற்காலக் கல்விக் கொள்கையிலும் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. தற்காலத்தில் செயற்படுதிறன் உடைய கல்விக்கே கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களிள் இலட்சியங்களிற்குப் பதிலாக தேர்ச்சித்திறனுக்கே கூடிய அழுத்தம் கொடுக்கின்றன. தேவைக்கேற்ற போதனையே வற்புறுத்தப்படுகிறது. தாராண்மைக் கல்விக்குப் பதிலாக தொழிற்கல்வி பற்றியே எங்கும் பேசப்படுகிறது. கற்றல் எந்தளவிற்கு கணனிமொழிக்கு மாற்றப்படுகிறதோ அந்தளவிற்கு மரபு ரீதியான ஆசிரியர்களிற்குப் பதிலாகக் கணனிகளைப் பயன்படுத்த முடிகிறது. பாரம்பரிய ஞாபக வங்கிகளான நூல் நிலையங்களைக் கணனிகளுடன் இணைப்பதன் மூலம் போதனை இயந்திரங்களிடம் ஒப்படைக்கப்

படலாம்.கணனித் தரவுவங்கிகளின் முகடுகள் மாணவர் களுக்கு எட்டக்கூடியதாயிருத்தல் போதனைக்குப் போதுமானது. இவ்வழிமுறை கற்றலில் எத்தகைய பாதிப்பையும் விளைவிக்கப் போவதில்லையென்று லியோதார் வாதிடுகிறார். மாணவர்க்கு கணனி மொழியைப் பயன்படுத்தவும், எத்தகைய அறிவு தேவைப்படுகிறதோ அதற்குரிய ஞாபகவங்கி எது வெனவும் கற்பித்து விடுதலே போதுமானதென்பது இவரது நிலைப்பாடாகும்.

ஆன்மவாழ்க்கை, மானிடத்தின் விடுதலை ஆகிய எடுத்துரைப்புகளின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு ஆசிரியரின் பணியில் ஒரு பகுதி இயந்திரங்களின் கையில் ஒப்படைக்கப்படுவது திருப்தி யற்றதாகவும், சகிக்கமுடியாததாகவும் தோன்றும். ஆனால் இவ்வெடுத்துரைப்புகள் அறிவைப் பெறுவதற் கான உந்துசக்தியாக தற்காலத்தில் கருதப்படு வதில்லையென லியோதார் குறிப்பிடுகிறார்.' உண்மை என்றால் என்ன' என இன்று எவரும் கேட்பதில்லை. 'என்ன பிரயோசனம்' என்றே கேட்கின்றனர். மாணவர் களும் இதனையே கேட்கின்றனர். அரசும் இவ்வாறே நோக்குகிறது. அறிவு வணிகப் பொருளாகும் பொழுது அதனை விற்க முடியுமா என்பதே பிரச்சனையாகிறது.

செயற்படுதிறன் உடையோரை அதிகரிப்பதும் அவர்கள் திறனை வளர்ப்பதுவுமே இன்றைய கல்வியின் இலக்காக உள்ளது. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் தரவுகளை அறிந்து உடனடியாகக் செயற்படுத்தும் ஆற்றலும், கிடைத்த தரவுகளைப் பயனுறுதிமிக்க தந்திரோபாயமாக ஒழுங்குபடுத்திக் கொள்வதும் மிகமுக்கியமானது. தரவு வங்கிகளே நாளைய கலைக்கழஞ்சியங்களாகும். பின்னவீனத்துவ இளைஞனதும் யுவதியினதும் இயல்பும் இதுவேயாகும். புதிய வழிமுறையில் தரவுகளை ஒழுங்குபடுத்தலே அவர்களுக்கு முக்கியமானது. தேவைப்படுவதை தனியே பிரித்தெடுத்துப் பயன்படுத்தும் இவ்வாற்றலே ஆக்கக்கற்பனையாகுமென லியோதார் வாதிடுகிறார். ஏலவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளினடிப்படையில் புதியநகர்வைச் செய்ய, அல்லது புதிய விதிகளைக் கண்டுபிடித்து புதிய விளையாட்டை அறிமுகப்படுத்த ஆக்கக் கற்பனை உதவிபுரிகிறது.

## IV

எண்ணற்ற கண்டுபிடிப்புகள் ஏலவே நடைமுறை யிலிருக்கும் ஒரு விஞ்ஞாக விளையாட்டை முழுமை யாக சிதறடித்துவிடும் என்பதற்காக பல்லாண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானத்தின் வரலாற்றில் இத்தகைய உதாரணங்கள் பல காணப்படுகின்றன. இது பல்கலைக்கழகங்கள், விஞ்ஞான அதிகார அடுக்குகள், என்பனவற்றின் மட்டுமல்ல, ஒரு முழுப் பயில் துறையிலும் கூடக் காணப்படலாம். ஒரு கண்டுபிடிப்பு எந்தளவிற்கு பலரது கணிப்பைப் பெறுகிறதோ அந்த அளவிற்கு அதனை நிராகரிப்பதற் கான சாத்தியப்பாடுகளும் குறைந்திருக்கும்.

விதிகள் பற்றிய இணக்கத்தினடிப்படையிலேயே விஞ்ஞான விளையாட்டுகள் நடைபெறுவதால் விதிகளை மாற்றுவதற்கு இணக்கம் தேவைப்படுகிறது. விதிகளை மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக எடுத்துக் காட்டியதன் பின்னரும் மற்றவர்கள் அதற்கு இணங்கா திருப்பதன் மூலம் மாற்றத்தை வேண்டுவரைப் புறக் கணித்த சம்பவங்களும், விஞ்ஞானத்தின் வரலாற்றில் காணப்படுகிறது. இதனைப் பெரும்பான்மை யினரின் 'பயங்கர வாத நடத்தை' என லியோதார் வருணிக்கிறார். மாற்றத்தை ஏற்பது விளையாட்டில் ஈடுபடும் பெரும்பான்மையினரின் தகுதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதாலேயே இப்பயங்கரவாதம் தோன்றுகிறது. இதனால் ஒருவனது கண்டுபிடிப்புகள் அடக்கப்படலாம் அல்லது புறக்கணிக்கப்படலாம். ''எமது இலக்குகளிற்கேற்ப உனது ஆர்வத்தையும் இசைவாக் கிக்கொள் அல்லது வேறிடம் பார்'' என இப்பயங்கர வாதம் கண்டுபிடிப்பாளனை எச்சரிக்கிறது.

## V

நவீனத்துவம் என்று சொல் 18ம் நூற்றாண்டின் புத்தொளிக்காலச் சிந்தனையாளர்களால் தோற்றுவிக்கப் பட்டதொன்றாகும். விஞ்ஞானம் தற்சார்பற்றதாய் இருத்தல் வேண்டுமெனவும், ஒழுக்கம், சட்டம், விஞ்ஞானம் ஆகிய துறைகள் சர்வியாபகமான கோட்பாட்டினடிப்படைகளைக் கொண்டுள்ளனவென்றும், கலை - இலக்கியங்கள் சுயாதீன இயல்புடையன வெனவும் புத்தொளிக் காலச் சிந்தனையாளர்கள் வாதிட் டனர். விஞ்ஞானமும் கலையும் உலகு, மனிதன் என்பன பற்றிய சிறப்பான புரிந்துணர்வைத்தரவல்லதாகவும் சிறந்த ஒழுக்க விழுமியங்களைப் பேணவல்லதாகவும் வளர்த்தெடுக்கப்படலாமென நம்பப்பட்டது.

ஆனால் நடந்ததென்னவோ எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறானதாகவே இருந்தது. விஞ்ஞானத்திலும் கலையிலும் நிறுவனமயமாதல் ஆதிக்கம் பெறத் தொடங்கியது. இதனால் இவையிரண்டும் மனித வாழ்க்கையுடன் கொண்டிருந்த நெருங்கிய பிணைப் பிலிருந்து விடுபடலாயின. விஞ்ஞானம் சாதன நிலைப் பட்டதாகவும், ஒழுக்கம் நடைமுறைப்பயன்

பற்றியதாகவும் கலை உணர்ச்சி வெளிப்பாடாகவும், சிறப்புத் துறையாளர்களின் பணியாக அவர்களின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்தது. உலகம் ஏதோ ஒழுங்கிற்கு உட்பட்டதாய் இருக்கிற தென்ற நம்பிக்கை பொய்த்துப் போயிற்று. புலனுக்கு மெய்யானதாகத் தோன்றியதெல்லாம் தொடர்ச்சியான இயக்கமும் மாற்றமுமே என்றாயிற்று. கால் நடையா கவோ அல்லது குதிரையிலோ செல்லுவதிலும் பார்க்க மிகவேகமாக பயணிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. பல்லாயிரம் அடிகளிற்கு மேல் விமானத்திலிருந்து பூமியைப் பார்க்கும் அனுபவம் மனிதனுக்கு அவனது வரலாற்றில் முதன் முதலாக ஏற்பட்டது. சமூக வாழ்க்கையிலும் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. நகரங்களில் ஏற்பட்ட குடித்தொகைப் பெருக்கம் முற்றிலும் புதியவொரு வாழ்க்கை முறையை ஏற்படுத்தியது. ஆரவாரம் மிக்க நகரவாழ்க்கை கலை- இலக்கியங்களின் முதன்மைப் பொருளாயிற்று. பாரம் பரிய கருப்பொருள்களிற்குப் பதிலாக புதிய கருப் பொருள்கள் இடம் பெறலாயின. இந்நிலை தொடர்பாக பலவகையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. நவீனத்துவ பண்பாடு மனிதனின் நாளாந்த வாழ்க்கை விழுமியங்களைக் கூட மாசுபடுத்தி யுள்ளதென விமர்சிக் கப்படுகிறது. சிற்றின்பவாத இலக்குகளே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. கீழ்ப்படி வின்மையும் தற்காதலும் போட்டியும் நவீனத்துவப் பண்பாடு எமக்குக் கற்பித்த சிற்றின்பவாத நிலைப்பாடு களாகுமென டனியல் பெல் குறிப்பிடுவார். நவீனத்துவப் பண்பாட்டின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் பின்னமைப்பு வாதச் சிந்தனையாளர்களும் விமர்சிக் கிறார்கள். குறிப்பாக டெறிடா, பூக்கோ மற்றும் இவர்கள் அடியொற்றி வந்தவர்கள் நவீனத்துவத்திற்கு எதிராகத் தெரிவித்த கண்டனங்கள் குறிப்பிடத்தக்கவை.

சர்வவியாபகத் தன்மை கொண்டவை எனக் கூறப்படும் சகல கோட்பாடுகளிற்கும் எதிரான நிலைப் பாடுடையதாய் பின்னவீனத் தத்துவம் காணப்படுகிறது. இயற்கை பற்றியதும் மனிதன் பற்றியதான உண்மை விளக்கம் என முன்வைக்கப்படும் சகல விதமான விளங்கங் களிலும் இது நம்பிக்கையற்றுள்ளது. முழுமையின் பரிணாமம், தொழிலாளரின் விடுதலை, வர்க்க பேதமற்ற சமுதாயம் போன்ற எடுத்துரைப்புகள் எல்லாம் இன்று தம்சிறப்பை இழந்துவிட்டதென லியோதார் வாதிடுகிறார். யாதேனுமொரு 'உண்மை விளக்கக் கோட்பாட்டை' ஆதாரமாகக் கொண்டு மனிதனையும் உலகையும் விளக்கமுயலுவது நவீன காலச் சிந்தனையாகும். பின்ன வீனத்துவ யுகத்திலோ இவையெல்லாம் நிராகரிக்கப்பட்டு விட்டன என்கிறார்.

இயற்கையையும் சமூகத்தையும் தன் ஆழுமையின் கீழ் கொண்டுவர முயன்ற நவீனகாலச் சிந்தனையாளன் அதற்கானதொரு அடிப்படையை உண்மை விளக்கம் என்ற எடுத்துரைப்பில் கண்டு கொண்டான். பின்னவீனத்துவத்தின் எழுச்சி உண்மை விளக்கக் கோட்பாடுகளை நெருக்கடி நிலைக்குள்ளாக்கியது. தனியொரு தத்துவத்தை ஆதாரமாகக் கொள்ளும் எடுத்துரைப்புகளின் ஆற்றல் மீது அது சந்தேகம் கொள்கிறது.

கட்டாயப்படுத்துவதன் மூலம் ஓரினத் தன்மையுடைய சமூகமொன்றை மார்க்சிசம் உருவாக்க விரும்புகிறதென்பதும், இது சாத்தியமாக காரியமென்பதும் லியோதாரின் நிலைப்பாடாகும். முழுமையான சமூகமாற்றத்திற்குப் பதிலாக படிப்படியான சீர்திருத்தத்தில் இவர் நம்பிக்கை கொண்டவராகக் காணப்படுகிறார்.

## VI

தனியன்களாக பிளவுபட்ட மொழிவிளையாட்டே எமது காலத்தின் குணாதிசயமாகும். அனைத்தையும் தொடர்புறுத்தும் பொதுமொழி என்பதற்கு இங்கு இடமில்லை. மார்க்சிசம் அனைத்தையும் தொடர் புறுத்தும் ஒரு பொதுமொழியாதலால் பின்னவீனத்துவ யுகத்தில் அதற்கு இடமில்லாது போகிறதென லியோதார் வாதிடுகிறார். முழுச்சமூகத்திலும் என்ன நடைபெறுகிறதென எவராலும் ஊகிக்கமுடியாது. எந்தத் தனியொரு தத்துவத்தின் அடிப்படையிலும் சமூகம் இயங்குவ தில்லையெனக் கூறும் லியோதாரின் ஆய்வுகள்,கயக் (Hayek), கால்பொப்பர்(Karl Popper) ஆகியோர்களின் வழித்தடத்திலேயே செல்வதை அவதானிக்கமுடிகிறது. தனிநபர்களை முதன்மைப் படுத்திய சமூக ஆய்வும், படிப்படியான சீர்திருத்தமுமே காள் பொப்பரின் சமூகப் பார்வையாகும். சமூக இயக்கமென்பது கூறுகூறாக நடைபெறுவதெனவும், பிரக்ஞைபூர்வமான திட்டமிடலும் பார்க்க சந்தைப் பொருளாதாரமே பாதுகாப்பானதும் சிறப்பானதெனவும் கயக் வாதிடுகிறார்.

சுருங்கக் கூறுவதாயின், பின்னவீனத்துவம் சமூக உறவுகளையும் அரசியல் நடைமுறைகளையும், கலை- இலக்கியங்களையும் தனியொரு கோட்பாட்டின் அடிப்படையில் வைத்து விளக்க முயலுவதை நிராகரிக் கிறதெனலாம். இதனாலேயே தான் லியோதாரும் ஏனைய பின்னவீனத்துவவாதிகளும் ஒட்டுமொத்தமான முழுமையான அணுகுமுறைக்குப் பதிலாக, தனித் தனியாக பகுதி பகுதிகளாகப் பிரித்து பார்க்கும் அணுகு முறையை முன்வைக்கின்றனர்.

# என் வாழ்வே பேயே!



த.மலர்ச்செல்வன்
விடுகை வருடம்

வெறுத்துப் போயிற்று
'நப்புச் சப்பில்லா' வாழ்வு
வெறுத்துத்தான் போயிற்று
மசிர் உதிர்ந்த
மசிக்குட்டியாய்
சுடுமண்ணில்
உழத்தி உழத்தி
ஒவ்வொரு கணமும்
கழன்று கழன்று போகும்
நப்புச்சப்பில்லா வாழ்வே!
நீ! ஒருதரம்
நல்வாழ்வு தாராயோ!

இரவு, கனாவில்
நான் காணாத தேசத்தில்
தன்னந்தனியாக
நடந்து போகும்
அந்த இன்பலோகத்தில்
என்னை அறியாமலே
சொக்கிப் போனேனே!
அந்த ஒரு நிமிடம் கூட
என்வாழ்வில் உதிக்காதா?

என் வாழ்வே!
என், மைஇருட்டுத் தேசத்தில்
ஒளிக்கீற்று
எப்ப உதிக்குமோ?

வெள்ளைப் புறாக்களும்
துலாவும் மயில்களும்
கானம் பாடும் குயில்களும்
கதை சொல்லும் கிளிகளும்,
துலாவி நிற்க
அவளுடன் கடற்கரையில்
கட்டியணைத்து
விதிர் கொண்டு எழும் காற்றில்
முகத்தைப் பறிகொடுத்து
கூந்தலைக் கோதி
கொவ்வைச் சிவப்புக் கன்னத்தில்
முத்தமிடுவது,
இனி எப்ப?

எல்லாம் தொலைந்து தான் போயிற்று
இருட்டிக் கிடக்கும் மை இருட்டுப் பாதையில்
துவக்குகளும், மிதிவெடிகளும்
முளைத்துக் கிடக்கும்
என் இருப்பில்
என் வாழ்வைத் தேடுவது எப்படி?

துக்கம் கொதிக்கும்
ஒவ்வொரு கணங்களும்
பொன் கொளிக்கும் திராவகத்தில்
மையல் கொள்வதை விட
வேறு ஒன்றுமில்லைத் தானின்று.

# ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் இன்னொரு 'பாரதி'

~ செ.யோகராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர் (மொழித்துறை)

ஈழத்துச் சஞ்சிகைகள் பற்றியதேடல் மிகுந்தவர் நாற்பதுகளின் பிற்கூற்றிலே (கொழும்பிலிருந்து) வெளியான (1946) ஈழத்தில் முதல் முற்போக்கு சஞ்சிகையான 'பாரதி' பற்றி நன்கறிந்திருப்பர். எனினும் அதே காலப்பகுதியில் மண்டூரிலிருந்து (மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள புகழ்மிகு கிராமம்) வெளிவந்த 'பாரதி' சஞ்சிகை பற்றி அறிந்தோர் மிகச் சிலரேயாகலாம். இப் 'பாரதி' பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'பாரதி' சஞ்சிகை ஏறத்தாழ பத்து இதழ்களுக்கு மேல் வெளிவந்துள்ளதாகத் தெரிகிறது. முதல் இதழ் 1949இல் பிரசுரமாயிருக்க வேண்டும். 'தேசிய மாத இதழ்' ஆக வெளிவந்த பாரதி சஞ்சிகையின் பதிப்பாசிரியர்: ம. நாகலிங்கம். நிர்வாக ஆசிரியர்: க.செபரத்தினம், பிரசுரகர்த்தர்: கு.த.மூர்த்தி. ஒவ்வொரு இதழும் பதுளை, கொழும்பு, கண்டி என வெவ்வேறு இடங்களிலுள்ள 'பிரஸ்' களில் அச்சிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஓரிதழின் விலை: 30 சதம். வருடச் சந்தா (தபாற்செலவு உட்பட): ரூபா நான்கு.

குறிப்பிட்ட இலட்சியங்களுக்கப்பால் ஆர்வம் காரணமாகவே 'பாரதி' சஞ்சிகை வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்டாலுங் கூட (நேரடித் தகவல்) ஆழமான தொரு சமூக நோக்கு 'பாரதி'க்கு இருந்துள்ளமையை சஞ்சிகையின் 'மகுடவாசக'த்தின் மூலம் அறிய முடிகின்றது; "சாதிச் சண்டை போச்சோ உங்கள் சமயச் சண்டை போச்சோ" என்ற பாரதியின் பாடலடிகளே அம்மகுட வாசகமாகிறது. சமகால உலக, இலங்கைச் செய்திகள் இலங்கையின் சமூக, அரசியல் பிரச்சினைகள் என்பன 'ஆசிரியர் பக்கங்களு'டாகவும் அவ்வப்போது படைப்புகளூடாகவும் வெளிப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாகின்றது.

'ஆசிரியர் பக்கங்க'ளில் இடம் பெற்றுள்ளனவற்றுள் குறிப்பிடத்தக்கதொரு விடயம், மதுபானப் பாவனை அவ்வேளை முதன்மை பெற்றிருந்தமையும் மது ஒழிப்பிற்கான பிரசாரங்களும் பற்றியது; இத்தகைய சமூகப் பிரச்சினைகளை விட, முக்கியமான மூன்று அரசியற் பிரச்சினைகளை இனங்காண முடிகின்றது.

மேற்கூறியவற்றுள் ஒன்று, மலையக மக்களது பிரஜா உரிமை பற்றியது; இவ்விடயம் உணர்ச்சி மீதூர எழுதப்பட்டுள்ளது.

மற்றொன்று, சமஷ்டி அரசியல் பற்றியது, 'பாரதி' சஞ்சிகை தோன்றிய வருடத்திலேயே சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) யும் உதயமானது, இத்தகைய சூழ்நிலையில், இதில் இடம் பெறும் பின்வரும் செய்திக் குறிப்பு முக்கியமானது: "சர்க்கார் கட்சியார், தமிழ்ச் சாகியத்தாரின் விடாப்பிடியான வேண்டு கோட்கியைந்து கிள்ளி வைக்கும் எச்சில் உணவை நம்பி ஏமாந்து போகக்கூடாது. இந்தியச் சகோதரர் இன்று மண்டையில் அடிவாங்கிக் கொண்டிருக்கின்றனர். நாளைக்கு அந்த அடி எமது மண்டையிலுந்தான். எனவே, நாம் கைகட்டிக் கொண்டிருக்க இது சமயமில்லை. போரிடுவோம்,

வாருங்கள் என்று அறைகூவுகின்றனர் தோழர்கள் செல்வநாயகம் M.P , வன்னியசிங்கம் M.P , டாக்டர் நாகநாதர், செனட்டர் அமிர்தலிங்கம் B.A. சமஷ்டி அரசியல் பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயமாகவும் தமது அபிப்பிராயமாகவும் ' பாரதி ' முன்வைக்கும் கருத்துக்களும் சிந்தனைக்குரியவை.

பிறிதொரு விடயம் இலங்கையின் தேசியக் கொடி தொடர்பான சர்ச்சைகள் பற்றியதாக அமைகிறது. (இன்றைய சுதந்திரப் பொன்விழா சூழலில் இதுபற்றிய தேடல்கள் பயனுள்ள - சுவையான் -தகவல்களைத் தரக்கூடும்.)

'பாரதி'யில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் எப்பொருள் பற்றியன? கலை (எ-டு: லலித கலைப் படிப்பு - ஆசிரியர் K .கணபதிப்பிள்ளை; இவர் சித்திரலேகா மௌனகுருவின் தந்தை), இலக்கியம் ('தலைவனைத் தொடர்வது தருமந்தானே'- மயிலன்; கலித்தொகைப் பாடல் நயம்), விஞ்ஞானம் ('அணு'- கோ.கோணேசபிள்ளை), சமூகம் (தீண்டாமையின் திருநடனம்- D.T. செவ்வநாயகம்) பெரியார் வாழ்க்கை (செகசிற்பியாரும் அவர் பிறப்பிடமும் - லண்டனிலிருந்து சு.வித்தியானந்தன்) முதலாகப் பல்வேறுதுறை சார்ந்துள்ளன. 'பாரதியின்' நினைவு மலரில் இடம் பெற்றுள்ள பாரதியார் பற்றிய கட்டுரைகளும் சில விதந்துரைக்கப்பட வேண்டியவை. (எ-டு: பண்டிதர் வீ.சி.கந்தையா எழுதிய 'விதியும் மதியும்'; நாவற்குழியூர் நடராஜன் எழுதிய 'பாரதியின் திறமை என்ன?') இத்தகைய கட்டுரைகள் பல்வேறிடங்களிலுமுள்ள அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளமை நினைவு கூரத்தக்கது. அன்றைய சூழலில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் சில கட்டுரைகள் பெறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (எ-டு: லண்டனில் கலாநிதிப் பட்ட ஆய்வு செய்து கொண்டிருந்த சு.வி.யின் கட்டுரை)

மேற்குறித்தவற்றுள் இருகட்டுரைகள் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம். ஒன்று, 'தீண்டாமையின் திரு நடனம்' என்ற தலைப்பிலே D.T. செல்வநாயம் (பின்நாள் அருள் செல்வநாயகம்) எழுதியது. இக்கட்டுரை, யாழ்ப்பாணததில் நிலவிவரும் தீண்டாமைக் கொடுமை பற்றி, காரசாரமாகக் கண்டிக்கிறது. பகுத்தறிவு நோக்கில் தர்க்கரீதியாக அமைந்துள்ள இக்கட்டுரையினூடாக சமகால திராவிடக் கழகச் சிந்தனைகள் அவ்வேளை இலங்கை எழுத்துக்களில் ஏற்படுத்திய தாக்கம் வெளிப்படுகின்றது எனலாம்.

இன்னொரு கட்டுரை, நாவற்குழியூர் நடராஜனின் 'பாரதியின் திறமை என்ன?' என்பது. பாரதியாரின் கவிதை பற்றி மிக ஆழமாக விமர்சனம் செய்வது இக்கட்டுரை. (குறைகள் பெருமளவு சுட்டப்படுகின்றமை கவனிப்பிற்குரியது); இவ்விதத்தில் யானறிந்த வரையில், இதுவே முன்னோடிக் கட்டுரையாகலாம்; எனவே, இனிவரும் பாரதியார் பற்றிய கட்டுரைத் தொகுப்புக் களில் இது இடம் பெறுவது அவசியமாகும்.

'பாரதி'யில் வெளியான சிறுகதைகளுள் கணிசமானவை 'காதல்'பற்றியமைந்தவை. வித்தி யாசமான உள்ளடக்கம் கொண்டவை என்ற விதத்தில் புதுயுகம் ('பாஞ்சாலி') சதிகாரி (எம்.எம்.ஸாலிஹ்) ஆகியன குறிப்பிடத்தக்கன. முன்னையது, தனக்குச் சம்பள உயர்வு கிட்டியுள்ளதாக தொழிலாளி ஒருவன் மகிழ்ச்சியடைவதும், முடிவிலே அது கனவு என்றறிந்து கொள்வதும் பற்றியது. மற்றையது ஒரு வயோதிபனுக்கு வாழ்க்கைப்பட்ட இளம் முஸ்லீம் பெண் ஒருத்தி அவனைக் கொலை செய்வது பற்றியது. முற்குறிப்பிட்ட காதல் கதைகளில் இடம் பெறும் அந்தஸ்து வேறுபாடு காரணமாக, பெரும்பாலும் தோல்வியில் முடிகின்றது. இத்தகையனவற்றுள் 'மங்கியதோர் வெளிச்சம்' பாராட்டத்தக்கதொரு சிறுகதை (எழுதியவர்:S.M. ராஜு), கு.ப.ரா.வின் 'சிறிது வெளிச்சம்' என்ற கதையை ஓரளவு ஒத்துள்ள இப்படைப்பின் வெற்றி அச்சிறுகதையின் செல்வாக்கு இதில் படிந்து அதுகாரணமாக ஏற்பட்டிருக்கலாமோ தெரியவில்லை.

பொதுவாக 'பாரதி' யில் இடம் பெற்றுள்ள சிறுகதைகளில் இலங்கை மக்களது பிரச்சினைகள் இடம் பெற்றன என்பதற்கில்லை. அக்காலச் சூழலில் அதனை எதிர்பார்ப்பதற்குமில்லை. எனினும் 'சிறுகதைப் போட்டி யொன்றினைப் 'பாரதி' நடத்தியுள்ளமை அன்றைய சூழலில் முக்கியமானதொரு விடயமாகப் படுகின்றது.

சமகால எழுத்தாளர் பற்றி 'பாரதியில்' இடம் பெற்றுள்ள ஆசிரியர் பக்கக் குறிப்பொன்று இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றது. சற்று நீண்டதாயினும், முழுமையாக அக்குறிப்பினை இங்கு எடுத்தாள்வது பொருத்தமுடையது. அது இதுதான்: "எழுத்தாளன் உலகுக்குச் செய்யும் தொண்டு அளவிடற்கரியது. அதே நேரத்தில் சில ஊதாரி எழுத்தாளர்கள் நாட்டுக்குச் செய்யும் தீமைகளையும் எண்ணிப் பார்க்காதிருக்கமுடியாது. அவர்களை எழுத்தாளர்கள் என்று குறிப்பிடுவதை விட 'வேஷதாரி எழுத்தாளன்' என்று குறிப்பிடுவது மேலாகும். பக்கத்து வீட்டாருக்கும் தன் வீட்டு அம்மாவுக்கும் இடையில் ஏதும் மனத்தாபம் ஏற்பட்டு விட்டதென்றால் நாளைக்குப் பொய்யும் புளுகும் சேர்ந்து தட்டுத்தடுமாறி ஏதோ சொல்லுருவங்கட்கு மத்தியில் அடுத்த வீட்டார் பெயர்களையும் புதைத்து ஒரு கதையைச் சிருட்டித்து விடுகிறார் அந்த வேஷதாரி எழுத்தாளன். கபடமறியாத பத்திராசிரியரும் பிரசுரித்து விடுகிறார் அந்தக் கதையை. வீணான புரளி ஒன்று உருவாகிறது. வஞ்சத்தைத் தீர்க்க வழியறியாத சில பேடிகள் எழுத்தாளர் உருவம் பூண்டு உண்மையான எழுத்தாளர்கட்குத் தோஷத்தை உண்டுபண்ணுகின்றனர்.

இப்படிப்பட்ட நபர்கள் உயரப்பறந்து தங்கள் மானத்தைக் காற்றில் தூற்றி விடுவதைப் பார்க்கிலும் ஏதும் அரபிக் கதைகளை வாசித்துக் கொண்டிருந்தல் நல்லதென நினைக்கிறோம்"

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிப் போக்குப் பற்றிச் சிந்திப்போருக்கு இது பயனுள்ள விடயமல்லவா?

'பாரதி'யில் இடம் பெற்றுள்ள கவிதைகள் தமிழ் (மூணாக்கான) தமிழர் கடமை (ஜோஸ்), ஏழ்மை, எழுத்து முயற்சி (சுபமணி) முதலியன பற்றி அமைகின்றன. ஏழ்மை பற்றிய 'இதுவா பொங்கல்?' (கவி.ஜி.எம். செல்வராஜ்) குறிப்பிடத்தக்கதொரு முயற்சியாகும். முதற்கவிதை பின்வருமாறு அமைகிறது:

"ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
'நாளைவா கூலிதர' வென்று சொல்லி
நாட்டாண்மை காட்டி யெந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிவிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கைக் கட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ?"

பின்னர் முக்கியமான கவிஞராகிவிட்ட பரம ஹம்சதாசனின் பல கவிதைகள் 'பாரதி'யில் வெளியாகியுள்ளன. இவ்விடத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயமொன்றுள்ளது. பாரதியில் வசனக் கவிதை' முயற்சியும் இடம் பெற்றுள்ளமையே அதுவாகும். 'வசனக்கவிதை' என்ற மகுடமிட்டு 'கற்பனைக் காதலிக்குக் கலைக் கடிதம்' என்ற தலைப்பில் எஸ்.கே.ராஜு எழுதிய ஆக்கம் இவ்வாறு ஆரம்பிக்கிறது.

"அருமைக் காதலிக்கு!

1. தளிர்க் கரங்கொண்டு தங்கத் தாளில் களிப்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது. விழிப்புடன் இருந்து மீண்டும் மீண்டும் சலிப்படையாது படித்துப் பார்த்தேன். படித்துப் பயன் என் பதில் எழுதவேண்டாமோ கண்ணே மணியே கனியே என்றெழுத எனக்குத் தெரியாது"

சமகால 'ஈழகேசரி', 'பாரதி' (கொழும்பு) என்பவற்றிலே வரதர், அ.ந. கந்தசாமி, 'சோதி' முதலானோரின் வசனக் கவிதைப் படைப்புகள் வெளிவந்து கொண்டிருந்ததை இவ்விடத்தில் நினைவிற் கொள்ளவேண்டும். பாரதியார் பற்றிய குறிப்பிடத்தக்க கவிதைகள் எழுதிய சுத்தானந்த பாரதியார், ஏ.சி.அன்புதாசன், பரமஹம்சதாசன், S.சோமசுந்தரம் பிள்ளை ஆகியோரும் பாராட்டிற்குரியவர்கள்.

தவிர, பாரதியில் இளைஞர்களுக்காக 'இளைஞர் பகுதி', சிறுவர்களுக்காக 'பாலர் பகுதி' பெண்களுக்காக 'மங்கையர் மன்றம்' என்பன இடம் பெற்றுள்ளன. சில வேளைகளில் பக்க அளவிற்கேற்ப இவற்றுள் ஓரிரு பகுதிகள் அவ்வப்போது இடம்பெறாது போவதுமுண்டு.

ஒரு சில இதழ்களிலே மொழிபெயர்ப்பு

முயற்சிகளும் தலைகாட்டியுள்ளன. 'கோல்ஸ்மித்' என்பாரின் பட்டு வியாபாரி (கு.த.மூர்த்தி) என்ற நெடுங்கதை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு முயற்சியாகின்றது.( எனினும்; கட்டுரை என்ற தலைப்பிலே இது வெளியாகியுள்ளதன் காரணம் புரியவில்லை.)

பாரதியின் அட்டை பெரியார் படங்களைத் தாங்கி வந்திருக்கக் கூடும். ஏனெனில் என்பார்வைக் கெட்டிய இதழ்கள் இரண்டில் ஒன்றில் சுவாமி விபுலாநந்தரது படமும் மற்றொன்றில் பாரதியார் படமும் இடம் பெற்றுள்ளன. (ஏனைய இதழ்கள் அட்டைப் படமின்றிக் கிடைத்தவை.)

விளம்பரங்களும் 'பாரதி'யில் காணப்படுகின்றன. இவற்றுள் ஒரு சில புதுமையானவை. தையற்கலை நிலையம் ஒன்று பற்றிய விளம்பரம் 'மதிப்புரை' என்ற பெயரில் இடம் பெறுகிறது! அதற்கு உரியவரான தையற் கலைஞரது நன்றி தெரிவிக்கும் வாழ்த்து 'ஜெய்ஹிந்த்' என்று ஆரம்பிக்கின்றது!

மேலும், சமகாலத்தில் வந்து முல்லையிலிருந்து 'வெற்றிமணி' என்ற சஞ்சிகையும் சைனாபேயிலிருந்து 'சேவைமணி' என்ற சஞ்சிகையும் (இச்சஞ்சிகையின் அட்டையில் அறிஞர் அண்ணா) மட்டக்களப்பிலிருந்து 'லங்காமுரசு' என்ற சஞ்சிகையும் வெளிவருவது பற்றி 'பாரதி'யில் இடம் பெற்றுள்ள குறிப்புக்கள் ஈழச் சஞ்சிகைகள் பற்றிய ஆய்வாளரது கவனத்தை வேண்டி நிற்கின்றன.

அன்றைய சூழலில் மண்டூரிலிருந்து பல்வேறு சிரமங்கள் மத்தியில் பாரதி வெளிவந்தமைக்கு முற்குறிப்பிட்ட ஆசிரியர் குழுவினர் மட்டுமே பொறுப்பானவரல்லர். பண்டிதர் சந்திரசேகரம் (பின்நாள் பேராசிரியர்) கு.பெரியதம்பிப்பிள்ளை(பின்நாள் புலவர்மணி) எஸ்.டி.சிவநாயகம், செ.இராசதுரை, இராசமாணிக்கம் (பின்நாள் எம்.பி.) வி.சி.கந்தையா (பின்நாள் வித்துவான்) எம்.எல்.பாலு முதலான பலரது ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் போதியளவு கிடைத்துள்ளமையும் அதற்குக் காரணம் என்று அறிய முடிகின்றது. (நேரடித் தகவல்)

'பாரதி' சஞ்சிகை பற்றிய ஆய்வு ஏற்படுத்திய சிக்கலொன்றுண்டு. (இது பழைய ஏனைய சஞ்சிகைகளுக்கும் ஏற்புடையது) சொந்தப் பெயரிலோ புனைபெயரிலோ எழுதியோருள் பலரை இன்று இனங்காண முடியாதுள்ளமையே அதுவாம்.

ஆயினும் என்ன? ஏனைய சஞ்சிகைகள் போன்று 'பாரதி'யும் நீண்ட ஆயுள் கொண்டிருக்கவில்லை. எனினும் இதற்கு பொருளாதார நெருக்கடி முக்கிய காரணமென்று கூறமுடியவில்லை. மட்டக்களப்பில் அச்சக வசதியில்லாமை 'பாரதி' எதிர் கொண்ட முக்கியதொரு பிரச்சினையாகின்றது. தவிர 'பாரதி' ஆசிரியர் குழாத்தினர் பாடசாலை ஆசிரியராக இருந்தமை காரணமாக அவ்வப்போது இடமாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமை அவர்கள் தொடர்ந்தியங்க பிறிதொரு தடையாகின்றது.(நேரடித் தகவல்)

ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் 'பாரதி'க்குரிய இடம் யாது? அதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளா,? கவிதைகளா? ஆசிரியர் பக்கங்களா? அன்றேல் மட்டக்களப்பு பிரதேசச் சஞ்சிகை வளர்ச்சிக்கு பாரதி ஏற்றதொரு தடமமைத்துக் கொடுத்தமையா? 'பாரதி'யின் முழு இதழ்களும் கைக்கெட்டும் போதுதான் இவற்றிற்குத் தகுந்த பதில் கிடைக்கலாம்!

(பி.கு: 'பாரதி' சஞ்சிகையின் சில இதழ்களைத் தந்துதவிய பத்திரிகை நிருபர் மண்டூர் இ.பாக்கிராசா திருமதி அருள்.செல்வநாயகம், விரிவுரையாளர் மண்டூர் எஸ். சந்திரசேகரன், மிகச் சிரமங்களூடே சஞ்சிகை பற்றிய அனுபவங்களை நினைவு கூர்ந்த 'பாரதி' ஆசிரியர் குழுவினரான கு.த.மூர்த்தி, க.செபரத்தினம் ஆகியோர் இக்கட்டுரையாளரின் நன்றிக்குரியவர்கள்)

# பழைய ஆத்திசூடியும், புதிய ஆத்திசூடியும் ஒரு ஒப்பு நோக்கு.

செல்வன். கு. கமலசேகரன்
விடுகை வருடம்.

இலக்கிய வரலாற்றுப் போக்கிலே காலத்துக்குக் காலம் ஆங்காங்கே மக்களுக்குத் தேவையான ஒழுக்க விதிமுறைகளையும், நீதி நெறிகளையும் எடுத்துக் கூறும் இலக்கியங்கள் பல புலவர்களால் படைக்கப்பட்டு வந்துள்ளன. இவ்வகையில் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த பெண் புலவரான ஒளவையாரால் எழுதப் பட்டதே ஆத்திசூடி என்னும் நீதி நூலாகும். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் நவயுக நாயகனுமான புதுமைக் கவிஞன் பாரதியும் "புதிய ஆத்திசூடி" என்னும் பெயரில் எமக்களித்த இந்த நீதி நூலும் ஒரே கருவினைக் கொண்டமைந்த போதிலும் இவ்விரு நீதி நூல்களும் சொல்லப்பட்ட விதங்களில் வேறுபட்டு நிற்கின்றன. இவ்வடிப்படை வேறுபாடுகள் பற்றியும் அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள் பற்றியும் சிறிது ஒப்பிட்டு ஆராய்வோம்.

நூற்றி எட்டு நீதிக் கருத்துக்கள் கூறப்படும் ஒளவையின் ஆத்திசூடியானது ஐம்பது விடயங்களைச் செய்யக்கூடிய உடன்பாடாகவும் ஐம்பத்தெட்டு விடயங்களைச் செய்யக்கூடாத எதிர்மறையாகவும் எடுத்துரைக்கின்றது. ஆனால் பாரதியின் புதிய ஆத்திசூடியில் நூற்றுப்பத்து நீதிக்கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் எண்பத்தேழு கருத்துக்கள் உடன்பாடானவையாகவும், இருபத்து மூன்று கருத்துக்கள் எதிர்மறையாக இடித்துரைப்பவையாகவும் காணப்படுகின்றன. இருவரது பாடல்களுமே இன்னதைச் செய்யாதே என்று கூறும் வாக்கிய அமைவில் ஒத்துக் காணப்படுகின்றன. ஆனால் அமைப்படிப்படையில் பல்வேறு வேறுபாடுகளும் நிறைந்துள்ளன.

முதலில் கடவுள் வாழ்த்தை எடுத்து நோக்கினால் இருவரது கருத்திலும், செய்யுள் அமைப்பிலும் வேறுபாடு இருப்பது புலப்படுகின்றது.

"ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே."

என்று இரண்டு அடிகளைக் கொண்டதாக ஒளவையின் இக்கடவுள் வாழ்த்தானது "திருவாத்தி மாலையை அணிந்தவனான,சிவன் விரும்பிய விநாயக் கடவுளை நாம் போற்றித் துதித்து வணங்குவோம்" என்ற பொருளில் அமைய பாரதியின் புதிய ஆத்திசூடியின் கடவுள் வாழ்த்துப் பாடலானது பின்வருமாறு அமைந்து காணப்படுகிறது.

"ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்திருக்கும் முழுவெண்மேனியான்
கருநிறம் கொண்டு பாற்கடல் மிசைகிடப்போன்
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
இயேசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவத்தாலே உணர்ந்து உணராது
பலவகை பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனில் ஒளிவுறும் அறிவாம்"

என்று பல அடிகளைக் கொண்டதாவும் இருளாகிய அறியாமையைப் போக்கி ஒளியைத் தருவது அறிவு. எனவே ஒளியுறுகின்ற நல்லறிவு நம் துன்பங்களைப் போக்கிவிடும். எனவே அந்த ஞானமாகிய ஒளியின்

மீது ஏற்றி தனது நீதி வாக்கியங்களைப் படைக்க முற்படுகின்றான் பாரதி. மேலும் ஔவை ஒரு சமயம் சார்ந்தும், அச்சமுதாயத்தை நோக்கில் கொண்டும் கூற, பாரதியோ எம்மதமும் ஒன்றே என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைகின்றான். இவ்வகையில் அவன் சொல்லும் பொருள் புதிது. சொல்லும் விதமும் புதிதல்லவா? எனவேதான் பாரதி ஒரு புதுக்கவிஞனாகிவிடுகின்றான்.

மேலும் பாரதி ஔவை இப்படிச் செய்யாதே என்று எதிர்மறையில் கூறியவற்றை இன்னவாறு செய் என்று ஆணித்தரமாக இடித்துரைப்பதைக் காணலாம். உதாரணமாக, "சோம்பித் திரியேல்" என்று ஔவை கூற "நாளெல்லாம் வினைசெய்" என்று வலியுறுத்து கின்றான். "சொற்சோர்வு படேல்" என்று ஔவை சொன்னதற்குப் பிரதியீடாக "சொல்வது தெளிந்து சொல்" என்றான் பாரதி. இன்னும் "பிழைபடச் சொல்லேல்" என்று ஔவை கூறியதற்கு "மெல்லத் தெளிந்து சொல்" என்றுரைத்தான் பாரதி. இவ்வாறு இக்கருத்துக்களில் இருவருக்குமிடையே உடன்பாடு நிலவுவதை நாம் காணமுடிகின்றது.

உடன்பாடான நிலைமட்டுமன்றி முற்றிலும் எதிர்மாறான கருத்துக்களிலும் சில நீதி வாக்கியங்களை இருவரும் தந்துள்ளனர். உதாரணமாக, "முனை முகத்து நில்லேல்" என்று ஔவை கூறியதை "முனையிலே முகத்து நில்" என்று எதிர்த்தான் பாரதி. "போர்த் தொழில் புரியேல்" என்று ஔவை உரைத்ததை, "போர்த் தொழில் பழகு" என்று மறுத்தான் பாரதி. "வெட்டெனப் பேசேல்" என்ற ஔவை பகர்ந்ததை "வெடிப்புறப்பேசு" என்று சாற்றினான் பாரதி. "தையல் சொல் கேளேல்" எனப் பெண்ணைப் புறக்கணித்து ஔவை அறைந்ததை, "தையலை உயர்வு செய்" என்று ஏற்றிவைத்தான் பாரதி. "மீதூண் விரும்பேல்" என ஔவை கூற "ஊண் மிக விரும்பு" என்றான் பாரதி. "தொன்மை மறவேல்" என்று ஔவை கூற "தொன்மைக்கு அஞ்சேல்" என்கின்றான் பாரதி. இவ்வாறான சில எதிரெதிரான கருத்துக்களை நாம் நோக்கும் போது நவீன காலச் சிந்தனைக்கு ஏற்ற நவீன கருத்துக்களை தற்காலத்துக்கு ஏற்புடைய வகையில் தருவதையே பாரதி நோக்காகக் கொண்டிருந் தமை புலனாகின்றது. எனவேதான் பாரதி ஒரு நவயுக புருசனாகின்றான்.

அச்சந்தவிர், கீழோர்க்கு அஞ்சேல், பேய்களுக்கு அஞ்சேல், தீயோருக்கு அஞ்சேல் என்று அச்சத்தை யொட்டியும், ஆண்மை தவறேல், தோல்வியில் கலங்கேல், மிடிமையில் அழிந்திடேல் என்று ஊக்கப்படுத்தியும், கேட்டிலன் துணிந்து நில், குன்றென நிமிர்ந்து நில், கொடுமையை எதிர்த்து நில், வீரியம் பெருக்கு, ஏறுபோல் நட என்று பலவாறாக எழுச்சி யூட்டியும், வையத்துக்கே தலைமைகொள் என்று தலைமைக் குரல் கொடுக்கின்றான் பாரதி. ஆனால் இதுபோன்ற சிறப்பான எழுச்சிக் கருத்துக்கள் ஔவையாரின் ஆத்திசூடியில் அமையவில்லை. இதற்கு ஒருவேளை ஔவையின் காலச் சூழலுக்கு இவை தேவையற்ற ஒன்றாகவும் அமைந்திருக்கலாம். ஆனால் பாரதி வாழ்ந்த காலச் சூழலில் எழுச்சிக் கருத்துக்களின் தேவை அதிகம் காணப்பட்டது. சமூகத்துக்கு மட்டுமன்றி தனி மனித வாழ்விலும் அவை பங்கேற்கத் தொடங்கிய காலம் பாரதியின் காலமாகும். மேலும் புதியன விரும்பு, வேதம் புதுமைசெய், பணத்தினைப் பெருக்கு, தேசத்தைக் காத்தல் செய், கிளை பல தாங்கேல், ஊண் மிக விரும்பு என்றெல்லாம் பாரதி கூற முற்பட்டதும் அப்போது காணப்பட்ட சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடனே யாகும் என்று கூறுதல் மிகவும் பொருந்தும்.

மேலும், மூர்க்கரோடு இணங்கேல், மேன்மக்கள் சொற்கேள் போன்ற ஔவையின் அமைதியான பொது நீதி நெறிகளை ஊடறுத்துக் கொண்டு தொன்மைக்கு அஞ்சேல், புதியன விரும்பு, சோதிடம் தனை இகழ், தீயோருக்கு அஞ்சேல், கொடுமையை எதிர்த்து நில், கோல் கைக் கொண்டு வாழ், ரௌத்திரம் பழகு, நையப்புடை என்றெல்லாம் புதுமைமிக்க நீதி நெறிகளை நிலை நாட்டினான் பாரதி.

இவ்வாறாக இரு ஆத்திசூடிகளும் வேறுபாடுகளையும் கொண்டுள்ளன. இதற்குக் காரணம் ஔவை வாழ்ந்த சூழலுக்கு ஏற்ற கருத்துக்களை அவர் கூற பாரதி தனது காலத்துக் கொப்பான வகையில் கூற முற்பட்டமையேயாகும். ஆயினும் இவையிரண்டுமே ஒரே நாட்டில் ஒரே சமுதாய மக்களுக்காகவே எழுந்த நூல்கள். இவை எழுந்த காலகட்டங்களே இவற்றின் அமைப்பைத் தீர்மானித்தன எனலாம். முன்னையதில் கூறப்பட்ட சில நீதிக் கருத்துக்கள் பின்னைய நூலில் புதியனவாக மாற்றப்பட வேண்டியிருந்தது. மேலும் முன்னையதில் கூறப்பட்ட சில கருத்துக்களை நேர்நின்று எதிர்த்துத் தகர்ப்பது போன்ற உறுதி பாரதியின் குரலில் காணப்படுகின்றது.

இவ்விரு நூல்களின் பெயர்களும் ஆத்திசூடி என்றே அமைந்துள்ளன. ஔவையார் தனது நூலுக்கு வேறு பெயரிட்டிருக்கலாம் எனவும், நூலின் தொடக்கத்தில் வரும் பாயிரச் சொல்லை வைத்தே மக்கள் வழங்கிவர அதுவே பின் நூலுக்குப்

பெயராகியிருக்கலாம் என்றும் சிலர் குறிப்பிடுவர். கொன்றைவேந்தன், வாக்குண்டாம் என்பன போன்ற நூல்கள் முதல் தொடரால் பெயர் பெற்றிருப்பினும் வாக்குண்டாம் எனும் நூலுக்கு "மூதுரை"என்ற வேறு பெயர் இருப்பது அக்கருத்தை வலியுறுத்துகின்றது. ஔவையாரின் ஆத்திசூடியைப் போன்றதே தமது நூலும் என்ற கருத்தை வெளிப்படுத்தவே பாரதியும் "ஆத்திசூடி" என்ற பெயரோடு ஒரு நூல் செய்ய முனைந்தமைக்கு ஒரு காரணமாகலாம். ஏற்கனவே ஆத்திசூடி எனும் பெயரில் இருந்து வரும் நூல் மக்களுக்குச் சரியான எழுச்சியைத் தந்து நல்வழியைக் காட்டத் தவறிவிட்டது. என்ற நோக்கிலே புதிய கருத்துக்களை புதிய நடையில் படைத்து "புதியஆத்தி சூடி" மூலம் மக்கள் முன் வைத்தார் பாரதியார். இதை அவர் ஒரு காலத்தின் தேவையாகவே உணர்ந்து செய்தார் எனக் கருத இடமுண்டு.எனவே நாமும் காலத்துக்குக் தகுந்த கருத்துக்களை அவற்றிலிருந்து பெற்று நீதி நெறி நின்று வாழ்ந்து சிறப்புற்றுத் திகழ்வோமாக.


**உசாத்துணை நூல்கள்:**

1. பழைய ஆத்திசூடி

"ஔவையார் அருளிய நீதி நூல்கள்" (உரையுடன்)

காந்தளக வெளியீடு

(யாழ்ப்பாணம்)

2. புதிய ஆத்தி சூடி

"பாரதியார் கவிதைகள்"

பூம்புகார் பதிப்பகம்

ஏழாம் பதிப்பு -1990.


# கலை வளர்க்கும் நாடே!


க.பிறேமளா
விடுகைவருடம்


மீன் பாடும் தேனிசையில்
மிதந்திட நல்வாவியுண்டு
கண்போல காத்துவரும்
காவியங்கள் பலவுண்டு
பண்ணோடு பாடிமகிழும்
பயின்பெறு கூத்துண்டு
முன்னவர் வளர்த்த
முத்தமிழும் இங்குண்டு

செந்நெல்லும் இங்கு
செருக்குடனே வளரும்
மந்தைகளும் மகிழ்ந்தே
மாருத்தில் அலையும்
விந்தைகள் படைத்திடும்
விதவிதக் கலையும்
சந்தி தோறும் தினம்
தவாறது கேட்கும்

புள்(ல்) கூட நாளும்
பூரித்து மகிழ்ந்திடும்
பல்லின மக்களும் சென்றாய்
பயன் பெற்றே வாழ்ந்தே!
சொல்லிலும் செந்தமிழ்
சுவையூறும் சேர்ந்தே!
களப்பூறும் எங்கள்
கலைவளர்க்கும் நாடே.

# கிறித்தவர்களும் புனித குர்ஆனும்

**கலாநிதி ஹென்றி விக்றர்**
**(முதுநிலை விரிவுரையாளர்)**

புனித குர்ஆன் முஸ்லீம்களின் திருநூல். ஆயினும் இத்திருநூல் கிறிஸ்தவர்களையும் கவர்ந்துள்ளது. இங்கிலாந்து திருச்சபையின் ஆயர்களுள் (BISHOP) ஒருவரான KENNETH CRAGG (1913 ) இஸ்லாம் குறித்த ஆய்வுகள் செய்த போது இப்புனித நூலால் கவரப்பட்டுள்ளமையை நாம் அவதானிக்கமுடியும். குறிக்கப்பட்டவொரு சமயத்தவர் மற்றுமொரு சமய சமூகத்தவரின் திருநூலைப் படிப்பதால் இரண்டு சமய சமூகத்தவர்களுக்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து அவர்தம் படைப்புகளில் வலியுறுத்தியுள்ளார். CRAGG ன் இதோடிணைந்த சிந்தனைகள் சிலவற்றை தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்காகும். மேலும், ஒரு குறிக்கப்பட்ட சமயத்தினையும், அதன் வழி நடப்போரையும் புரிந்து கொள்ள அச்சமயத்தின் புனித நூல்கள் துணை நிற்கின்றன. பல்வேறு சமயங்களுக்கிடையே "உரையாடல்" ஏற்படுத்தப்படவும் இத்தகைய தேடுதல்கள் ஒரு உந்து சக்தியாக அமையலாம். இவ்வுண்மைகளும் இவ்வாக்கத்திலிருந்து உறுதியாகலாம்.

1956ல் THE MUSLIM WORD (இதற்குப் பின்னர் MW) என்ற சஞ்சிகைக்கு "குர்ஆனும் கிறித்தவ வாசகனும்" என்ற தலைப்பில் CRAGG ஒரு கட்டுரை எழுதினார். இக்கட்டுரையில், இஸ்லாமை அதன் புனித நூலுக்கூடாகத் தாம் அறிந்து கொள்ள முயற்சிப்பதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். முதலாவது இத்தகைய முயற்சி தன்னுடைய கிறித்தவ நம்பிக்கையை இன்னும் பலப்படுத்தும் எனக் கூறியுள்ளார். இவரைப் பொறுத்த மட்டில் இஸ்லாம் குறித்த தம்முடைய ஆய்வு தாம் தொடர்ந்து கிறித்தவனாக வாழ "இஸ்லாமிய காரணங்களைத் தருகின்றது. அது போன்று குர்ஆன் குர்ஆனின் விளக்கங்கள் மூலம் கிறித்தவ நம்பிக்கைகளை உறுதிசெய்கிறதென நம்புகின்றார். ஆகவே கிறித்தவர்கள் குர்ஆன் படிப்பதை இக்கிறித்தவ ஆயர் ஊக்குவிக்கிறார். இவர் கூறுவதாவது:

We need to be readers who are able and willing to enter into the perception of the Quran and explore their fullest implication and thus to respossess our Christian convictions with a new capacity of interpretation.[ M.W. p.62]

குர்ஆன் கிறித்தவ நம்பிக்கையை இல்லா தொழிக்கும் போறதோன்றினாலும், உண்மையில் அதனை உறுதிப்படுத்தக் கூடிய தொன்றென CRAGG கருதினார்.

இரண்டாவதாக, குர் ஆனும் அதன் உள்ளடக்கமும் இஸ்லாமின் தாற்பரியத்தை தெளிவுபடுத்தும் வாகனமாக இருப்பது மாத்திரமல்லாமல், முஸ்லீம்களுக்கு கிறித்தவ செய்தியை அறிவிக்க ஓர் நல்ல ஊடகமெனவும் CRAGG வாதிட்டார். அப்படியாயன் கிறித்தவ செய்தியை இஸ்லாமிய உலகுக்கு அறிவிக்க குர்ஆன் பயன்படுத்தப்படலாம் என்பது அவர் நம்பிக்கை.இதனை இவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

[It is possible] to seek in the ruling ideas of the Quran that which may illumine both the meaning of Islam and the relevance of what Christans seek to say to Muslins [M.W.p 63]

ஆயினும் முஸ்லீம்களை மதம் மாற்றும் முனைப்போடு குர்ஆன் பாடங்களை திரிபு செய்யும் கிறித்தவ பணியாளர்களோடு தமக்கு சம்மதமில்லை யெனவும் CRAGG உறுதிடியாடு அறிவித்துள்ளார்.

மேலும், குர்ஆன் 20:10 , 27:7 , 28:29 போன்ற

வாசகங்களை மேற்கோள்காட்டி இப்பகுதிகளில் மூஸா நபி (மோசே, மோயிசன்) குறித்து பேசப்படுவதனை தமது குர்ஆன் குறித்த தேடுதலுக்கு ஒப்பிடுகிறார். இப்பகுதிகளில் மோசே எரிகிற முட்புதரைக் கண்டதும் தம்வீட்டாரிடம்:

> 'நீங்கள் (சிறிது) தாமதித்திருங்கள்; நிச்சயமாக நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன்; நான் (அங்கு சென்று நாம் செல்ல வேண்டிய ) பாதையைப் பற்றிய தொரு தகவலை உங்களுக்குக் கொண்டு வரக்கூடும்; அல்லது நீங்கள் குளிர் காய்வதற்கேனும் ஓர் எரிகொள்ளியைக் கொண்டு வருகிறேன்'' என்று கூறினார், (குர் ஆன் 28:29)

அப்படியாயின் இவரது குர்ஆன் சார்ந்த ஆய்வில் KENNETH CRAGG தமக்கு ஒரு"தனல்" குர்ஆனின் நெருப்பிலிருந்து கிடைக்குமாவென தேடுகிறார்; அல்லது குர்ஆன் தம்வாழ்விற்கு ''ஒளிதர''வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

மற்றுமொரு இடத்தில் தமது இம்முயற்சியை அத்தேனே பட்டணத்தில் பவுல் அங்குள்ள சமய பீடங்களை அணுகியதற்கும் (திருத்தூதர் பணி 17) யோவான் கிரேக்க மெய்யில் பாரம்பரியத்தின் லோகொஸ் - ஞானத்தைக் காண்பதற்கும் (யோவான்1) ஒப்பிடலாம் எனக் கூறுகிறார். ஆதலால் தமது இவ்வணுகு முறை "உண்மையானதும் ஆக்க பூர்வமானதும், பிழையற்றதும்" எனச் செப்புகின்றார். இதுபற்றி அவருடைய மொழிநடையில்

> ..... that it is indeed an open hearted effort to understand the meaning of Christianity in the light of the fullest reckoning with the ruling themes of the Quran. [M.W. p 63]

இத்தகையதோர் திருமறை பொருள்கோள் ஆய்வியல் (HERENEUTICS) கடினமானதா யிருப் பினும் இப் பணியினை மகிழ்ச்சியோடு தொடருமாறு CRAGG கிறித்தவர்களைப் பணிக்கிறார்.

CRAGG ன் இவ்வழைப்பை நாம் கிறித்தவர்களுக்கும் குர்ஆனுக்கும் மட்டுப்படுத்த வேண்டியதில்லை. பன்மறைச் சூழலில் வாழும் அனைவருக்கும் இதுவொரு சவாலாக முடியும். இந்துக்கள் கிறித்தவர்களின் திருநூலையும் அல்லது முஸ்லீம்கள் இந்துக்களின் திருநூல்களையும் இவ்வண்ணமாக அணுகலாம். இத்தகைய முயற்சிகள் தத்தம் மதங்களையும், அயலவர்களின் சமய நெறிகளையும் அறிந்து கொள்ளவும், புரிந்துணர்வு சமய சகிப்பு போன்ற அத்தியாவசியமான விழுமியங்களை எம் சமூகத்தில் வளர்த்து, சமூகத்தில் மலிந்து காணப்படும் முரண்பாடுகளையும், சச்சரவுகளையும் குறைத்துக் கொள்ளவும் உதவும் என்பதனையும் இங்கு குறிப்பிடலாம். இம்முறையை நாம் பண்பாட்டுகளுக் கிடையேயான தொடர்பு ( CROSS CULTURAL COMMUNICATION) எனவும் கருதலாம்.

குர்ஆன் முஸ்லீம்களுக்கு"அடிப்படையான'' இலக்கியம் என்பதனையும் தாம் முஸ்லீம் சமூகத்தைச் சாராதவராதலால் தாம் பிரச்சினைகள் அனர்த்தங்கள் என்பனவற்றைச் சந்திக்க நேரிடும் என்பதனையும் CRAGG நன்றாக அறிந்திருந்தார். இப்பிரச்சனைகளை நான்கு சாராரிடமிருந்து எதிர்பார்த்தார்: (i) ஆர்வமிக்க முஸ்லீம் (ii) பெயரளவில் விசுவாசி, (iii)பொறுமையற்ற வெளியார்,(iv)கரிசனையுள்ள வாசகர் முஸ்லீமல் லாதவர் குர்ஆனைப் படிப்பது சுயாதீன முடிவுகளுக்கு இட்டுச் செல்லுமென ஆர்வமுடைய ஒரு முஸ்லீம் எதிர்க்கலாம். இதேவேளையில் வெளியார் ஒருவர் குர்ஆனில் ஆர்வம் காட்டுவது பெயரளவில் முஸ்லீமாக இருப்பவர் ஒருவருக்கு குழப்பத்தை உண்டு பண்ணலாம். பொறுமையற்ற வெளியாருக்கு இம்முயற்சி அர்த்தமற்றதும் வீணானதுமாகத் தோன்ற இடமுண்டு. முஸ்லீம் சமூகத்தைச் சராத ஆர்வமுள்ள வாசகர் கூட, குர்ஆனைப் புரிந்து கொள்ளத் தேவையான தடங்கள் தம்மிடமில்லாத போது இத்தகைய முயற்சி அதிக பலனைத் தராது எனக் கருத இடமுண்டு. இருப்பினும் மனம்தளராது குர்ஆன் ஆய்வில் CRAGG தம்மை முழுமையாக அமிழ்த்தினார். இதன் விளைவாக எழுந்ததே அவர் எழுதிய TJE EVENT OF THE QURAN (1971), THE MIND OF THE QURAN (1973) ஆகிய நூல்களாகும். இவ்வேளையில் "THE CHRIST OF THE QURAN" என்ற மூன்றாவது நூல் குறித்தும் சிந்தித்தார். ஆயினும் 1985ல் இது JESUS AND THE MUSLIM என்ற தலைப்பில் வெளியானது. இம்மூன்றும் இன்னும் இவரெழுதிய ஏனைய நூல்களும் சமய ஒப்பீட்டியல் மாணவர்களுக்கு பயன் உள்ளது என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

இஸ்லாமிய உலகு குறித்த கிறித்தவ பொறுப்பு பல்வேறு சமய அடியார்களுக்கிடையே உரையாடல் போன்ற கரிசனைகளும் குர்ஆனை அணுகCRAGGக்கு ஊக்கமளிக்கும் ஏனைய காரணிகளாகும். இவை, இவருடைய ஆய்வின் சூழமைவாகவும் காணப்படுகிறது. கிறித்தவ- முஸ்லீம் உரையாடல்களில் ஈடுபடும் ஏனைய கிறித்தவர்கள் கூட பெரும்பாலும் குர்ஆனை மிக உன்னிப்பாக நோக்குகின்றனர். இது போன்ற மற்று மொருவரே WILFRED CANTWELL SMITH

"குர்ஆன் இறை வார்த்தையா?" என வினா எழுப்பும் SMITH இவ்வினாவிற்கு இலகுவான "ஆம்"

அல்லது இலகுவான "இல்லை" என்ற பதில்கள் தர முடியாதென்பதை சுட்டிக் காட்டுகிறார்.

CRAGG ம் இந்நிலையிலே தான் உள்ளார். இலகுவான "ஆம்" அல்லது "இல்லை" என்பதனை நிராகரித்து குர்ஆனின் அடிப்படை எண்ணக் கருக்களை அலசி ஆராய்கிறார். இத்தகையதோர் ஆய்வினையே பாகிஸ்தான் நாட்டு முஸ்லீம் அறிஞர் FAZLUR RAHMAN ம் மேற்கொண்டிருந்தார்.இதன் விளைவே அவருடைய MAJOR THEMES OF THE QURAN (1980) என்ற நூல். இந்நூலில் இவர் CRAGG ன் ஆய்வையும் அவர் முடிவுகளையும் பாராட்டியுள்ளது இங்கு குறிப்பிடப்படவேண்டிய தொன்றாகும்.

குர்ஆனில் திரும்பத் திரும்ப வரும் பதங்களுள் ஒன்றே **ஷர்க்**(SHIRK) அல்லது இறைவனுக்கு இணைவைத்தல் என்பதாகும். CRAGGன் ஆய்வு களிலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது. **ஷர்க்** ன் ஆழமான பொருளை அறிந்து கொள்வதே இவரது ஆர்வம். **ஷர்க்** யை குர்ஆன் நிராகரிக்கும்போது இறைவன் மாத்திரமே உள்ளார் (GOD'S SOLE EXISTENCE) என்பதனையும் இறைவன் மாத்திரமே வழிபாட்டிற்கு பாத்திரமானவர் என்பதையும உறுதிப் படுத்துகின்றது. இறைவன் ஒருவரே. இறைவனுக்கு வெளியே இறைதன்மை இல்லை. இறைவன் மாத்திரமே வழிபடக்கூடியவர். இறைவனிடம் மாத்திரமே நாம் உதவபெறக்கூடும். இறைவனுக்கு புறம்பே எந்தவொரு வல்லமையும் கிடையாது என்பதையும் அதனால், பல கடவுள் வழிபாடு அர்த்தமற்றது, மடமையானது என்பதனையும் குர்ஆன் **ஷர்க்** என்ற அரபு பதத்தைப் பிரயோகித்து திட்டவட்டமாக அறிவித்துள்ளது,

**ஷர்க்** ன் பொருள் இதுவென உறுதியாக நிலைநாட்டிய பின்னர் CRAGG குர்ஆனில் இறைவன் தம் படைப்பாகிய இவ்வுலகிலிருந்து தூர விலகி யுள்ளவரல்ல என வாதிடுகிறார். இறைவன் தம் படைப்பில் மனிதர் ஊடாகவும், இயற்கையாகவும் அல்லது இயற்கை கடந்த (Supernatural) வழிகளிலும் செயற்படுகிறார். குர்ஆன் முழுமையாக இறைவன் தம்படைப்பில் செயற்படுகிறார் என்பதற்கு சாட்சி பகருகின்றது. அதனால் இறைவனின் செயற் பாடுகளை சுட்டிக் காட்டுவதனை **ஷர்க்** எனக் கூற முடியாது என்பது அவருடைய முடிவு.

பின்னர் **ஷர்க்** ன் இந்தப் பொருள் கிறித்தவர் களுக்கு எவ்விதத்தில் பொருத்தமாயுள்ளது என வினவுகிறார். மனிதர் ஊடாகவும், இயற்கையாகவும், இன்னும் இயற்கை கடந்த வழிமுறைகளாலும் இறைவன் இவ்வுலகில் செயற்படுகிறார் என்பதனை குர்ஆன் முழுமையாக ஏற்றுக்கொள்வதால் பொதுவாக இஸ்லாமிய பாரம்பரியம் நிராகரிக்கும் "ஊனுடல் எடுத்தல்" (INCARNATION) - சில சமயங்களில் இது "அவதாரம் எடுத்தல்" எனவும் கூறப்படும் - நடக்க முடியும் என CRAGG வாதிடுகிறார்.

"அனுப்பப்படுதல்" என்ற கோட்பாடு, அதாவது இறைதூதர்கள் மனிதரிடம் அனுப்பப்படுவது, அல்லது இறைத்தூது இறைவனிடமிருந்து இறைத்தூதுவனுக்கு அனுப்பப்படுவது குர்ஆனின் மையக்கருவாக காணப்படுகிறது. இது இஸ்லாமிய இறையியலுக்கு அடித்தளமாகவும் அமைகிறது. ஆதலால் மற்றுமொரு இடத்தில் CRAGG "அனுப்பப்படுதல் (SENTNESS) என்பதன் அடிப்படையில் "ஊனுடல் எடுத்தல்" நடக்கக் கூடியது என விவாதிக்கிறார். ஆயினும், இங்கு "ஊனுடல் எடுத்தல் " என்ற கோட்பாட்டைக் குறித்து அதன் எதிரடையான முறையில் ( incarntion in terms of a non incarnational expressional expression ) கூற முயந்சிக்கின்றார். அதாவது "ஊனுடல் எடுத்தல்" என்ற பதத்தை பயன்படுத்தாமல் இது பற்றிய உண்மையை அறிவிப்பதே CRAGG ன் நோக்காகும்.

சுருங்கக் கூறின் உலகியல் ஊடகங்குளுக் கூடாக இறைவன் செயற்படுகிறார் என்பது குர்ஆனில் தெளிவு. இதனால் "ஊனுடல் எடுத்தல்" நடக்கமுடியாத தொன்றல்ல. இதுவே CRAGG ன் முடிவு. ஆகவே, "சிலை வணக்கத்திற் கெதிராக" குர்ஆன் தொடுக்கும் போரைப் பிரயோகித்து இறைவன் மனிதனுக்கு தம்மை வெளிப்படுத்தவும் அருள்புரியவும் இவ்வுலகில் செயற்படுகிறார் என்ற நம்பிக்கையும் இல்லாதொழிக்க முயற்சிப்பது தவறு என CRAGG சுட்டிக் காட்டுகிறார்.

இறுதியில் அவர் கூறு முயற்சிப்பது முஸ்லீம் களின் புனித குர்ஆன் , கிறித்தவர்களின் திருநூலான விவிலியத்தைப் (BIBLE) இறைவனுக்கும், மனித ருக்கும் மனிதருக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்துகிறது. இதனையேCRAGG ஊனுடல் எடுத்தலின் மறைபொருள் (MYSTERY OF INCARNATION) என விபரிக்கிறார். ஆகவே கிறித்தவர்கள் குர்ஆனை தமது புனித நூலுக்கு எதிரான ஒன்றாக நோக்காது தமது அடிப்படை நம்பிக்கைகளை உறுதி செய்யும் ஒன்றாக பார்த்து பயன் அடையலாம் என்பது CRAGG ன் நம்பிக்கை. இம்முயற்சி இவரை முஸ்லீம்களுடன் ஒரு உரையாடல் உறவிற்குள் இட்டுச் செல்கின்றது. இத்தகைய உறவினை ஏற்படுத்துவதே அவரது நோக்கம். உரையாடல் உறவு முஸ்லீம் களுக்கும் கிறித்தவர் களுக்குமிடையே உருவாக குர்ஆன் (விவிலியம் கூட!) தடையாக இருக்கமாட்டாது என்பது உறுதி. இதுபோன்றே அனைத்து சமய திருநூல்களும் பல்வேறு சமய அடியார்களிடையே நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்படுத்தும் கருவிகளாக மாறலாம்.

# ஈழத்தில் தமிழ் இலக்கியம்

## கி.பி.1621 - கி.பி.1796வரை

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ
விரிவுரையாளர்,(மொழித்துறை)

ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களில், குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆட்சிசெய்த காலப்பகுதிகளில் ஈழத்தில் தமிழ் இலக்கியம் வளர்ந்து வந்துள்ள முறைமையைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்தில் மேனாட்டாட்சியின் செல்வாக்கு போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பிக்கின்ற தெனலாம். இவர்கள் கி.பி.16ம் நூற்றாண்டின் தொடக்க சகாப்தத்திலேயே (1505ல்) ஈழத்திற்கு வந்திருந்தாலும் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியது கி.பி.1621 அளவிலேயே. எனவேதான் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1621 தொடக்கம் ஒல்லாந்தர் அவ்வரசைக் கைப்பற்றிய 1658வரையிலான காலப்பகுதி போர்த்துக்கேயர் காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. அதுபோலவே ஒல்லாந்தர் 1602 இல் ஈழத்திற்கு வந்திருந்தாலும் யாழ்ப்பாண அரசை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றி ஆளத் தொடங்கியது 1658ம் ஆண்டளவே. 1658 இலிருந்து 1796 வரை ( ஆங்கிலேயர் ஆட்சி 1796ல் ஆரம்பிக்கின்றது.) ஒல்லாந்தர் காலம் என ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிற் குறிப்பிடப்படுகின்றது.

'ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இன்னும் தான் ஒரு திட்டவட்டமான கால வகுப்புக் கிடையாது என்றே சொல்லவேண்டும்' என கா.சிவத்தம்பி கூறுவார். அவர் மேனாட்டாட்சியினை மையமாக வைத்தே காலப்பகுப்புகளை விதந் துரைப்பார். கி.பி.1621 வரையிலான பகுதி மேனாட்டாட்சிக்கு முன் எனவும் கி.பி.1948 வரையிலான பகுதி மேனாட்டாட்சிக் காலம் (போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ,ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக் காலம்) எனவும் மேனாட்டாட்சிக்குப்பின் ((அ) 1950-1980; (ஆ)1980க்குப் பின்) எனவும் அப்பகுப்பு முறை அமைகின்றது.

பொதுவாக கி.பி.1621 தொடக்கம் கி.பி.1796 வரையுள்ள காலப்பகுதியுள் போர்த்துக்கேயரும் (1621-1658) ஒல்லாந்தரும் (1658-1796) ஆட்சி செலுத்தியமையால் அவ்வவ் ஆட்சியாளர் பெயராலேயே அவ்வக்காலங்களை அழைக்கும் மரபு உண்டு.

### போர்த்துக்கேயர் காலம் (கி.பி.1621-1658)

போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் கத்தோலிக்க சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் இலக்கியத்திலும் இச்சமயக் கருத்துக்கள் இடம் பெறத்தொடங்கின. ஈழத்தில் இக்குறித்த காலத்தில் எழுந்தனவாகக் கருதப்படும் இலக்கியங்கள் கத்தோலிக்க சமயம் சார்ந்தவையாக உள்ளன. போர்த்துக்கேயர், கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதில் மிக வன்மையான போக்குகளைக் கடைப்பிடித்தமை யாலும், 'சமயப்பொறை' அற்றவர்களாக அவர்கள் காணப்பட்டமையாலும் கத்தோலிக்க சமயம் சார்ந்த நூல்களே ஆதரிக்கப்பட்டிருக்கவேண்டும் எனக் கருதலாம். சைவசமயம் சார்ந்த இலக்கியங்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவை பேணப்படவாய்ப் பற்றனவாகக் கைவிடப்பட்டிருக்கக் கூடும் என்ற

ஊகத்திற்கும் மேற்குறித்தவைகளே காரணிகளாக அமையத்தக்கன. எனவே, தவிர்க்க முடியாதபடி கத்தோலிக்க சமயம் சார்ந்த இலக்கியங்களையே இக்குறித்த காலத்துக்குரிய ஈழத்துத் தமிழ் இலக்கியங்களாகக் கொள்ள வேண்டியிருப்பதுடன் அக்குறித்த கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிவதற்கு உதவும் மூலங்களாகவும் அவற்றைக் கொள்ள வேண்டிய நிலையும் உண்டு.

பள்ளு, அம்மானை ஆகிய இலக்கிய வகைகள் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. பொதுவான தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சமகாலத்தில் இத்தகைய வடிவங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பள்ளு:

தமிழிலுள்ள பிரபந்த வகைகளுள் பள்ளு என்பதும் ஒன்றாகும். மருத நிலத்து உழவர் வாழ்க்கையும் பாட்டுடைத் தலைவரின் புகழும் சிறப்பித்துக் கூறப்படும் இப்பிரபந்தத்தில் பண்ணைக்காரன், பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகிய கதாபாத்திரங்களூடாக நிகழ்ச்சிகள் அமைகின்றன. பள்ளன், மூத்தபள்ளி ஆகியோரின் நாடே பாட்டுடைத்தலைவரின் நாடாக அமையும். இளையபள்ளி வேற்று நாட்டவளாகச் சித்திரிக்கப்படுவாள். இசைப்பா வடிவங்களையும் நாடகபாணியிலான அமைப்பையும் இவை கொண்டிருப்பன.

### (அ) ஞானப்பள்ளு:

'வேதப்பள்ளு' எனவும் அழைக்கப்படும் ஞானப்பள்ளு, இயேசுக்கிறிஸ்துவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. கத்தோலிக்க சமயக் கருத்துகள் கூறப்படுகின்றன. இந்நூலின் ஆசிரியர் பற்றி தெளிவான கருத்துக்கள் இல்லை. எனினும் இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதும் கத்தோலிக்க மதத்தினர் என்பதும் நூலின் அகச் சான்றுகளால் வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்நூல் 1642ல் எழுந்திருக்க வேண்டுமென சுவாமி ஞானப்பிரகாசர் கூறுவார். 257 செய்யுள்கள் இதிலுள்ளன. மூத்தபள்ளி, இளையபள்ளி , பண்ணைக்காரன், பள்ளன் ஆகிய கதாபாத்திரங்களைக் கொண்டு விளங்கும் இப்பள்ளு ஏனைய பள்ளுகளிலிருந்து ஓரளவு வேறுபட்டுச் செல்வது அவதானிக்கத் தக்கது.

பொதுவாகப் பள்ளுப் பிரபந்தத்தில் மூத்தபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் ஆகிய மூவரும் ஒரு நாட்டினராகவும்; இளையபள்ளி மட்டும் வேற்று நாட்டவளாகவும் சித்திரிக்கப்படுவதும் பண்ணைக்காரன் அவலெட்சணமாகப் படைக்கப்படுவதும் வழக்கமாகும். ஞானப்பள்ளு இவ்வழக்கங்களுக்குமாறாய் உள்ளது. இளைய பள்ளியும் பண்ணைக்காரனும் உரோமா புரியையும், பள்ளனும் மூத்தபள்ளியும் ஜெருசலேமையும் சேர்ந்தவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். பண்ணைக் காரன் மதகுருவுக்குரிய தன்மைகளை ஒத்தவனாகச் சித்திரிக்கப்படுவதையும் அவலட்சண தோற்றம் உடையவனாக அவன் குறிப்பிடப்படாதமையையும் நோக்கலாம்.

> "இடையதனிற் கயிறுகட்டி இந்திரியங்களொடுக்கி
> எரிகின்ற தீபமதை யிருகரத்திலேந்தி
> பண்ணைக்காரன்வந்து தோற்றினானே" (114)

என ஞானப்பள்ளில் வரும் பண்ணைக்காரன் சமய ஒழுக்கங்களுக்கேற்ப சித்திரிக்கப்படுவதனைக் காணலாம்.

> "சுற்றித் திரித்த பழு தைப்புரிபோல் வாகும் மிக்க
> தொந்தி வயி றும்வளையற் காலினழகும்
> வற்றிப்போன வாரணம்போல் மார்பினழகும் சுட்ட
> வட்டப் பானை போலுள்ள மொட்டத் தலையழகும்
> ...........................
> தனிப் பண்ணைக்காரனாரும் தோற்றினாரே. (51)

என கதிரைமலைப் பள்ளில் வரும் பண்ணைக்காரன் பற்றிய சித்திரிப்புடன் ஒப்பிட்டு நோக்க அவ்வேறுபாடு தெள்ளிதின் புலனாகும். இளையபள்ளி ஏனைய பள்ளுகளில் போன்று அல்லாமல் பக்தியுள்ளவளாகக் கூறப்பட்டுள்ளாள்.

இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக சமயக் கருத்துகள் பிரசாரநோக்கில் விளக்கப்படுவதனால் பள்ளுப் பிரபந்தத்துக்குரிய இலக்கிய சிறப்பினை ஞானப்பள்ளில் பெரும்பாலும் காணமுடியாதுள்ளதாக ஆய்வாளர் சிலர் குறிப்பிடுவர்.

## அம்மானை:

தமிழில் முதலில் சிலப்பதிகாரத்தில் 'அம்மானை' என்ற பாவகை குறிப்பிடப்படுவதாகவும், பின்னர் கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலியவற்றிலும் பயன்படுத்தப்பட்டு சோழர் காலத்தில் தனிப் பிரபந்த அந்தஸ்து பெற்றதென்றும் கூறப்படுகிறது.

### (அ) அர்ச்.யாகப்பர் அம்மானை:

தெல்லிப்பளை பேதுருப்புலவரால் 1647ல் இயற்றப்பட்ட அர்ச்.யாகப்பர் அம்மானை

சந்தியாகுமாயோர் அம்மானை எனவும் வழங்கப்படும். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுள் யாகப்பர் என்ற பெயருடைய இருவர் இருந்தனர். அவர்களுள் பெரியவர் என அழைக்கப்பட்டவரே (Major- மாயோர் என்பதன் பொருள்) இந்நூலின் பாட்டுடைத் தலைவர்.

கிளாலி எனுமிடத்தில் இப்புனிதர் பெயரில் ஆலயம் உள்ளது. மேடை அமைக்கப்பட்டிருந்தமை இவ்வாம்மானை மக்கள் மத்தியில் பாடப்பட்டமைக்கு சான்றாய் அமையும் எனவும் கூறப்படுகிறது.

"இலங்காபுரியிருக்கும் யாழ்ப்பாண ராச்சியத்தில்

.................................

ஆரியர் கோத்திரத்தோன் அன்பு நெறி நீதியுள்ளோன்
சீரிய பேதுரென்போன்....

..........................................

சுவாங்கறுவால்லூயி சென்னும் தூயோனுரைப்படிக்கு
ஆண்டாயிரமு மறுநூறும் மாறேழும்
மீண்டு மோரஞ்சும் விளங்கவே சென்றவந்நாள்'

என்னும் செய்யுள் வரிகள் நூலின் ஆசிரியர்( பேதுரு) பாடுவித்தவர் (சுவாங்கறுவால்லூயிஸ்) காலம் (1667) என்னும் செய்திகளைத் தருகின்றன.

புனித யாகப்பரின் வரலாற்றுடன் புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளும் பாரம்பரியக் கதைகளும் இணைத்துக் கூறப்படுகின்றன. இவர் (St.James) புரிந்த அற்புதச் செயல் வருணிக்கப்படுகிறது. அதாவது இஸ்பானியருக்கும் மூர்சாதியினருக்கும் இடையில் நடந்த பாரிய யுத்தத்தில் இவர் வெண்குதிரை வீரராகத் தோன்றி மூர் சாதியினரை முறியடித்தமை கூறப் படுகிறது. நூலின் முற்பகுதியிலும் இறுதிப்பகுதி யிலும் கிளாலியிலுள்ள அக்கோயிலின் வரலாறு கூறப்படுகிறது. நாட்டு, நகர வருணனைகளுமுள்ளன.

இஸ்பெயின் நாட்டு நகரை வருணிக்கும் போது தமிழ் நாட்டுச் சம்பவங்களையும், காட்சிகளையும் புலவர் வருணிப்பதைக் காணலாம். கலிலேயா நகர வருணனையில் புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் புகுத்தப்பட்டுள்ளன.

(உ- ம் 'ஐந்து அப்பம் கொண்டு ஐயாயிரம் பேருக்கு பேசன மீந்த நகர்')

## ஒல்லாந்தர் காலம் (1658-1796)

ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் பரப்பப்பட்டது.எனினும் போர்த்துக்கேயரைப் போல சமய நடவடிக்கைகளின் பொருட்டு ஏனைய மதத்தினரைத் துன்புறுத்தும் போக்கு இவர்களிடம் காணப்படாமையால் சைவ சமயம் சார்ந்த இலக்கியங்களும் இக்காலத்தில் பெருவாரியாக எழுந்தன.இக்காலத்தில் புராணங்களும் மற்றும் சிற்றிலக்கிய வடிவங்களும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டமையைக் காணலாம். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்த சோதிடம் மற்றும் வைத்தியம் சம்பந்தமான நூல்களும் எழுந்தன. பள்ளு, அந்தாதி, தூது, காவியம், ஊஞ்சல், துதி, காதல் ஆகிய வடிவங்கள் சமயக்கருத்துக்களைக் கூறுவதற்காகப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன.

## பள்ளு

### (அ) பறாளை விநாயகர் பள்ளு:

நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் (1716-1780) இயற்றப்பட்ட இப்பள்ளு சுழிபுரத்திலுள்ள பறாளை எனும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. பள்ளன், மூத்தபள்ளி, பண்ணைக்காரன் ஆகிய மூவரும் ஈழநாட்டவராகவும் இளையபள்ளி சோழநாட்டினளாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். பள்ளியர் மூலம் இவ்விரு நாடுகளும் புகழப்படுகின்றன.

பண்ணைக்காரன்
"மாறுகண்ணும் சோகிப் பாகிற் பல்லினழகும்
சீறுசளியால் பெருத்த துள்ளு நாசி.....
முட்டிக் கால்....."

உடையவனென அருவருக்கத்தக்க அவலட் சணமுடைய தன்மையில் சித்திரிக்கப்படுவதைக் காணலாம். 126 செய்யுள்களை உடைய இப்பள்ளு சிந்து,வெண்பா, கலிப்பா வகைகளால் அமைந்தது.

### (ஆ) தண்டிகைக் கனகராயன் பள்ளு:

மாவை சின்னக்குட்டிப் புலவரால் பாடப்பட்ட இப்பள்ளின் காலம் கி.பி.18ம் நூற்றாண்டு ஆகும். பாட்டுடைத் தலைவன் தெல்லிப்பழை தண்டிகைக் கனகராய முதலியார், வடகாரை, தென்காரை ஆகிய பிரதேசங்களின் வளம் பள்ளியரால் கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் பாட்டுடைத் தலைவராகக் கடவுளரே இருந்தனர்.(உ ம் கதிரை மலைப்பள்ளு - முருகன், பறாளை விநாயகர் பள்ளு - விநாயகர்) தண்டிகைக் கனகராயன் பள்ளு உலகில் வாழும் மானிடன் ஒருவரைத் (அவர் சமூகத்தில் உயர் மதிப்புப் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது) தலைவராக்

கொண்டது.

### அந்தாதி:

யாப்பு அமைப்பினாலே பெயர் பெற்ற இலக்கியமாகக் கருதப்படுகின்ற அந்தாதி என்னும் இலக்கியம், கடவுளரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவர்தம் புகழை விளக்குவதாகவே முன்னர் அமையப் பெற்றிருந்தது. ஈழத்தில் கி.பி.18ம் நூற்றாண்டு வரை இவ்வடிவம் தோன்றவில்லை எனக் கூறப்படுகிறது. தலச்சிறப்புகளும், மூர்த்திமகிமையும் அவற்றைக் குறிப்பிடும் புராணக் கதைகளின் குறிப்புகளும் இவற்றில் முக்கியமாக இடம்பெறுகின்றன.

### (அ) புலியூரந்தாதி:

சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் போற்றிப் பாடுவது. கடவுள் வாழ்த்து நீங்கலாக 100கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களைக் கொண்டது.இதன் ஆசிரியர் மயில்வாகனப்புலவர். இதில் வரும் செய்யுள்கள் பல, அகப்பொருட் துறை தழுவியன வாகக் காணப்படுவதை அவதானிக்கலாம் . இவ்வந்தாதி கி.பி.18ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 19ம் நூற்றாண்டின் முற்கூறில் இயற்றப்பட்டிருக்கலா மென்பர். மயில்வாகனப் புலவரால் இயற்றப்பட்ட ஏனைய நூல்கள் (யாழ்ப்பாண வைபவமாலை, காசியாத்திரை விளக்கம் என்பன) 19ம் நூற்றாண்டிற்குரியனவாகக் கொள்ளப்படுகின்றன.

### (ஆ) கல்வளையந்தாதி:

பதினெட்டாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுவோருள் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும் ஒருவர். இவரால் இயற்றப் பட்டதே இந்நூல் ஆகும். சண்டிலிப்பாயிலுள்ள கல்வளைப் பகுதியில் எழுந்தருளிய விநாயகப்பெருமான் மீது பாடப்பெற்றது. மருதநிலப்பண்பினை கல்வளை கொண்டு விளக்குவதனைப் பாடல்கள் மூலம் காணலாம் (உ- ம் வானரம் பைங்கதலிக் கனி சிந்திடுங்கல்வளை, நெல்விளை பணைக் கல்வளை) யமகம் என்னும் சொல்லணி அமையப்பெற்ற (ஒரு கவியின் நான்கடியிலும் முன்னுள்ள சொற்றொடர் அடிதோறும் ஒன்றுபட்டிருப்பது) இந்நூல் நூற்றந்தாதி வகையினது.

பல செய்யுள்கள் அகப்பொருள் தழுவித்தோழி, பாங்கன், தலைவன், தலைவி, செவிலி என்போரது கூற்றுகளாக இட்ம்பெற்றுள்ளன.

### (இ) மறைசையந்தாதி:

இதனை இயற்றியவரும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரே. திருமறைக்காடு என அழைக்கப்படும் வேதாரணியத்திற் கோயில்கொண்ட வேதாரணியேஸ்வரர் மீது பாடப்பட்டது. இது திரிபு என்னும் சொல்லணி அமையப்பெற்றது.(கவியின் நான்கடியிலும் முன்னுள்ள சொற்றொடரின் முதலெழுத்து நீங்க மற்றை எழுத்துக்கள் அடிதோறும் ஒன்றுபட்டிருப்பது திரிபு ஆகும்) தமிழகத்துத் தலங்கள் குறித்தும் ஈழத்துப்புலவர்களால் நூல்கள் இயற்றப்பெற்றமைக்கு இந்நூலும் சான்றாக அமைகின்றது. கட்டளைக் கலித்துறையிலமைந்த நூறு செய்யுள்களை இந்நூல் கொண்டுள்ளது.

## சோதிடம்:

### சந்தான தீபிகை:

இந்நூல்1713ல் இயற்றப்பட்டது என்பர். ஆசிரியர் ச.இராமலிங்கஐயர்.

> "நன்னூலாம் வடமொழிச்சந் தானதீ
> பிகையதனை நலங்கு லாவு
> தென்னூலாய் பவர்தாமு மாராய்ந்து
> ...............................
> முன்னூலான் சந்திரசே கரன்புதல்வ
> னிராமலிங்க முனிவன் றானே"

எனும் பாயிரச் செய்யுள் மூலம் வடமொழிச் சந்தான தீபிகையைத் தழுவியே இது எழுதப்பட்டதென்பதையும் இராமலிங்க முனிவர் இதன் ஆசிரியரென்பதையும் அறிய முடிகின்றது. இந்நூல் இல்லறத்தோர்க்கு இன்றியமையாத சந்தான விருத்திக்கேற்ற சோதிட விடயங்களைக் கூறுகிறது. இந்நூல் அக்காலச் சோதிடக் கொள்கைகளைக் கூறுவதுடன் ஈழத்தின் அன்றைய சமூக நிலைமையையும் எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர் குறிப்பிடுவர்.

விருத்தப்பாவால் இது அமைந்துள்ளது.

## வைத்தியம்

### அமுதாகரம்:

ஒல்லாந்தர் காலத்தில் சிறப்பிடம் பெறும் புலவர்களுள் வரதபண்டிதரும் குறிப்பிடத்தக்கவர். இவரால் இயற்றப்பட்ட நூல்களுள் ஒன்றே 'அமுதாகரம்'. இது விஷவைத்திய நூலாகும். ஆரியச் சக்கரவர்த்திகள்

காலத்தில் இயற்றப்பட்ட செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய இரு வைத்திய நூல்களிலும் விஷவைத்தியம் பற்றிக் கூறப்படாமையைக் கருத்திற்கொண்டு அக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில் இந்நூல் அமைகின்றது. 323 விருத்தப்பாக்களையும் கொண் டுள்ளது.

## புராணம்:

### (அ) சிவராத்திரி புராணம்

அ.வரதபண்டிதரால் இயற்றப்பட்ட இந்நூல் சிவராத்திரி விரத மகிமையையும் சரிதையையும் கூறுவது. சூதமுனிவர் கூறும் முறையில் இப்புராணம் அமைந்துள்ளது. 9 சருக்கங்களிலும் 691 செய்யுள்கள் உள்ளன.சிவராத்திரி விரதத்தாற் பலனடைந்த சுகுமாரன், அங்குலன், சவுமினி, கன்மாடபாதன், விபரிசன், குபேரன், சாலிகோத்திரன் ஆகியோரின் கதைகளும் கூறப்பட்டுள்ளன.

### (ஆ) ஏகாதசி புராணம்:

(அ.) வரதபண்டிதரால் இயற்றப்பட்ட இப்புராணம் திருமால் விரதங்களுட் சிறந்ததாகிய ஏகாதசி விரதத்தின் மகிமையைக் கூறுவது. அத்துடன் இவ்விரத்தை அனுஷ்டித்த உருக்குமாங்கதன், வீமன் ஆகியோரின் சரிதங்களையும் கூறுகின்றது. 3 சருக்கங்கள் இதில் உள்ளன. அவையாவன; காலநிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீமேகாதசிக் சருக்கம் என்பன. காப்புச் செய்யுள் ஒன்றும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் ஐந்தும் அவையடக்கம், பாயிரம் என்பனவற்றில் ஒவ்வொன்று மாகவும் செய்யுள்கள் காணப்படுகின்றன. மூன்று சருக்கங்களிலும் 258 செய்யுள்கள் உள்ளன.

### (இ) யோசேப்புராணம்

காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணத்தை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் (இயற்பெயர்: கனகசபாபதியோகி என்பர்) இயற்றிய யோசேப்புப் புராணம் புனித யோசேப்புவின் வரலாறு பற்றியதாகும். இதில் 21 படலங்களும் 1023 செய்யுள்களும் இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது. கூழங்கைத் தம்பிரான் நல்லைக் கலிவெண்பா, கூழாங்கையார் வண்ணம், சித்தி விநாயகர் திருவிரட்டைமணிமாலை முதலிய நூல்களை இயற்றியதுடன் நன்னூலுக்கு உரையும் எழுதினா ரெனப்படுகிறது. இவர் 1795 அளவில் இறந்தாரென்பர்.

### (ஈ) வலைவீசு புராணம்:

வட்டுக்கோட்டை க.முத்துக்குமாரர் என்பவரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் இப்புராணம் கிடைத்தற் கரிதாயுள்ளது என்பர்.

### (உ) ஞானானந்த புராணம்:

தெல்லிப்பழை தொம்.பிலிப்பு என்பவரால் (1733-1825) பாடப்பட்டது. கிறிஸ்தவ மத விளக்கமாக அமைவது.1104 விருத்தப் பாக்கள் இதிலுள்ளன.

## தூது:

சங்க இலக்கியங்களிலிருந்து காப்பியங்கள் வரை தூது விடும் மரபு இருந்து வந்திருப்பதை யறியலாம். ஓதல், தூது, பகை ஆகியவற்றிற்காக பிரிவு நிகழும் என்பதை தொல்காப்பியம் கூறுகிறது. (தொல் அ.சூ.25) தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன் முதலிய பலரும் அகப்பொருள் சார்ந்து தூதுரைக்கத் தக்கவர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (தொல் கற்.52) உயர்திணையேயன்றி அஃறிணை யையும் தூது விடும் மரபு இருந்தது. நண்டு, நாரை, கிளி, வண்டு, அன்னம் ஆகியன தூதுப் பொருள்களாகப் பயன்பட்டமைக்கு சங்க இலக்கியங்களில் ஆதாரங்கள் உள்ளன.

கி.பி.14ம் நூற்றாண்டளவில் 'தூது' தனியொரு இலக்கியவகையாக உருப்பெற்றது. தமிழின் முதலாவது தூதாக உமாபதி சிவாசாரியார் இயற்றிய 'நெஞ்சு விடு தூது' குறிப்பிடப்படுகிறது.

### (அ) பஞ்சவன்னத்தூது:

இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப் பட்ட இத்தூது சமகால தூதுப் பிரபந்தங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டமைவது. ஈழத்தில் எழுந்த அகப்பொருள் சார்ந்த இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டவைகளுள் ஒன்றாக பஞ்சவன்னத்தூதும் குறிப்பிடப்படுகிறது. (மற்றையது கிள்ளைவிடு தூது)

கங்கை குலத்துதித்த காலிங்கன் ஒருவனது மரபில் உதித்த கயிலாயநாதன் 'இளந்தாரி' எனவும் சிறப்பிக்கப்படுபவன். இவன் சிறந்த வீரனாக இருக்க வேண்டுமென்பர். 'இளந்தாரி' வழிபாடு இணுவிலில் சிறப்புற்றிருந்தது. அரசனாகவும் கயிலாயநாதன் கருதப்பட்டிருக்கவேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

இணுவை கயிலாயநாதன் வீதியுலாவருகையில்

சந்திரமோகினி என்ற பெண் காதல் கொண்டு வெண்ணிலா, தென்றல், கிளி, அன்னம் ஆகிய அஃறிணைப் பொருள்களையும் ஈற்றில் தோழியையும் தூதாக அனுப்புகிறாள் (தோழி -மந்தாயினி) தோழி தலை வனிடம் தூதுரைத்து பின் அவனது சம்மதத்தைத் தலைவியிடம் தெரிவிக்கின்றாள். இத்தூது ஏனைய தூது இலக்கியங்களிலிருந்து வேறுபடும் தன்மைகள் வருமாறு:

(அ) தூது இலக்கியங்கள் கலிவெண்பாவாற் பாடப்படுவதே மரபு. பஞ்சவன்னத்தூது, அகவல், விருத்தம், கலிப்பா, சந்தப்பா ஆகியவற்றால் பாடப் பட்டிருத்தல்.

(ஆ) ஒரு நூலில் ஒரு பொருளே தூதாக அனுப்பப்படும் மரபுள்ளது. இந்நூலில் ஐந்து தூதுப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

(இ) தலைவியின் காதலைத் தலைவனுக்குக் கூறி அவனது மாலையை வாங்கிவருமாறு தூது அனுப்பப்படுவதுடன் முடிவடையும் மரபு ஏனைய தூது இலங்கியங்களில் இருக்க, தலைவனின் சம்மதத்துடன் தூது மீளும் தன்மை இத்தூதிற் கூறப்படுகிறது.

(ஈ) உயர்திணைப் பொருளும் அஃறிணைப்பொருளும் கலந்து தூதுப்பொருள்களாகப் பயன்படுத்தப் பட்டமையையும் இத்தூதிற் காணலாம்.

(உ) தலைவி பெயர் சுட்டப்படுதல்

### (அ) கிள்ளை விடு தூது:

வரதபண்டிதரால் இயற்றப்பட்ட இத்தூது காங்கேசன்துறையைச் சேர்ந்த கண்ணியவளை என்னும் இடத்தில் எழுந்தருளிய குருநாதசுவாமி மீது பாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 216 கண்ணி களைக்கொண்ட இத்தூது குருநாதன் பவனி கண்டு காதலுற்ற பெண் ஒருத்தி கிளியினைத் தூதாக அனுப்பியதைக் கூறுகிறது.

## காவியம்:

### (அ) திருச்செல்வர் காவியம்:

18ம்நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் தெல்லிப்பளை பூலோகசிங்க முதலியார் (இவர் அருளப்பர் நாவலர் எனவும் அழைக்கப்பட்டார்) என்பவரால் இக்காவியம் பாடப்பட்டது. கத்தோலிக்க சமயக் கருத்துக்கள் கூறப்படுகின்றன. சிந்து தேச அரசனாகிய அபினேர்( கி.பி.8ம் நூற்றாண்டு) எனும் அஞ்ஞான அரசனின் மகனான திருச்செல்வராயன் சத்தியவேதத்திற் சேர்ந்தமை, தவம்புரிந்தமை இறைவனுடன் இணைந்தமை (வீடுபேறு) ஆகியன கூறப்படுகின்றன. 1947 விருத்தப்பாக்கள் இதிலுள்ளன.

### (ஆ) கஞ்சன் காவியம்:

இது வட்டுக்கோட்டை க.முத்துக்குமார் என்பவரால் பாடப்பட்டது. இவர் 18ம்நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

## கோவை:

### (அ) கரவை வேலன் கோவை:

நல்லூர் சின்னத்தம்பிப்புலவராற் பாடப்பட்டது. பாட்டுடைத்தலைவன் கரவெட்டி வேலாயுதபிள்ளை. 425 கட்டளைக் கலித்துறைப்பாக்களைக் கொண்ட இந்நூலின் 172 பாடல்கள் சிதைந்துவிட்டதாகக் கூறுவர். உளஊர்ப்பிரபுத்துவப் பரம்பரை பற்றித் தோன்றிய முதல் ஈழத்து நூல் இதுவென்பர். 'சமயச் சார்பற்ற தேசிய நிலைநின்ற, இலக்கியத்தின் கால்கோளாக இந்நூலைக் கொள்ளலாம்' என கா.சிவத்தம்பி கூறுவார்.

## வரலாறு:

### (அ)மட்டக்களப்பு மான்மியம்:

ஒல்லாந்தர் காலத்தில் தன் இறுதி வடிவத்தைப் பெற்றிருக்கவேண்டும் எனக்கருதப்படுகின்ற இந்நூல் மட்டக்களப்பின் வரலாற்றைக் கூறும் வகையில் அமைந்தது. நாமவியல், சரித்திரவியல்,சாதியியல், ஆலயவியல், ஒழிபியல் எனும் பகுதிகள் இதிலுள்ளன. வசனநடையிலமைந்த பகுதிகளும் இதிலுண்டு. ஆலயவியலில் ஏழு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கிழக்கிலங்கைத்தமிழர்களின் தேசியவுணர்ச்சியின் விளைவாக இந்நூல் எழுதப்பட்டிருக்காலம் என சி.பத்மநாதன் கூறுவார்.

## ஏனையவை:

இக்காலத்தில் வேறும் சில நூல்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத் தக்கன

### (அ) வெருகல் சித்திரவேலாயுதர் காதல்:

வெருகலிலுள்ள சித்திரவேலாயுத சுவாமி மீது தம்பலகாமம் வீரக்கோன்முதலி பாடியது.

421கண்ணிகளையுடையது.

**(ஆ)சிவகாமியம்மை துதி:**

இணுவைச் சின்னத்தம்பி புலவரால் இணுவிலில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மை மீது பாடப்பட்டது. பல்வேறு சந்தங்கள் கொண்டமைந்திருப்பது. இவ்வகை இலக்கிய மரபுக்கு மாறுபட்ட ஒன்றாகும்.

இவரால் பாடப்பட்ட நூல்களுள் மறியற் கொச்சகம், இளந்தாரி புராணம், சிவகாமியம்மன் திருவூஞ்சல், கயிலாயநாதன் திருவூஞ்சல் என்பனவும் குறிப்பிடத்தக்கன. மறியற்கொச்சகம், சிறையில் இருந்து பாடப்பட்ட இலக்கியமாகச் சிறப்புறுவது.

**(இ) மருதப்பக்குறவஞ்சி:**

பிலிப்பு தமெல்லோ (1723-1790) என்பவரால் பாடப்பட்டது.

**(ஈ) வட்டுக்கோட்டை பிட்டிப்பதிப் பத்திரகாளியம்மன் ஊஞ்சல்** - கணபதி ஐயராற் பாடப்பட்டது.

**(உ) பிள்ளையார் கதை:**

இயற்றியவர் அ.வரதபண்டிதர். விநாயகர் வரலாறு கூறப்படுவதுடன் விநாயகர் விரதம் பற்றியும் கூறுவது. அகவலில் பாடப்பட்டது.

**(ஊ) கணேசவிற் கோட்ட விநாயகர் ஊஞ்சல்**

இதுவும் அ.வரதபண்டிதராலேயே இயற்றப் பட்டது.

**நாடகம்:**

ஈழத்தில் தமிழ்க் கூத்து நூல்களின் பிதாமக ரெனக் கருதப்படும் கணபதி ஐயர் (1709-1784) வாளபிமன் நாடகம், அபிமன்னர் சுந்தரி நாடகம், அலங்காரரூபன் நாடகம், அதிரூபவதி நாடகம் என்பவற்றையும் இணுவில் சின்னத்தம்பிப் புலவர் நொண்டி நாடகம்,அநிருத்த நாடகம், கோவலன் நாடகம் என்பவற்றையும் இயற்றியதாகக் கொள்வர்.

**உரைநடை முயற்சி:**

யாக்கோமே கொன்சால்வேஸ் (Jacome Goncalvez) (1676-1742) ,கபிரியல் பச்சேகோ (Gabriel Pacheco) பிலிப்புத மெல்லோ ஆகியோர் தமிழ் உரைநடைமுயற்சிகளில் ஈடுபட்டனர். பிலிப்பு தெ மெல்லோவின் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு 1759ல் வெளிவந்தது.

தொகுத்து நோக்குமிடத்து பெரும்பாலும் மரபுக்குட்பட்ட வகையில்இவ்விருகால இலக்கியங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், மரபுக்குட்படாத வகையில் சில மாற்றங்களுடனான இலக்கியங்களும் எழுந்தமை கண்கூடு. ஒல்லாந்தர் கால ஈழத்துத் தமிழ் இலக்கியங்களில் வட மொழிச் செல்வாக்கு மிகக் குறைந்திருந்ததென ஆய்வாளர் சுட்டுவர்.

**உசாத்துணை:**

நடராசா. க.செ.1982 'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி 14ம் நூற்றாண்டு -18ம்நூற்றாண்டு வரை

கார்த்தியாயினி ந. 1988; இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர்.

நடராசா எப்.எக்ஸ்.சி.1970 ஈழத்து தமிழ் நூல் வரலாறு

சந்திரகாந்தன் ஏ.ஜே.வி.(தொகுப்பாசிரியர்)1993 தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்.

சதாசிவம். ஆ. (பதிப்பாசிரியர்) 1968 ஞானப்பள்ளு

மனோகரன் துரை. 1997 இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி.

சிவராம்.டி. மட்டக்களப்பு மான்மியம் பண்பாடு 1994 மார்கழி

சிவத்தம்பி.கா. 1978 ஈழத்தில் தமிழ் இலக்கியம்

சிவத்தம்பி.கா. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு அதற்கான எழுது முறைபற்றிய ஒரு குறிப்பு 1998 கிழக்கொளி

நான்காவது அனைத்துலகத் தமிழாரய்ச்சி மாநாடு- நினைவு மலர். 1974 யாழ்ப்பாணம்.

**மா**சி மாதப் பனி மூட்டம். விடிந்தும் கூட இருள் சரியாகப் பிரியாத நேரம். ஆனால் பட்சிகள் மட்டும் விடியலின் பூபாளத்தை வீணா கானமாக இசைத்துக் கொண்டிருந்தன. அந்தக் கிராமம் சோம்பல் முறித்து கண் விழித் துக்கொண்டிருந்தது.

அந்தக் குடிசையும் கண் விழித்தது. அங்கு வாழ்க்கை நடத்தும் ஆறு ஜீவன்களில் குடும் பத்தலைவன் என்ற பதவி பெறும் ஜீவன் நேசநாயகம்; அவனது துணைவி கமலா; அவர்களது குழந் தைகளே எஞ்சிய நால்வர். அன்றாடம் கூலித்தொழில் செய்து அதில் வரும் வருமானத்தில் சந்தோசமாகவும் நிம்மதி யாகவும் அவர் களது வாழ்க்கை வண்டி நகர்ந்து கொண்டிருந்தது.

"அப்பா... எனக்கு வெள்ளச் சட்டை வேணும். எனக்கு இருக்கிற ஒரே யொரு சட்டைய எத்தின நாளைக்கு இரவுல கழுவிப் போட்டு விடியத்தில் போட்டுத்துப் போறது..." இது அவனது 12 வயது மகளின் கண்டிப்புக் கலந்த கெஞ்சல் வார்த்தைகள்.

"புள்ள... விடியத்தில் என்ன நீ... அப்பா, வேலைக்குப் போகக் குள்ள... காசு கிடைச்சா வாங்கித் தருவாரு தானே..." கமலா மகளுக்குக் கூறியவாறே அவர் களது குடிசையின் ஒரு மூலையில் அடுப்புச் சாம்பலை அள்ளி அடுப் பை மூட்டினாள்.

"ஏன் கமலா... புள்ளையக் கடியிறா. அவள் என்ன வெள்ளைச் சட்டைதானே கேட்டவள். வாரது சித்திரை வருசம் வேற... இந்தச் சித்திர வருசத்தையாவது எல்லா ருக்கும் புதுத்துணி எடுத்து நல்ல படியாக் கொண்டாடணும்... எங்கு ஒரு வேலையும் தொடர்ந்து கிடைக்குதில்லையே. ஒரு நாளைக்கு செய்தா... ஒன்பது நாளைக்கு வேலையில்லாம வீட்டில கெடக்கணும்... ம்... எப்பதான் இந்த பிரச்சனை தீர்றதும்.. நாம பயமில் லாம நல்லா இருக்கிறதும்.."

என்றவாறு தனது 'சாறனை' எடுத்துக் கொண்டு முகம் கழுவக் கிணற்றடிக்குச் செல்கிறான்.

கமலா அடுப்பிலே தேனீ ருக்குத் தண்ணீர்வைத்துவிட்டு ஒருவரையொருவர் அணைத்தவாறு அவளது பழைய சேலையைப் போர்வையாக்கி அதற்குள்ளே சுருண்டு கிடந்த அந்தப் பிஞ்சுகளை ஒவ்வொன்றாக் எழுப்பிக் கையிலே பற்பொடியைக் கொடுத்து "ஓடுங் கோ... அப்பா கிணத்தடியில நிக்கிறாரு... போய்க் குளிச்சித்து வாங்க... பள்ளிக்குப் போகணும்..." என்று துரிதப்படுத்துகிறாள்.



செல்வி.சோ.சந்திரகலா

இரண்டாம் வருடம்.

"அம்மா... பொழுது பட்டுத்தான் கழுவிப் போட்டநான். எண்ட... வெள்ளைச் சட்ட இன்னும் காயல்ல அம்மா... ஐஞ்சுரூபாக் காசு தாம்மா தம்பியப் போக்காட்டி கனகசபை யண்ணரிட்ட சட்டையை மினிக்கித்து வரச்சொல்ல...." என்று இழுத்த தனது மூத்த மகளைப் பார்த்து, "ஒரு சதக் காசும் இல்ல புள்ள. இருந்த மூண்டு ரூபா ஐம்பசதத்தக் காராத்தல் சீனி வாங்கப் போக்காட்டித்தன்.. கொஞ்ச நேரம் அந்தக் கொடியில போடு... ஓரளவுக் கெண்டாலும் காயட்டும். பள்ளிக்குப் போக," எனத் தனது நிலையைக் கூற, அதைப் புரிந்தும் கூட "பள்ளியில சேர் அடிப்பாரு... இஞ்ச என்னடாண்டா...." என்று சிணுங்கிக் கொண்டே போகிறாள்.

கணவனுக்கும் பிள்ளை களுக்கும் தேநீரை ஊற்றிக் கொடுத்து விட்டு பழைய சோற்றை எடுத்து அவர்களுக்காகக் கரைத்தவாறே "நல்லையாப் போடி யார்ர 'பீலிவெட்ட' வயல் இந்த முறை நல்ல வாசியாமே. எப்ப வெட்டுறதாம். அவர்ர வெட்டுக்குப் போனா நெல்லுத் தருவாரு, அத வித்தா சித்திர வருசச் செலவுப் பாட்டுக்கு உதவும்... " என்று கூறிய கமலத்தைப் பார்த்து,

"மறந்தே போய்த்தன் முந்த நாள் நல்லையாப் போடியார் கண்டவர்... இந்தா... வார சனிக் கிழமை சாமான் கட்டித்துப் போனா... எப்பிடியும் ஒரு ஒன்றரை மாசம் செய்ய வேணுமாம். அவர்ர எல்லா வெள்ளாமையையும் வெட்டிச் சூடு போட்டுத்து வர வேணும்..." என்றான்.

"அப்பா எனக்கு... அந்த ரமேஷ்... அவன் என்னோட படிக்கிறவன் அப்பா. அவனிட்ட இருக்கிறமாதிரி லோங்கிசும்... சேட்டும் வாங்கித் தரணும்..."

"அப்பா எனக்கு வருசத்துக்கு பஞ்சாபிச் சட்டை வாங்கித் தரணும் என்னோட படிக்கிற எல்லாப் புள்ளையளும் வச்சிருக் குகள் எனக்கு வாங்கித் தரணும்..."

"அப்பா எனக்கு சிவப்புப் புள்ளிச் சட்டை வாங்கித் தரணும் ..." ஒவ்வொருவராக அடுக்கினார்கள். குழந்தைகளின் எதிர்பார்ப்புக்களைப் பார்த்த நேசனுக்கு "எப்படியும் இந்த முறை அவங்க விரும்புற மாதிரி உடுப்பு வாங்கிக் கொடுக்கணும், அதோடு கமலத்துக்கும் ஒரு சீல வாங்கணும், அவளுக்கும் உடுப்பு வாங்கி எந்தக்காலம்..." என நினைத்தவாறே "இண்டைக்கு கோபாலண்ணட மிசினில் மண் ணேத்தப் போறம்... சனிக்கிழமை சாமான் கட்டிப் பீலி வெட்டைக்குப் போகணும்... இண்டைக்கு மட்டும் மண்ணேத்தப் போய்த்து வாறன்..." என்றவனை நோக்கி,

"என்னங்க ... இந்த முறை உங்க ளுக்கு எப்பிடியெண்டாலும் ஒரு சாரன் வாங்குங்க... உள்ளது. இந்த ரெண்டு சாறனும் தான்..." என்றவாறு குழந்தைகளைப் பள்ளிக்கு

அனுப்பத் துரிதமானாள்.

"நீ என்னட்ச் சொல்லித்தா.. நான் ஆரிட்டச் சொல்லுவன் கமலம் ... " என நினைத்துக்கொண்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு போக ஆயத்தமாகிறான்.

"அப்பா நானும் வாரன்... என்னையும் ஏத்திக் கொண்டு பள்ளியில விட்டுத்துப்போங்க....", என்ற அவனது கடைக் குட்டியை ஏத்திக் கொண்டு சைக்கிளை மிதிக்கிறான்.

" அப்பா எனக்கு சிவப்புப் புள்ளிச்சட்டை வாங்கித்தரணும். வாங்கித் தருவியளா? " சைக்கிள் வாரில் இருந்தவாறே அண்ணாந்து முகத்தைப் பார்க்கும் குழந்தையைப் பார்த்து,

"கட்டாயம் வாங்கித் தருவன்.. அப்பா பீலிவெட்டைக்கு வெள்ளாம வெட்டப் போய் வந்து... கட்டாயம் வாங்கித்தருவன் என்று கூறிக்கொண்டிருக்கும போதே பள்ளியடி வந்தது. குழந்தையை இறக்கி விட்டு மீண்டும் கோபாலண்ணனனின் வீடு நோக்கி அவன் போகிறான்

⁕ ⁕ ⁕

அடுத்த நாள் அதாவது சனிக்கிழமை காலையில் வேளைக்கு எழும்பி சாமான்களைக் கட்டிக் கொண்டு பீலி வெட்டைக்கு அறுவடைக்குப் போகத் தயாராகின்றான். அவனது குழந்தைகளின் எதிர்பார்ப்புகள் அவனது மனதில் பட்டியலிடப்படுகின்றன.

''பிள்ளையள் இன்னும் எழும்பல்ல... இண்டைக்குச் சனிக்கிழமைதானே... பள்ளியும் இல்ல. நீங்க போய்த்து வாங்க, அந்தா கந்தசாமி அண்ணனும் போறாரு..." என்று கமலா கூறியதும் தனது சாமான் கட்டிய உரப்பையை எடுத்துக் கொண்டவன், மீண்டும் திரும்பி நிம்மதியாகப் படுத்திருக்கும் குழந்தைகளைப் பார்க்கிறான். உரப்பையை வைத்து விட்டு குழந்தைகளுக்கு அருகில் சென்று ஒவ்வொருவரதும் முகத்தையும் பார்த்து தலையைத் தடவி விட்டு எழுந்தவனின் காலை அந்தப் பிஞ்சுக் கரங்கள் கட்டிப் பிடித்துக் கொண்டது. குனிந்து தூக்கி எடுத்தவனிடம் "அப்பா எனக்கு சிவப்புப் புள்ளிச்சட்டை...." என்ற குழந்தையிடம், "அதுக்குத்தானே அப்பா போறன். வரக்குள்ள கட்டாயம் சிவப்புப் புள்ளிச் சட்டையோடதான் வருவன்.. இப்ப போய்த்து வாரன்...." என்று குழந்தையை இறக்கி விட்டு உரப் பையை எடுத்துக் கொள் கிறான்.

படலையைக் கடந்தவனின் காதுகளில் " அப்பா சிவப்புப் புள்ளிச்சட்டை...." என்ற குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

⁕ ⁕ ⁕

நேசனது கூட்டத்தில் பதினைந்து பேர். எல்லோரும் அவனது தரத்தில் உள்ளவர்கள் தான். ஒருவர் வயது கொஞ்சம் கூடியவர். அவர்தான் வெள்ளாமைக்காரன். அவர்ர கட்டுப் பாட்டுக்குள்ள தான் வேலை நடக்கும். போடியார் மூன்று நாளைக்கொரு தடவை வந்து பார்த்து விட்டுப் போவார்.

பீலிவெட்டைக்குப் போன மறுநாளே வேலை ஆரம்பமானது. அன்று காலை வயலில் இறங்கியவர்கள் மத்தியானம் ஒரு மணியளவில் கரையேறி சாப் பாட்டை முடித்துக்கொண்டனர். மீண்டும் இரண்டரை மணிக்கெல் லாம் வயலில் இறங்கியாக வேண்டும். அன்று மாலை 6 மணியளவில் கரையேறி பக்கத் திலே ஓடிக்கொண்டிருந்த 'வண்ணாத்தியாற்றிலே' குளித்து விட்டு வாடிக்குள் சென்று சாப் பாட்டை முடித்துக் கொண்டு கைகளைப் பின்னாலே கட்டியவாறு தலையணையாக்கிக் கொண்டு மல்லாந்து படுத்தவனுக்குத் தூக்கமே வரவில்லை. இரவு நெடு நேரமாகியும் இமை மூடவில்லை. "அப்பா சிவப்புப் புள்ளி போட்ட சட்டை...." என்ற குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

வழமைபோல் அடுத்தநாள் காலையிலே வயலில் இறங்கி ஒரு வரவையை வெட்டி முடித்திருப்பார்கள். இடியோசை போல வெடியோசைகள் கேட்க ஆரம்பித்தன. ''இது கும்புறுமூலப் பக்கமாத்தான் இருக்கணும்...." என்ற வெள்ளாமைக்காரப் பெரியவர் "நீங்க வெட்டுங்க... இது என்ன நமக்குப் புதிசா... பழகிப் போனது தானே... மழையும் பேயுறது தான் ... மோக்கானும் கத்திறான்...." என்று வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். நேசனின் மனம் கலங்கித் தவிக்கிறது. "பக்கத்து ஊர்தானே... கமலமும் புள்ளையளும் என்ன செய்து களோ.. " என்று கலங்கினான். இடையிலே "அப்பா... சிவப்புப் புள்ளிச்சட்டை..." என்ற நினைவு வருகிறது. ஒரு சின்ன வெடிக் கேட்டாலே வீரென்று கத்துவாள்...." என மனம் பலவாறு கலங்கித் தவித்தது.

வெடிமட்டும் ஓய்ந்த பாடில்லை. எல்லோரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இடையிலே கரையேறி வாடிக்குள் சென்று எல்லோரும் தமது இஸ்ட தெய்வங்களை வேண்டிக் கொள் கின்றனர். வெடிச் சத்தம் ஓயும் வரைக்கும் காத்திருக்கின்றனர். சுமார் ஒரு மணித்தியாலம் சென்றிருக்கும், ஓரளவுக்கு வெடிச் சத்தம் ஓய்கிறது. மீண்டும் அறுவடை ஆரம்பமாகிறது. அந்த நேரம் பார்த்து எங்கிருந்து தான் அந்தப் பறவை வந்ததோ. ஓடிச் சென்று ஒழிந்து கொள்ளவும் முடியாத இடம் பரந்த வயல்வெளி. ஆம் 'அலுமினியப் பறவை' அது போட்ட 'பரள்' அவர்கள் பதினைந்து பேரையும் அறுவடை செய்து விட்டது. நேசனது கூட்டத்தோடு சேர்ந்த பதினைந்து உயிர்களும் ஒரேயொரு 'பரளால்' நொடியில் அறுவடையாகி விட்டது. அங்கே சிவப்புப் புள்ளிக் கோலங்கள்.

⁕ ⁕ ⁕

அதே நேரம் இங்கு "அப்பா... எனக்கு சிவப்புப் புள்ளிச் சட்டை வாங்கி வருவாரே...." என்று பெருமிதமாகச் சொல்லிக கொண்டிருந்தாள் அவனது கடைக்குட்டி.

⁕ ⁕ ⁕

⁕ ⁕ ⁕ ⁕ ⁕

# தேசிய அரசுகளின் தோற்றம், முரண்பாடுகளில் தேசியவாதம் வகிக்கும் பங்கு

த. கிருஷ்ணமோகன்,
விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை.

**அறிமுகம்:**

Hans Kohn குறிப்பிடுவது போல் "இன்று சகல கண்டங்களினதும் தேசியவாத சகாப்த்தத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்." தேசிய அரசுகளின் தோற்றத்திற்கும் மக்கள் இறைமையினைப் பெற்றுக்கொள்ளவதற்கும் முன்மையாக இருந்து செயற்பட்ட எண்ணக்கருவாக தேசியவாதமுள்ளது. சிறுபான்மையினங்கள் தமது சுயநிர்ணய உரிமையினை பெற்றுக்கொள்ள நடாத்தும் போராட்டங்களுக்கும் தலைமை தாங்குவது தேசியவாதமேயாகும். தேசிய அரசுகளின் இறைமை மீது அழுத்தத்தினை கொடுக்கக் கூடியளவிற்கு பலம் பொருந்தியதாகவும் இது உள்ளது. இன்றைய உலகின் போக்கினை தீர்மானிக்கும் வல்லமை கொண்ட இவ் எண்ணக்கரு தொடர்பான தெளிவான விளக்கத்தினை தரும் நோக்கிலும் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

தேசியவாத கோட்பாட்டு நெறிமுறைகளை விளங்கிக் கொள்வதன் மூலம், இன்றைய முரண்பாடுகளுக்கான கோட்பாடு விளக்கமளிக்க இக்கட்டுரை முற்படுகின்றது.

தேசியவாதம் தொடர்பான ஆய்வென்பது மிகவும் ஆழமானது. ஒவ்வொரு தேசிய அரசிற்கும் உள்ள தனித்துவமான கொள்கைகள், இயல்புகளின் மூலம் இவற்றை விளங்கிக்கொள்ள வேண்டும். தேசியவாதம் முரண்பாடுகளுக்கு தீர்வுகாண பயன்படக்கூடிய தொன்றா? என்பதே இங்கு பரீட்சிக்கப்படுகின்றது.

இங்கு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதனிலைத் தரவுகளின் அவசியம் உணரப்பட்டிருக்கவில்லை. இரண்டாம் நிலைத் தரவிலும் Hans Kohn மேற்கொண்ட ஆய்வுகள் பெருமளவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழில் தேசியவாதம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் அருமைத் தன்மை உணரப்பட்டதுடன் அவற்றின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் நோக்கமும் இங்கு காணப்படுகின்றது.

## 01) கருத்தும் விளக்கமும்

தேசியவாதம் என்பது மனோநிலையும் (State of Mind) உளப்பூர்வமான சமூக நடத்தையுமாகும். மனிதனின் உளம் சார்ந்த (Mental life of man) வாழ்க்கை முறையில் அகஉள்ளுணர்வாகத் (Ego-conciasness)தொழிற்பட்டு குறிப்பிட்ட குழு மக்களின் உள்ளுணர்வாக மாற்றமடைகின்றது. குழு உணர்வு

சமூக உள நடத்தைகளைக் கருத்திலெடுக்கின்றது. இதனால் தேசியவாதம் இன்றைய உலகில் பயன்பாடுடைய எண்ணக்கருவாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.மக்கள் அரசிற்கு கீழ்ப்படியவும் தமது கடமைகளைச் சிறப்பாக செய்யவுமான கருவியாகத் தேசியவாதம் பயன்படுகின்றது. Hans Kohn "முதலாவதும் முதன்மையானதுமான உணர்வுச் செயற்பாடும் மனோநிலையுமாகும்". (State of mind) என்கிறார். Carlon J.H.Hayes "தேசியம், தேசப்பற்று ஆகிய இரண்டு உணர்வுகளையும் மிகைப்படுத்தி, உணர்ச்சிமிக்க இணைப்பாக்கி உருவாக்கப்பட்டதே தேசியவாதம் " என்கிறார்.

தேசியவாதத்தின் முக்கியத்துவத்தினையும், வளர்ச்சியையும் விளங்கிக்கொள்வதற்கு இதன் கோட்பாட்டு மூலகங்களாகிய தேசம் (Nation) தேசியம் (Nationality) தேசப்பற்று (Partriotism) சுயநிர்ணய உரிமை (Self-determination) ஆகிய எண்ணக் கருக்களை விளங்கிக்கொள்ளவேண்டும்.

## (அ) தேசம்:

தேசம் என்பது மானிடத் தொகுதியை குறித்து நிற்கின்றது. இம்மானிடத் தொகுதி வெவ்வேறுபட்ட இனக்குழுக்களைக் கொண்டதாகும். பொதுவான சிந்தனைகளையும் சுய உணர்வினையும் கொண்டவர் களாக இவர்கள் காணப்படுவார்கள். தமது உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த பொது மொழியினைப் பயன்படுத்துபவர்களாகவும் காணப்படுவர். தனியரசைத் தோற்றுவிப்பதற்கான பொதுவிருப்பத்தினையும் சிந்தனையினையும் உணர்வு பூர்வமாக கொண்டவர்களாக இருப்பர். Ernest Renan

> "மக்கள் தாம் புரிந்து கொள்ள முடியாத ஒரு உணர்வின் மூலம் ஒன்றாக கட்டுப்பட்டு இருப்பதே தேசமாகும்.— ஒரே மொழியினைப் பேசுகின்றவர்களாக அல்லது ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக மக்கள் இருக்காவிட்டாலும் குறைந்தபட்சம் கடந்த காலப் பொதுச் சிந்தனைகளை நிறைவேற்றியவர்களாகவும் தங்களுடைய எதிர்காலச் சிந்தனைகளை அல்லது விருப்பத்தினை நிறைவேற்றுபவர் களாகவும் இருக்க வேண்டும்"

என்கின்றார். உள, ஆத்மார்த்த அம்சங்கள் மக்களை ஒன்றாகக் கட்டிவைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேசப்பண்பிற்கான (Nation Hood) உணர்வு, பொதுவான வரலாறு, ஒன்றாக கூடிவாழ்வதற்கான விருப்பம் என்பவற்றின் மூலம் ஆத்மார்த்தமாக தேசம் என்ற சிந்தனை விருத்தியடைகின்றது.

## (ஆ) தேசியம்:

தேசியம் என்பது உள உணர்வு, அல்லது சமூக நடத்தை எனலாம். சமுதாயத்தின் வரலாற்று அபிவிருத்தியினூடாகத் தேசியம் அபிவிருத்தியடைந்து வருகின்றது. தேசியத்தினை உறுதிப்படுத்திக் கொள் வதற்கு பல இயல்புளைக் கருத்தில் கொள்ளவேண்டும். பொது வம்சாவழி, மொழி, பழக்கவழக்கங்கள், மரபுகள், மதம் போன்றன தேசியத்தினை அடையாளப்படுத்து கின்றன. இவ்வியல்புகளின் மூலம் மக்கள் ஒரே விதமான சமூக, மத, அரசியல் நிறுவனமாகத் தம்மை பிரதிபலிக்கின்றார்கள். சமூகவியலாளராகிய Louis

> "மக்கள் ஏதோ ஒரு பொதுவான வம்சாவழியினை நம்புகின்றவர்களாகவும், பொதுவான கலாசாரப் பண்புகளையும் இறைமையையினையும் விரும்புகின்றவர் களாவும் அல்லது பாரிய அரசியல் அல்லது கலாசார செல்வாக்கிற்கு முகம் கொடுப்பவாகளாகவும் உள்ளதே தேசியம்" என்கிறார்.

## (இ) தேசப்பற்று:

தேசப்பற்று என்பதனை நாட்டின் மீதான விருப்பம் (Love of country) என பொதுவாக வரையறுக்கலாம். நாட்டின் மீதான உயர் விருப்பத்தினால் ஏற்படுகின்ற கீழ்ப்பணிவாக இது கருதப்படுகின்றது. நாட்டின் மீதான விருப்பம் என்பதை ஒரு தேசியம் தான் தொடர்ந் தேர்ச்சியாக வாழுகின்ற பிரதேசத்தின் மீதான விருப்ப மாகக்கூட அடையாளப்படுத்தலாம்.

## (ஈ) சுயநிர்ணய உரிமை:

சுயநிர்ணய உரிமை மக்களுடைய வாழ்க்கை யின் ஒரு பகுதியாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. தேசியங்கள் அல்லது இனங்கள் தேசப்பண்பை (Nation Hood) அடைந்து அரச பண்பை(State Hood) பெற்றுக்கொள்வதற்கு சுயநிர்ணய உரிமையே பிரதான கருவியாகும். சுயநிர்ணய உரிமை இன அல்லது தேசிய அடிப்படையில் மானிடக் குழுக்களால் வெளிப்படுத்தப்

படும் உள்ளார்த்தமான உணர்வாகும். இவ் உள்ளார்ந்த உணர்வு ஒரே தேசத்தினை கொண்டவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தனியரசைத் தோற்றுவித்து தங்களைத் தாங்களே ஆளுகின்ற உரிமையினை குறித்து நிற்பதாகும். சுருங்கக் கூறின் ஒவ்வொரு தேசியமும் சுதந்திரமாகவும், சுயமாகவும், தமது தலைவிதியை தாமே நிர்ணயம் செய்யும் உரிமை எனலாம். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமெரிக்கப் பிரதிநிதியொருவர்

> "சுயநிர்ணய உரிமை என்பது எந்த அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழங்கவேண்டும், எத்தகைய வடிவை அரசாங்கம் எடுக்கவேண்டும், யார் அரசாங்கத்திற்கு தலைமைதாங்கவேண்டும், என்பவற்றைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கு மக்களுக்குள்ள உரிமை"என விபரிக்கின்றார்.

தேசியவாதத்தின் ஆரம்பம் என்பது மனிதன் தன் தேசம், தேசிய இனம் என்பவைகள் மீது கொண்டுள்ள உணர்வு பூர்வமான விசுவாசத்துடன் ஆரம்பமாகின்றது. தேசம் ஒன்று தேசப்பற்றால் உந்தப்பட்டு அறிவு பூர்வமாக ஐக்கியமடைந்து தமது சுதந்திரத்திற்காகப் போராடியதன் விளைவே தேசிய அரசுகளின் தோற்றமாகும்.தேசம் என்ற உளவியல் செயற்பாட்டுடனும், அரசு என்பதற்கான வரையறைகளுடனும் ஒன்றிணைந்து செல்கின்ற உளவியல் உணர்வாகும். ஆயினும் தேசியவாத உணர்வானது குறிப்பான வரலாற்று இயல்புகளினாலும் சிறப்பான சமூக கட்டுமானத்தினாலும் தீர்மானிக்கப் படுகின்றமையால், தேசிய அரசின் இறைமையின் மீது அழுத்தத்தினை கொடுக்கக்டியளவிற்கு வளர்ச்சி யடைந்து வருகின்றது.

## 02 தேசியவாதத்தின் வளர்ச்சி:

கி.மு 5ம் நூற்றாண்டில் கிரேக்க மக்களின் நகர அரசு முறைமை ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டு தங்களைத் தாங்களே ஒழுங்கமைத்துக் கொண்டதாக காணப்பட்டது. நகர அரசுகள் தங்கள் முரண்பாடுகளுக்கான தீர்வுகளை பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக்கொண்டனர். இது இவர்களிடையே குழுநிலை தேசியவாத்தினை (Parochial forms of Nationalism)தோற்றுவித்திருந்தது. மைய அரச அதிகாரம் இங்கு காணப்படாததுடன் ஒரு அரசின் மீது இன்னோர் அரசு தங்கியுமிருந்தது. தேசப்பற்று, தேசிய வாதம் ஆகியவற்றின் வடிவம் இங்கு காணப்பட்டது.

நகர அரசுகளை உரோமானியர்கள் வெற்றி கொண்டு ஸ்ரோயிக் தத்துவம் (Stoic Philosophy) உபதேசித்தது போல் உலக அரசினை உருவாக்க முற்பட்டனர். இத்தத்துவத்தைப் பின்பற்றித் தமது நிறுவனங்ளையும் சட்டங்களையும் உருவாக்கிக் கொண்டனர். 'சர்வதேசியம்' என்பதை குறிக்கோளாகக் கொண்டு திருச்சபைக் காலத்தில் மத ரீதியாக ஏற்பட்டிருந்த இணக்கம் உலக அரசுகளை ஒன்றிணைத்து வைத்திருந்தது. இவ்விரு காலங்களிலும் உருவாகியிருந்த 'சர்வதேசியம்' பற்றிய சிந்தனை தேசியவாதத்திற்குரிய பண்புகளை மழுங்கடித்திருந்தது. எனவே, இக்காலங்களில் தேசியவாத வளர்ச்சியில் மந்தமான காலமாக கருதப்படுகின்றது.

மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பிய மக்களிடையே தேசியவாத உணர்வுகள் வேகமாக வளர்ச்சியடைந்தன. இத்தேசியவாத உணர்வு இலத்தீன், கிரேக்க கிறிஸ்தவர்களிடையே தேசியப் போட்டியையும் பாப்பரசருக்கும், முடியாட்சிக்கும் இடையில் அதிகாரப் போட்டியையும் உருவாக்கியது. மக்கள் முடியாட்சியை ஆதரித்து பாப்பரசரால் முன்வைக்கப்பட்ட சர்வதேசியத்தை எதிர்த்தார்கள். இது புதிய தேசிய மன்னர்கள் தோற்றம் பெறுவதற்கு காரணமாகியது. இவர்கள் தோற்றம் பெற்றபோது ஐரோப்பாவில் தேசிய அரசுகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

தேசிய அரசுகளின் தோற்றம் வளர்ச்சிக்கு ஆதாரமாக தொழிற்பட்ட தேசிய வாத உணர்வினை மக்களிடையே வளர்ப்பதில் பல சிந்தனையாளர்களும் நிகழ்வுகளும் பங்கேற்றிருந்தன. Luther, Calvin, Knox போன்ற சீர்திருத்தவாதிகள் திருச்சபையின் ஆதிக்கத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர். Luther ஜேர்மனியிலும், Calvin பிரான்சிலும், Knox ஸ்கொட்லாந்திலும் மதச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினர். இவர்களின் சீர்திருத்தம் நாட்டுப்பற்றின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தது. இது திருச்சபைக்கும், லௌகீக அதிகாரம் கொண்ட அரசிற்கும் இடையில் முரண்பாட்டினைத் தோற்றவித்து சர்வாதிகார ஆட்சியை முதன்மைப்படுத்தியது. உயர்ந்த நோக்கமும்

சர்வாதிகாரமும் கொண்ட மன்னர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், ஸ்கன்டினேவிய நாடுகளில் தமது அதிகாரத்தினைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

இக்காலத்தில் மாக்கியவல்லியின் எழுத்துக் களும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தின. இவை தேசப்பற்றினையும் தேசிய அரசுகளின் ஒற்றுமை யினையும் வலியுறுத்துவனவாகவும் வெளிநாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து அரசினைப் பாதுகாப்பதாகவும் இருந்தன. இந்நோக்கத்தினை அடைவதற்காக தனிமுதன்மை அதிகாரம் கொண்ட மன்னராட்சி முறைமையினை இவர் வலியுறுத்தினார். இவரது கருத்துக்கள் திருச்சபையின் உயர் அதிகாரத்திற் கெதிராக ஐரோப்பாவில் பலமான, நேர்மையான, சீரான தன்மையுடைய மன்னர்களினால் ஆளப்படுகின்ற சுதந்திர அரசுகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தின.

மறுமலர்ச்சிக்காலம், மொழிஇலக்கியம், அரசியல், பொருளாதாரம், மதம் ஆகிய சக்திவாய்ந்த காரணிகள் மீது தாக்கத்தினை செலுத்தியது. இதனால் வெவ்வேறுபட்ட தேசிய இனங்கள் தோற்றமடைந்தன. ஆரம்பத்தில் கிரேக்கம், இலத்தீன் என்பன ஐரோப்பாவின் முதன்மை வாய்ந்த மொழிகளாகக் காணப்பட்டன. இந்நிலைமாறி ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலி மொழிகள் வெவ்வேறுபட்ட மக்களின் மொழிகளாயின. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு, பதிப்பு என்பன இம்மொழிகளின் இலக்கியங்கள் வளர்வதற்கு உதவியாக இருந்ததன் விளைவாகப் புவியியல் ரீதியாக நிச்சயிக்கப்பட்டதும், சுயமொழி, கலாசாரம், பாரம்பரியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட, ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தை மையமாக்கி புதிய தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன.

தேசிய அரசுகளின் எழுச்சியுடன் பொருளா தாரமும். வர்த்தகமும் அபிவிருத்தியடைந்தன. புதிதாகத் தோற்றம் பெற்ற அரசுகளும் அதன் ஆட்சியாளர்களும் வர்த்தகச் சுரண்டலை நோக்கமாகக் கொண்டு, கடற்பிரயாணங்களை மேற்கொண்டு புதிய பிரதேசங்களையும், அரசுகளையும் கண்டுபிடித்தனர். பழைய வர்த்தக நகரங்களாக காணப்பட்ட Venice, Genoa மட்டுமன்றி வேறுபல தேசிய அரசுகளிலும் வர்த்தக நகரங்கள் தோற்றம் பெற்றன. தேசிய அரசுகளின் ஆட்சியாளர் வாணிபவாதத்தை (Mercantilism) நடைமுறையில் பின்பற்றினர். வாணிபவாதம் யுத்தங்களுக்கு தலைமைதாங்க, ஐரோப்பிய வர்த்தகம் தேசிய தன்மையினை பெற்றுக் கொண்டது.யுத்தங்கள் தேசிய மகிமை அல்லது நாட்டுப்பற்று வளர்வதற்கு உதவியது.

## (அ) தேசியவாதத்தின் நவீன வளர்ச்சி

தேசியவாத்தின் நவீன வளர்ச்சியில், பிரான்சியப் புரட்சி முதன்மையானதாகும். 1789இல் பிரான்சிய மக்கள் மன்னர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் புரட்சிசெய்து, அதன்மூலம் ஜனநாயக அரசியலை முன்வைத்துச் சுதந்திரமும், இறைமையும் கொண்ட மக்கள் அரசாகப் பிரான்சைப் பிரகடனப்படுத்தினர். இப்புரட்சியானது, "எல்லா மனிதர்களும் சமத்துவமாக உருவாக்கப்படுகின்றார்கள். பிறக்கும் போது பறிக்க முடியாத சில உரிமைகளுடன் பிறக்கின்றார்கள்" போன்ற கருத்துக்களை வெளிப்படுத்தி, வலியுறுத்தி நின்றது.

நவீன தேசியவாத உணர்வின் பிறப்பிடமாக பிரான்ஸ் காணப்பட்டமைக்கு பல்வேறு காரணிகள் ஒருங்கிணைந்து செயற்பட்டன.

01. Voltaire என்ற அறிஞர் திருச்சபையின் நடவடிக்கைகளையும், அதன் சர்வாதி காரத்தையும் கடுமையாக தாக்கியமை.
02. Motesquieu. Roussoau ஆகியோர்களின் மக்கள் இறைமை பற்றிய கருத்துக்கள்.
03. 1776ல் நிகழ்ந்த அமெரிக்க புரட்சி பிரான்சிய மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் ஆகியன வாகும்.

> "ஆரம்பகாலத் தேசியவாதம் தனிமனித ஆட்சியாக இருந்தது. தேசம் என்ற எண்ணக் கருவானது குறுகிய நோக்கில் பிரசைகளின் தொகுதி என கருதிக்கொள்ளப்பட்டது. இதுவே பிரான்சியப் புரட்சிக்குக் காலாக அமைந்தது. ஏறக்குறைய முதல் தடவையாகப் பிரசை களினது உரிமைகளும் விருப்பமும் பிரபல்யமான ஜனநாயகம் என்பதை அறிமுகப் படுத்தியது."

என Quincy Wright கூறுகின்றார். 17ம், 18ம்

நூற்றாண்டுகளிலும் அதற்குப் பின்னரும் தேசிய அரசுகளுடன் நெருக்கமாக இணைந்து தேசியவாதம் அபிவிருத்தியடைந்தமைக்கு பிரான்சியப் புரட்சியே காரணமாகும். Hans Kohn இது தொடர்பாக கூறும் போது,

> "17ம், 18ம் நூற்றாண்டில் மேற்கைரோப்பா, அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் தோற்றம் பெற்ற தேசியவாதம் 19ம் நூற்றாண்டில் பொதுவான தேசியவாத இயக்கமாகவும் 20ம் நூற்றாண்டில் உலகளாவிய தேசியவாத இயக்கமாகவும் வளர்ச்சி யடைந்தது."

என்கின்றார்.

19ம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் இயந்திரங்களின் அதிகரிப்பு, பொருட்களின் உற்பத்தி, உற்பத்திகளின் அமைப்பு என்பன தேசியவாதத்திற்கான அடிப்படை களாயின. சர்வதேச வர்த்தகம் துரிதமடைந்ததுடன் தேசிய வர்த்தகமும் வங்கித் தொழிலும் அதிகரித்தன. போக்குவரத்திலும் வெகுசனத் தொடர்பிலும் சமூகப் பொருளாதார வாழ்விலும் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. இம்மாற்றங்கள் நவீன தேசியவாத எழுச்சிக்கு உதவின.

19ம் நூற்றாண்டு தேசியவாத கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் ஏற்புடைய ஒரு காலகட்டமாகும். ஐரோப்பாவின் தேசியவாத நடைமுறையினை ஜேர்மனிய, இத்தாலிய ஐக்கியம் எடுத்துக்காட்டின. ஏனைய ஐரோப்பிய அரசுகளாகிய கிறீஸ்(Greece) பெல்ஜியம் (Belgium) தேசியவாத எழுச்சியின் பெறுபேறாக தேசப்பண்பைப் (Nation Hood) பெற்றன. இவற்றைவிடப் போலந்து (Poland) அயர்லாந்து (Ireland) அஸ்ரோ - கங்கேரியன்களில் (Austro - Hungarian) ஆழமான தேசியவாத உணர்வுகள் கிளர்ச்சிகளாக வெளிக்காட்டப்பட்டன. காலப்போக்கில் தேசியவாதமானது. ஐரோப்பிய நிகழ்வானதன் பின்னர் ஏனைய கண்டங்களுக்கும் பரவிக் கொண்டது. ஸ்பானிய, போர்த்துக்கீய காலனித்துவத்திலிருந்து பல புதிய அரசுகள் தமது சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்டன. 19ம் நூற்றாண்டில் தேசியவாதமானது ஏனைய சித்தாந்தங்களாகிய ஜனநாயகம் (Democracy) தொழில்மயவாதம்(Industrialism) ஏகாதிபத்தியம் (Imperialism) தாராண்மைவாதம் (Liberalism) ஆகியவற்றின் மனோபாவங்களுடன் தொடர்புபட்டிருந்தது. Vienna மகாநாட்டைத் தொடர்ந்து தாராண்மைத் தேசியவாதம் (Liberal Nationalism) மத்தியதர வர்க்கத்தினரின் ஆதரவுடன் தோற்றிவிக்கப்பட்டது. மத்தியதர வர்க்கம் என்பது கைத்தொழில் மயவாக்கத்துடன் வளர்ச்சியடைந்ததாகும். இப்புதிய சக்தியின் பிரதிபலிப்பால் அனேக அரசுகள் விழிப்படைந்து தமது தேசிய சுதந்திரத்திற்காகப் போராடத் தொடங்கின. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வல்லரசுகளுக்கிடையில் கைத்தொழில், வர்த்தகம் என்பவற்றில் போட்டி ஏற்பட்டு இராணுவபலம் அதிகரித்தது. இறுதியில் இது உலக யுத்தங்களை தோற்றுவித்தது.

முதலாம் உலகப்போரினைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச சங்கத்தினாலும் (**League of Nation**) Locarno Kellogg உடன்படிக்கையினாலும் "சர்வதேசியத்தை உருவாக்க முயற்சிக்கப்பட்டது. **Versailles** உடன்படிக்கை 1919 இல் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் இத்தாலியில் பாசிசம் எழுச்சியடைந்தது. இதேபோல் 1930 களில் ஜேர்மனி, யப்பான் ஆகிய நாடுகளில் பாசிசம் எழுச்சியடைந்தது. இது முழுநிறை அதிகாரம் கொண்ட தனிமனித ஆதிக்கமுடையதாக இருந்தது. அக்கால சமூக, அரசியல், பொருளாதார சூழ்நிலையில் ஆபத்தானதாகவும், கொடுமையானதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் பாசிச தேசியவாதம் காணப்பட்டது. விளைவு, உலகம் இரண்டாவது உலகப்போரைச் சந்தித்தது.

இரண்டாம் உலகப்போரில் அச்சு நாடுகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாசிசம் கம்யூனிசத்தினால் தோற்கடிக்கப்பட்டது. கம்யூனிசம் சோவியத் யூனியனுக்கு உள்ளேயும் வெளியேயும் தேசியவாத இயக்கமாக வளர்ச்சியடைந்தது. சோவியத் யூனியனின் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய, காலனித்துவ எதிர்ப்பாளர்களுக்கும் ஆசிய தேசியவாத போராட்டத்திற்கும் ஆதரவளித்தனர். ஆசிய ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு இது பலமான தளமாக அமைந்தது. தேசியவாதமானது இன்று புதிய அரசுகளில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் புரட்சிகர இயல்புகளை வெளிப்படுத்துகின்றன. Hans

Kohn குறிப்பிடுவது போல "இன்று சகல கண்டங்களிலும் தேசியவாத சதாப்தத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்."

## 03. தேசியவாதமும்,சிறுபான்மையினரும்:

உலக சமாதானத்தை நேசித்தவர்கள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தேசியங்களுக்கிடையில் எதிர்காலத்தில் முரண்பாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக ஒவ்வொரு தேசியத்திற்கும் தனியான தேசிய அரசுகளை உருவாக்க முயற்சித்தார்கள்.இவ்வாறு செய்வது இலகுவானதல்ல. தேசிய அரசொன்றிற்குள் பல இனமக்கள் வாழ்கிறார்கள். மொழி, தேசியம்,மதம் என்ற சிக்கலான முறையில் இவர்கள் கலந்து காணப்படுகிறார்கள். இவர்களை தெளிவான தேசங்களாக பிரித்தெடுப்பது சிக்கலானதாகும்.

எடுத்துக்காட்டாக கிரீஸ்சில் பல்கேரியர்களும், பல்கேரியாவில் கிரேக்கர்களும், யூகோஸ்லாவியாவில் ருமேனியர்களும்,ருமேனியாவில் யூகோஸ்லேவியர்களும் செக்கோஸ்லேவியாவில் ஜேர்மனியர்களும் வாழுகின்றார்கள்.

ஒவ்வொரு தேசிய அரசிற்குள்ளும் வாழும் தேசிய சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் எப்போதும் பெரும்பான்மை இனத்தவர் மீது அச்சவுணர்வு இருந்து வந்தது. வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் ஒவ்வொரு தேசியமும் சுயநிர்ணய உரிமையினை கோரின. இச்சிக்கல்கள் எதிர்காலத்தில் உலக சமாதானத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பதால், சர்வதேசச் சட்டம் மூலமாக ஒவ்வொரு தேசியத்தினதும் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும் எனக்கூறப்பட்டது. இச்சட்டத்தினடிப்படையில் போலந்து,ருமேனியா, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லேவியா, கிறிஸ் போன்ற தேசிய அரசுகள் மொழி, இன,மத சிறுபான்மை குழுக்களுக்கு சம உரிமைகளை வழங்கின. நீண்ட காலத்தில் இச்செயற்பாடுகள் உண்மையான சமானத்தினை வழங்கவில்லை. சிறுபான்மையோர் தொடர்பாக கொடுக்கப்பட்ட உறுதிமொழிகள் தமது இறைமையினை எதிர்காலத்தில் பாதிக்கலாம் என ஒவ்வொரு அரசும் அச்சம் கொண்டன. இதனால் இன முரண்பாடுகள் தவிர்க்க முடியாத நிகழ்வாகின. இதனைத் தடுக்க சர்வதேசச் சங்கம் முயற்சித்ததாயினும் தவறு இழைப்பவர்களை தண்டிக்கக்கூடிய அதிகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை. இன முரண்பாடுகள் உச்சக்கட்டத்தினை அடைவது தவிர்க்க முடியாததாகியது. கங்கேரி, ருமேனியாவில் யூதர்களும், போலந்தில் உக்ரேனியர்களும் பாதுகாப்பற்ற நிலையிலிருந்ததுடன், மிகவும் பாதிக்கவும்பட்டனர். தேசிய விரோத உணர்வும் இனக்கிளர்ச்சியும் எழுச்சியடைந்தன. "சிறுபான்மையினர் பாதுகாப்பு" என்ற கோட்பாடு சிதைக்கப்பட்டது. ஜேர்மனியில் இன உணர்வலைகள் எழுச்சியடைந்தது. நாசிசம் வளர்ச்சி பெறலாயிற்று. யூதர்கள் துன்புறுத்தப் படலாயினர். இது ஜேர்மனியின் தேசியவாத இயல்பாக வெளிக்காட்டப்பட்டது. சிவில் சேவை, தனியார்துறை, இராணுவம் ஆகிய துறைகளில் இருந்து யூதர்கள் அன்னியப்படுத்தப்படவேண்டும் எனச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சமூக, பொருளாதாரத் தடை என்பது யூதர்களுடைய வாழ்வின் பெரும் கஷ்டத்தினை ஏற்படுத்தியது. இதனால் ஜேர்மனியை விட்டு யூதர்கள் ஆயிரக் கணக்கில் வெளியேற வேண்டியேற்பட்டது. இதுவே பின்னர் யூத தேசியவாதம் வளர்வதற்கும், பாலஸ்தீனத்தில் இஸ்ரவேல் என்ற புதிய அரசு யூதர்களிற்காக உருவாக்கப்படவும் காரணமாக அமைந்தது.

சோவியத் யூனியனில் ஏற்படுத்தப்பட்ட மறுசீரமைப்பும் வளைகுடாப்போரும் மீண்டும் உலகில் தேசியவாத உணர்வுகளை வெளிப்படுத்தின. Warsaw ஒப்பந்த அணிகலைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கைரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகள் மீண்டும் மக்கள் இறைமையினை வேண்டிநின்றன. மக்கள் தமக்கு ஏற்ற ஆட்சிமுறையினை உருவாக்கிக் கொண்டார்கள். யூகோஸ்லேவியாவில் சிலோவேனிய மக்களும், குரோசிய மக்களும் தனியரசு கோரிப் போராட்டம் நடாத்தினர். பொஸ்னியாவில் சேபியர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் யுத்தம் நிகழ்ந்தது. சோவியத் யூனியனில் இணைந்திருந்த 15 குடியரசுகளில் 10 குடியரசுகள் தனியரசாகிச் சென்றதுடன் அதனை உலக நாடுகள் அங்கீகரித்துக்கொண்டன.

முரண்பாடுகளும் யுத்தங்களும் தீவிரவாத உணர்வுகளினால் ஏற்படுகின்றன. யுத்தங்கள் என்பது தேசியம் ஒன்று ஏனைய தேசியத்தில் வைத்திருந்த

நம்பிக்கைகளை இழக்க வைக்கின்றன. மக்களுடைய மனங்களில் பரஸ்பரம் நம்பிக்கையீனத்தினைத் தீவிரவாதிகள் ஏற்படுத்துகின்ற போது ஒரு நாட்டின் உள்விவகாரங்கள் குழப்பமடைகின்றன. ஒவ்வொரு தேசிய அரசுகளும் பல்லின மக்களை உள்ளடக்கியுள்ளன. இவர்கள் தேசப்பற்றின் பெயராலும் தேசியத்தின் பெயராலும் எழுச்சியடைகின்றார்கள். மதம்,இனம், மொழி என்பன தேசிய உணர்வினை வளர்ப்பதில் முதன்மை பெறுகின்றன.

**முடிவுரை:**

ஏகாதிபத்திய நலன்களுக்கான போர்களும் சுயநிர்ணய உரிமைகளுக்காக சிறுபான்மையினர் நடாத்தும் கிளர்ச்சிகளும் இன்று தேசியவாதத்தினால் வழிநடாத்தப்படுகின்றது. தேசியவாதத்தினை மதிப்பிடுகின்றபோது அடிப்படையில் இரண்டு வினாக்களுக்கு விடைதேட வேண்டியுள்ளது.

1.தேசியவாதத்திற்கும், பலாத்காரத்திற்கும் இடையில் நெருங்கிய உறவு உள்ளதா?

2.தேசியவாதமும் தேசிய அரசும் உலகில் பயனுடையதா அல்லது தீமையானதா?

ஒரு சமூகம் சர்வதேச சமூகத்துடன் தன்னை ஒன்று படுத்தவும் ஒருவர் குறிப்பிட்ட இனத்துடன் சேர்ந்து வாழவும் தேசியவாதம் உதவுமாயின் அது பயனுடையதாயிருக்கும். இது பலாத்காரத்திற்கும் விஸ்தரிப்பு வாதத்திறகும் பயன்படக்கூடாது. ஒரு நாடு தேசியவாதத்தினை வளர்த்து இன்னோர் நாட்டினை கைப்பற்றவோ அல்லது இன்னோர் நாட்டின் நலனுக்கு முரணாக நடக்கவோ முற்படுமாயின் இராணுவ நெருக்கடிகள் ஏற்பட்டு சமாதானமும் அமைதியும் சீர்குலையும்.

கல்வியாளர்கள் சர்வதேச ஒழுங்கில் மாற்றம் ஏற்பட்டால்தான் தேசிய அரசுகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியும் என வாதிடுகிறார்கள். ஏனெனில் தேசியவாதிகள் தங்கள் கொள்கைகளை கைவிடுவதிலும் பார்க்க தங்களுக்கும் தங்கள் ஆதரவாளர்களுக்கும் ஏற்படும் கஷ்டங்களையும் அழிவுகளையும் ஏந்கத் தயாராக இருக்கின்றார்கள். உள்நாட்டில் ஏற்படும் யுத்தங்களுக்கும் அழிவுகளுக்கும் தேசியவாதிகளே காரணமாக உள்ளனர். இவ்யுத்தங்கள் உலக யுத்தங்களின் மூலம் ஏற்பட்ட அழிவுகளிலும் பார்க்க அதிகமானது எனப் புள்ளிவிபரங்கள் காட்டுவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

உலகம் எங்கும் இன அடிப்படையில் பிரிவினைக்கான கோரிக்கைகள் வளர்ச்சியடைந்து வருவதுடன், பலமான அழுத்தத்தினையும் கொடுத்து வருகின்றது. நன்கு ஸ்திரமான நிலையில் இருக்கும் அரசாங்கங்களை அரசியல் ரீதியாக சிதைத்து விடுமளவிற்கு இனமுரண்பாடுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இங்கிலாந்தில் ஐரிஸ் கெரில்லாக்கள் போராட்டமும் இந்தியாவில் காஸ்மீர் மக்களின் போராட்டமும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது. அரசியல் ரீதியான ஒன்று படுத்தலையும் அங்கத்துவ நாடுகளின் அரசாங்க அதிகாரங்களையும் பரவலாக்குவதன் மூலம் தேசியவாத நோக்கங்களை திருப்திப்படுத்துவதற்கு ஐரோப்பிய சமூகம் முயற்சிக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக பெல்ஜியத்தில் வசிக்கும் Flemings , Walloonsஇன மக்களிற்கு கலாசார சுயாட்சியை வழங்குவதற்காக பெல்ஜியம் தனது அரசியலமைப்பைத் திருத்தியுள்ளது. கனடா, பிரெஞ்சு, ஆங்கிலம் பேசும் மக்களின் விருப்பத்திற்கேற்ப தனது அரசியலமைப்பைத் திருத்தியுள்ளது. இத்தாலி ஜேர்மன் மொழி பேசும் மக்களிற்காக தன்னாதிக்கமுள்ள மாகாண அரசொன்றை நிறுவியுள்ளது.

முடிவாக, தேசியவாதம் ஒற்றுமையினை ஏற்படுத்தலாம் அல்லது ஒரு நாட்டை சிதைத்து பலவீனப்படுத்தலாம். சர்வதேச மட்டத்தில் தேசியவாதிகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பெருமளவிற்கு தேசிய சர்வதேச சூழ்நிலையினை சீர்குலைக்கின்றன. சர்வதேச முரண்பாடுகளில் 70 % மானவை சுயநிர்ணய உரிமைக்காக சிறுபான்மையினர் நடாத்தும் கிளர்ச்சிகளாலும் ஏகாதிபத்திய நலன்களாலும் ஏற்படுகின்றன. இன்று தேசியவாதம் யுத்தங்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் தலைமை தாங்கும் அக உணர்வாகவுள்ளது.

**Reference:**


01. Kohn, Hans, **The Idea of Nationalism**; A Study in its origins and Background, 1st edi, New York: Collier-Macmills,1944

02.Chavan.R.C ,**Nationalism in Asia**, sterling Publishers Pvt,Ltd, New Delhi,1973.

03. Pallmer D.Norman; Perkins, C.Howards **International Relation**; The World Community in Transition, Scientific book Agency, Calcutta, 1969.

04.Couloumis A.Theodore; Wolfe H.James, **Introduction to International Relation**; Power and Justice Prentice - Hall of India Pvt. Ltd. NewDelhi,1986

05.Smith D.Anthony, **Nation and Nationalism in A Global Era,** Polity Press, 1995.

# கனவுச் சிலந்தி

செல்வன் ச.சசீதரன்
இரண்டாம் வருடம்

நேற்றொரு கனவு கண்டேன் ;
கழுத்திலே துப்பாக்கி கட்டிய
குதிரைகளும்,
நீலமன்றிய, செவ்வலை நதிகளுமாய்
நேற்றொரு கனவு கண்டேன்.

பார்வையே மொழிகளாய்,
கரிய ஆடை தரித்து,
என்னை யாரோ கடந்து போனார்கள் ;

மரங்களில் எல்லாம்
பட்டை உரித்த,
தடங்களில் இருந்து
பஞ்சு வெள்ளையாய் வழிந்தது,
திரவம் ஏதோ....
நெளிகின்ற புழுக்களில்,
மாலை அணிந்து,
சவுக்கு மரமாகக் கூந்தல் விரித்து
எங்கோ வெறித்தபடி வந்தாள்,
ஒருத்தி...

முழந்தாளுக்குக் கீழே,
கம்புக் குச்சியைக் கட்டிக்
கொண்டு,
தவழ்ந்தது குழந்தை ஒன்று...
தொடர்பு அறுந்ததாய்,
அலைவரிசைக் கோளாறாய்
நேற்றொரு கனவு கண்டேன்.

கண்ட கனவு, இன்று
பிடுங்கிக் கொண்டது,
என்னையும்,
என் சுயத்தையும்....
இப்போது,
சற்று அதிகமாகவே,
கடம் வாசிக்கிறது இதயம்;

கண்களை மூடிக் கண்டவை,
விழி அவிழ்ந்த பின்னும்
விடாது துரத்துகின்றன...

விசாரக் குழியில் விழுந்து,
மனது, வலைபின்னியும், அவிழ்த்தும்...
இருப்பது எந்த உலகு ?
எனது சகலதுமே விழித்துக் கொண்டதா?
அன்றி, கனவுப் பிரதேசம்
நேற்றிரவு விழுங்கிவிட்டதா, என்னை?
பிரமகத்தியாய் , என்
பின்னாலே, கனவின் தட்... தட்... தட்...
திரும்பிப் பாராது ஓடுகிற
திருடனாய் இன்று, நான்...

என்ன இது?
எதனதன் நிழல், என்மீது
கவிகிறது இப்படி....?

பகுத்தறிவு பேசிய,
கனவுக்கு முன்னதான, தைரியம்
காற்றிழந்த 'பலூனாக,'
கைகளோ பஞ்சாங்கம் தூக்கியபடி...

பிளேற்றோவும்,
ஃபிரெய்டும், தூசுதட்டப்படுகிறார்கள்
"அடிமன நினைவுகளின்
ஆதிக்கமாமே கனவு...."
அறிவியல் சொன்னதை
பிரதியீடு செய்தது, மனது...

நேற்றைய படுக்கையில்,
உடல் கிடக்கு முன்,
நிகழ்ந்தவைகளை மீட்டியதில்,
கடைசியாய் 'பேப்பர்' பார்த்து
அனுப்பிய அப்பிளிகேஷன்,
சந்திக் கடையில், சகபாடி ஒருவனோடு
அடித்த அரட்டை,
தம்பியின், ஓ.எல். பெறுபேற்றில்
பறந்த நாலு கொடிகள் (கொடி = F)
இவையன்றி, ஏதும்
சங்கதியாய் விழவில்லை....!

அப்பால்,
அப்பாவின் அலுமாரி துழாவிப்
படித்ததில்,
கம்பனின் மண்டோதரியும்
இளங்கோவின் கண்ணகியும்
மூளைக்குள் குந்தி,
அவஸ்தைகள் புரிந்த படி....

அச்சறுக்கையாய் எனைச்
சுற்றி வேலியிட்டு,
நக்கலாய்ச் சிரித்தது அக்கனவு...
இயல்பு குலைய
எனது உள்ளுக்குள்
சிதிலமாகி....
சீ... என்ன நரகமிது?
பிரக்ஞை அறுந்து போய்
சமகாலம் மறந்து போய்,
கனவுச் சுழிக்குள்ளே, நான்...

இப்போதெல்லாம்-
நிழல் விழாத மனிதனாய் , நான்....
நேற்றிரவு கண்ட கனவே
என் நிழலாகிப் போனதால்...

# வளிமண்டலச் செய்மதிகளும் வானிலை முன்னறிவிப்பும்

**க. சிவகரன்**
**உதவி விரிவுரையாளர்**
**புவியியற்றுறை**

மரபுரீதியான வானிலை முன்னறிவிப்புச் செயல்முறைகளில் இருந்துவந்த இடர்ப்பாடுகளை நீக்கியதுடன் உலகம் முழுமைக்குமான வானிலை அவதானச் சாத்தியப்பாட்டை ஏற்படுத்தியமை வளிமண்டலச் செய்மதிகளின் பயன்பாட்டின் முக்கிய பங்களிப்பாகும். மரபுரீதியான வானிலை முன்னறிவிப்பு எனும் பொழுது மேற்பரப்பு நிலையங்கள் கடல் நிலையங்கள், மேல்வளிமண்டல அவதானிப்பு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட பொதுப்பார்வை வானிலைப் படங்களை அடிப்படை யாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வானிலை முன்னறிவிப்பு ஆகும். வெப்பநிலை,மழைவீழ்ச்சி, காற்று, அமுக்கம், ஈரப்பதன், கதிர்வீச்சு, கட்புலனாகும் தன்மை, முகில்கள் போன்ற வானிலை மூலகங்களை மரபு ரீதியான கருவிகள் மூலம் அவதானித்துப் பெறப்படும் அவதானங்களை அடிப்படையாகக்கொண்டு பொதுப்பார்வைப் படங்களை உருவாக்கி அவற்றை அடிப்படையாகக் கொண்டு இம்முன்னறிவிப்பு மேற் கொள்ளப்படுகின்றது. மிக அண்மைக் காலம் வரையும் இம்முன்னறிவிப்பு முறையே உலகின் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வந்து உள்ளது.

வளிமண்டலச் செய்மதிகள் விண்வெளியில் மிதக்கவிடப்பட்டமையும் கணனிகளின் பிரயோகம் விருத்தி அடைந்தமையும் தொலைக்காட்சி ஊடாக வளர்ச்சியும் மரபுரீதியான வானிலை முன்னறிவிப்பில் விடுபட்டு செய்மதிப்படங்களை அடிப்படையாகக் கொண்ட வானிலை முன்னறிவிப்பிற்கு அடிப்படை யாயிற்று. தொலைக்காட்சி வானிலை முன்னறிவிப்பிற்கு ஆரம்பத்தில் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்ட இம்முறை இன்று இலங்கை போன்ற விருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் சாத்தியமாக உள்ளது.

இன்று உலகில் வானிலை தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய முக்கியமான மூன்று மார்க்கங்கள் காணப்படுகின்றன. அவை:


(அ) மரபு ரீதியான மேற்பரப்பு வானிலை அவதான நிலையங்களிற் பெறப்படும் தரவுகள். இவை மிக நீண்ட காலப்பகுதிகளைக் கொண்டிருக்கின்றன.

(ஆ) மேல் வளிமண்டலத்திற் பெறப்பட்டு வருகின்ற வானிலைத் தரவுகள்

(இ) செய்மதிகளின் துணையுடன் பெறப்படும் தரவுகள் என்பனவாகும்.


இவையாவும் இன்றைய வளியியல், காலநிலையியல் என்பவற்றிற்கு அடிப்படையாக உள்ளன. அத்துடன் இவற்றின் அடிப்படையிற் பெறப்படும் வளியியல்,

காலநிலையியல் உண்மைகள்,குறித்த நேர வளிமண்டல நிலையான வானிலை தெளிவும் அடுத்து நிகழக் கூடிய பொதுவான வானிலை செயல்முறையை முன்னறிவிப்புச்செய்யவும் வேண்டிய பின்னணியை விளக்குகின்றன. இன்றைய வானிலை அவதானிப்பு ஒழுங்கமைப்பைப் பின்வரும் விளக்கப் படம் காட்டுகின்றது.




விளக்கப்படம் I: வானிலை அவதானிப்பு ஒழுங்கமைப்பு
ஆதாரம்: Dr.A.W.Molottala , 1992, SOBA Enviornmental Publication - Sri Lanka.


வளிமண்டலச் செய்மதிகளின் பயன்பாடு பொதுவாக குறுங்கால வானிலை முன்னறிவிப்புகட்குப் பயன்படுவனவேயாகும். இவைகுறித்த கால அளவுகளில் தகவல்களை புவிக்கு அனுப்பிவிடுகின்றன. வளிமண்டலத்தரவுகளை பெறக்கூடிய முதற்செய்மதி 1959ல் மிதக்க விடப்பட்டது.இதுU.S.Aயின்Vanurd and Explorer செய்மதியாகும். U.S.A நாற்பது தொடக்கம் ஐம்பது வரையான வளிமண்டலச் செய்மதிகளை மிதக்க விட்டுள்ளது. வளிமண்டலந செய்மதிகள் இரண்டு வகைப்படுவன. ஒன்று முனைவு ஒழுங்குச் செய்மதிகள் இலை தாழ்வான சுற்றுவட்டத்தை கொண்டவை ஐந்நூறு கிலோ மீற்றர் தொடக்கம் ஆயிரத்து ஐந்நூறு கிலோ மீற்றர் உயரத்தில் இரண்டு முனைவுகட்கும் இடையே பயணம் செய்வன இவற்றின் பாதையை விளக்கப்படம் இரண்டு காட்டுகின்றது.




விளக்கப்படம் 2: முனைவு ஒழுங்கு செய்மதிகளின் பாதை
ஆதாரம்: ANN HENDERSON - SELLERS PETER.J ROBINSON (1986) Contemporary Climatory U.K.Ltd.

இரண்டாவது வகை வளிமண்டலியற் செய்மதிகள் முனைவு ஒழுக்கு செய்மதிகளைவிட உயரத்தில் நிலைகொள்பவை. இவை ஏறத்தாள முப்பத்தையாயிரம் கிலோமீற்றர் உயரத்தில் மத்திய கோட்டிற்கு சமாந்தரமாக நிலைத்திருப்பவை. புவிச் சுழற்சியுடன் இணைந்து அசைவன. இவை, அவை நிலைகொண்டுள்ள அமை விடத்தில் இருந்து குறித்த வளிமண்டலப் பகுதியை அளவீடு செய்வன. இவற்றை புவிஇருக்கைச் செய்மதிகள் என அழைக்கலாம். இவற்றின் நிலைத்திருக்கை மையங்களையும் அளவீடு செய்யக் கூடிய புவிப்பரப்பையும் பின்வரும் விளக்கப்படம் காட்டுகின்றது.

b) COVERAGE BY GEOSTATIONARY SATELLITES




Imaging and telecommunications coverage ..............

Images within this area used quantitatively — — — —

முனைவு ஒழுங்குச் செய்மதிகள் ஆக TIROS, NOAA, NIMBUS என்பன காணப்படுகின்றன. புவிஇருக்கைச் செய்மதிகள் ஆக SMS (Synchronous meterological Satellites) செய்மதிகள் உள்ளன. இவைGEOS, Meteosat, Himawari என்பனவையாகும். வளிமண்டலச் செய்மதிகளில் TTROS/NOAA செய்மதி தொடர்கள் 1960 முதல் U.S.A யினால் அனுப்பிவைக்கப்பட்டன. இவை வானிலைத் தரவுகளுடன் கடல் மட்ட வெப்பநிலை, கடல் மீன்வளம் காணப்படும் இடங்கள் என்பவற்றை அறிவித்தன. Nimbus தொடர் செய்மதிகள் 1964முதல் 1981 வரையும் NASA வினால் மிதக்க விடப்பட்டவை. GOES (Geostationary Operation Environmental Statellites) செய்மதிகள் GOES - West மேற்கு அமெரிக்காவையும் பசுபிக் சமுத்திரத்தையும் அவதானிக்கின்றன. GOES - East கிழக்கு அமெரிக்காவையும் அந்திலாந்திக்கையும் அவதானிக்கின்றன. Meteo sat ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தை சேர்ந்நாரும் Meteo sat 1977 நவம்பரில் மிதக்கவிடப்பட்டது; 1979ல் செயலிழந்தது. Meteo sat -2 1981ல் மிதக்கவிடப்பட்டு இன்றுவரை செயற்படுகின்றது.

வளிமண்டலச் செய்மதிகளின் அடிப்படையிலான வானிலை அவதானிப்பு "செய்மதி மூலமான தொலையுணர்வு (Satellite Remote Sensing) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இத்தொலையுணர்வு ஒழுங்கு மின்காந்த அலைகளை பயன்படுத்துவதன் மூலமே வடிவமைக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக் கதிர்வீசலின் வடிவமான மின்காந்த கதிர்வீசல் (Eletro magnetic Radiation) பண்புகளை உணர்கருவிகள் மூலம் உணருவதன் மூலம் புவிமேற் பரப்பு தொடர்பான வெவ்வேறு தகவல்களை செய்மதிகள் தகவல் விம்பங்கள் ஆக்குகின்றன. இவற்றில் வளிமண்டலதிற் பாவும் கதிர்வீசல் பண்புகளை கணிப்பீடு செய்வதன் அடிப்படையிலேயே வானிலைத் தரவுகள் பெறப்படுகின்றன. ஞாயிற்றுக் கதிர்வீசல் குற்றலை வடிவங்களில் வளிமண்டலத்தை அடைகின்றது. இதனால் வளிமண்டல இயக்கத்திற்கு வேண்டிய சக்தி பெறப்படுகின்றது. முகில்களின் குத்தான பரம்பல், நீர்க்கொள்ளவு என்பனவற்றின் அடிப்படையில் கதிர்வீசலை உறிஞ்சிக்கொள்ளும் அளவு தீர்மானிக்கப்படுகின்றது. முகில்களின் பண்புகட்கு ஏற்ப புவிக்குப் பயன்படாது வெளியே செல்லும் கதிர்களின் அளவும் தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் வளிமண்டலச் சக்தி பரிமாற்ற ஒழுங்கு பெரிதும் முகில்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. கதிர்வீசல் தொடர்பான தகவல்களை செய்மதிகளின் உணர்கருவிகள் பதிவுசெய்வதன் மூலம் வளிமண்டலத்திற் காணப்படும் முகில்கள் தொடர்பான தரவுகள் பெறப்படுகின்றன. பெறப்பட்ட குத்தான முகிற் பரம்பற் செய்மதிப்படங்களே வானிலை முன்னறிவிற்பிற்கு அடிப்படையாகின்றன. செய்மதிப் படங்களில் நன்கு பரீட்சயமான வானிலை ஆய்வாளர்கள் இச்செய்மதிப்படங்களை பரிசீலிக்கின்றனர். கீழே அயன இடை ஒருங்கல் வலயத்தை தெளிவாக காட்டும் செய்மதிப்படம் காட்டப்படுகின்றது.




METEOSAT image (visible channel) for 7 July 1979 showing clearly the position of the ITCZ identified by the band of cloud close to the equator over Africa and the adjacent Atlantic Ocean. (METEOSAT image supplied by the European Space Agency).

முகிற்பரம்பல் பண்புகள் ஒரு பிரதேச வானிலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்றின்போக்கு என்பவற்றை குத்தான முகிற்பரம்பற் படங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வு கூறமுடியும். பொதுவாக ஒரு பிரதேச பருவகாலங்கள் நிலை ஏனைய வானிலை ஒழுங்கு விதிகள் பற்றி ப தெளிவான அறிவு உள்ள ஓர் காலநிலையாளன் முகிற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அடுத்த சிலமணிநேரங்களில் நிகழப்போகும் வானிலையை முன்னறிவிப்புச் செய்துவிடுவான்.

செய்மதிப்படங்களுடன் நன்கு பரீட்சயமான பின்பு முகில்களின் பண்புகளை ஆய்வாளர்கள் மேலும் தெளிவுபடுத்திக்கொள்ள முடிகின்றது. திரண்மழைமுகில்களின் பரம்பல் தெளிவான வானம் தென்படல் என்பவற்றைக் கண்டறிவது போன்று முகிற்கோலங்களை அடிப்படையாகக்கொண்டு புயல்மையங்களையும் சூறாவளி மையங்களையும தெளிவாக அடையாளம் செய்ய முடியும். இதனால் வளிமண்டலச் செய்மதிகளின் துணையுடன் செய்யப்படும் வானிலை முன்னறிவிப்பு மிக்க பயன் உள்ள முன்னிறிவிப்பாகவும் காணப்படுகின்றது.

வளிமண்டல செய்மதிகளின் வருகை வானிலை முன்னறிவிப்பிற்கு பெரிதும் உதவி வருவதுடன் தொடர்ச்சியாக பெறப்படும் வானிலைத் தரவுகள் காலநிலை ஆய்வுகட்கும் மிக்கபயன் உடையன ஆகின்றன. குறிப்பாக சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை தொடர்பான தரவுகள் வெவ்வேறு பருவகாலங்களில் வானிலை ஒழுங்குகள் தொடர்பான தரவுகள் காலநிலையின் விருத்திக்கு வழிவகுத்துள்ளன. இலங்கை போன்ற சிறிய நாடுகட்கும் இன்று இத்தொழில்நுட்பம் பயன்படுத்தக் கூடியதாக உள்ளமையால் எமது பிரதேச வானிலை காலநிலை தொடர்பான மேலதிக விளக்கங்களை நாம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இனிவரும் காலங்கள் அமைந்திருக்கும்.

**Reference:**


(1) Ann Henderson - Sellers Peter J Robinsom (1986)
**Contemporary Climatology** Long man Group.

(2) Ayoade J.O (1985) **Introduction Clipmatology For the Tropics:**
**John Wiley and Sons NewYork.**

(3) Barry R.G. and Chorley R.J.(1981)
**Atmosphere Weather and Climate**
Fletcher and Son Ltd. Norwich.

(4) Curran Paul (1985) **Principles of Remote Sensing**
Long man Group limited England

(5) Uwe Radok (ed) (1987) **Toword Understanding Climate Change**
West view Press/ Boulder and London

# இலங்கையில் தொழிற்சங்க இயக்கம்

**வேலுப்பிள்ளை குணரத்தினம்**
சமூகவிஞ்ஞானத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## 1.0 அறிமுகம்:

அபிவிருத்தியடைந்த பொருளாதார அமைப்பாக யிருந்தாலென்ன அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதார அமைப்பாகயிருந்தாலென்ன தொழிற் சங்கங்களின் பங்கு மிகமுக்கியமான தொன்றாகும். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமாக இருப்பவை அந்நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களும் தொழில்களும் என்று குறிப்பிடலாம். இத்தொழில்களும் தொழிலகங்களும் மேம்படுவதற்கு வேண்டிய செல்வங் களுள் தொழிலாளர் செல்வம் முக்கியமானதும் இன்றி யமையாததுமாகும். எனவே உழைக்கும் மக்களே ஒரு நாட்டின் அச்சாணிகள். அவர்களை இயக்கரீதியாக பிணைத்து நிற்கும் நிறுவனமே தொழிற்சங்கமாகும். தொழிற்சங்கங்கள் பலம் வாய்ந்த சக்திகளாக மாறியதும் வேலைக்கமர்த்துவோர் மனப்போக்கிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மந்தைகளாக நடாத்தப்பட்ட தொழிலாளர் மனித சக்திகளாக மதிக்கப்பட்டனர். தொழிற்சங்கங்கள் அவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்தன. இதன் விளைவாக தொழிற்சங்கங்களை சட்டரீதியாக அங்கீகரிக்கவும் தொழில் நிலையங்களில் அமைதியை நிலைநாட்டவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததுடன் தொழில் உறவிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இங்கு தொழிற்சங்கம் பற்றிய பொதுவான குறிப்பும் இலங்கையின் தொழிற்சங்கங்களின் தோற்றம், வளர்ச்சி, தொழிற்சங்கங்களுக்கான சட்டக்காப்பு, குறைபாடுகள், ஆலோசனைகள் என்பன தெளிவாக்கப்பட்டுள்ளன.

## 1.1 பொதுவான விளக்கம்:

தொழிற்சங்கம் என்ற அமைப்பு பரந்த செயற்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது. இதன் வரைவிலக்கணத்தை ஒரு சில வார்த்தைகளில் விளக்கிவிடமுடியாது. வரலாற்றுப் பின்னணியில் மாக்சீய புரட்சிவாதக் கொள்கைகளை உள்ளடக்கி வளர்ந்து வந்த தொழிற்சங்க கோட்பாடுகள் பொருளாதார சிக்கல்கள் மலிந்துள்ள இன்றைய சூழ்நிலையில் பல்வேறு நாடுகளின் அரசியல் செல்வாக்குகளில் சிக்கி திரிவடைந்த போதிலும் அதன் அடிப்படைத் தத்துவம் இன்றும் மாறுபடாததாகவே உள்ளது.வெப்ஸ்(Webs) என்பவர்" தமது தொழில் வாழ்க்கையின் நிலைமை களையும் பராமரிக்கவும் வசதியாக்கி கொள்ளவும் உழைப்போர் உருவாக்கும் தொடர்ச்சியான ஒரு கூட்டமைப்பே தொழிற்சங்கமாகும்'' என்றார். எனவே தொழிற்சங்கமென்பது தொழிலாளர்களால் தாங்கள் ஆற்றும் தொழிலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் கூட்டுப் பேரத்தின் மூலம் தமது தொழில் நிபந்தனைகளையும் வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்றவும் சமூக அரசியல் பிரச்சினைகளில் தங்களது கருத்துக்கள் பிரதிபலிக்கும் நிலையினை ஏற்படுத்தவும் தொடர்ந்து நிரந்தரமாக இயங்க உருவாக்கப்பட்ட சுதந்திர ஜனநாயக அமைப்பாகும்.

தொழிலாளர் முதலாளிகளினால் சுரண்டப் பட்டதன் காரணத்தினாலேயே தொழிற் சங்கங்கள் உதயமாகின. முதலாளிகள் தொழிலாளர்களை உற்பத்தி பண்டமாக கணித்து மனிதாபிமானம் இன்றி நடத்தியமையினாலே தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தமது நலனை கவனிப்பதற்காக தொழிற்சங்கங்களை நிறுவும்படி நிர்ப்பதந்திக்கப்பட்டனர்.

தொழிற்சங்கங்கள் அரசியல் அமைப்பின் மூலம் சட்டரீதியாக இயங்குவற்கு வழிவகுக்கப்பட்டுள்ளன. ஆகவே சட்டத்தின் மூலம் நீதிகோரவோ, நீதிகோரியோ இயங்க உரிமையுடைய அமைப்பாகத் தொழிற் சங்கங்கள் விளங்குகின்றன. தொழிலாளர் நலன் கருதியும் தொழிலாளர் பாதுகாப்புக்கருதியும்

பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபடவும் தொழிற்சங்கங்களுக்கு உரிமையுண்டு. இவ்வாறான தொழிற்சங்கங்கள் பலவேறு கடமை களையும் கொண்டுள்ளன. அக்கடமைகளை மூன்று முக்கிய பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன:

(அ) உறுப்பினர் நலன்
(ஆ) நிறுவன நலன்
(இ) நாட்டு நலன்

**உறுப்பினர் நலன்:**

உறுப்பினர் நலன் என்று குறிப்பிடும் போது பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளலாம்.

(அ) உறுப்பினரின் உரிய கடமைத் தகுதிக் கேற்ப ஊதியம்.
(ஆ) தொழிற்பாதுகாப்பு
(இ) நல்ல சேவை நிபந்தனை
(ஈ) பேரதிய விடுமுறைகள்
(உ) ஓய்வுநேர வசதிகள்
(ஊ) தொழில் விபத்துப்பாதுகாப்பு, தொழில்விபத்து நட்டஈடு.
(எ) சிறந்த கடமைச் சூழ்நிலைகள்

தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினரின் நலன்கருதிப் பின்வரும் சமூகநலத்திட்டங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(அ) பரஸ்பரச்சகாயநிதி
(ஆ) ஓய்வு ஊதியநிதி
(இ) உறுப்பினர் கூட்டுறவு பண்டகசாலை.
(ஈ) தலைமைச் செயலகம்
(உ) உறுப்பினர் வீடமைப்புத்திட்டம்.
(ஊ) தொழிலாளர் கல்வித்திட்டம்.

**நிறுவன நலன்:**

தொழில் நிறுவனங்கள் செல்வச் செழிப்புடன் சீரோங்கி மேலேங்கும் பொழுதே நாடு பொருளாதார பூரிப்பு அடையமுடியும். நாட்டிலுள்ள மக்கள் அனை வரும் நல்ல வாழ்க்கை வசதிகளைப் பெற்று மனநிறைவோடும் மனமகிழ்வோடும் வாழும் பொழுதே நாட்டில் உண்மையான வாழ்க்கைத் தரம் உயருவதற்கு தொழிலகங்களின் உற்பத்திப்பெருக்கம் அதிகரிக்க வேண்டும். இதுவே நாட்டின் நலன்கருதி தாம் கடமையாற்றும் தொழிலகத்தில் உற்பத்திப்பெருக்கு நோக்குடன் தொழிலாளர்கள் உழைத்திடல் வேண்டும்.

**நாட்டுநலன்**

தொழிலாளர்களின் எண்ண ஓட்டத்தினையும் அபிலாசைகளையும் நன்கு உணர்ந்தறிந்து தொழிலாளர்களது பிரச்சினைகளை மனிதாபி மானத்துடனும் நல்லெண்ணப் பேச்சுவார்த்தை மூலமாகவும் அணுகும் புதிய தலைமுறை அவசியம். ஆகவே, நாட்டு நலன் கருதி எவ்வித திடீர் தீர்மானங் களும் எடுக்காமல் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்திடத் தொழிற்சங்கங்கள் முனைய வேண்டும். நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொழுது அங்கு இரு சாராருமே வெற்றி அடைகின்றனர்.

## 1.2 இலங்கையில் தொழிற்சங்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.

இலங்கையில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியை நோக்கும் போது இரு காலகட்டங்கள் தெளிவாகின்றன. 1935ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலம் தன்னியல்பான சங்கங்கள் இயங்கிய காலம். 1935ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையுள்ள காலப்பகுதி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் இயங்கிவரும் காலமாகும். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பெருந்தோட்டங்கள் பெருகி வளர்ச்சி பெற்றமையால் அதற்கென ஒரு தொழிலாளர் வர்க்கமும் உதித்தது. 1823ம் ஆண்டு தொடங்கி 1837 ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் முன்எப்போதாவது கண்டிராத அளவிலே கோப்பிப் பெருந்தோட்டங்கள் பெருந்தொகையாக அமைக்கப்பட்டன. ஆண்டொன்றுக்கு 10,000ஏக்கர் வீதமாகக் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கென உரிமையாக்கப்பட்டு 1841 ம் ஆண்டளவில் ஏறக்குறைய 80,000 ஏக்கர் பரப்பிலே கோப்பி பயிர்ச்செய்கை நடைபெற்று வந்தது. இந்தக் கோப்பிப் பெருந்தோட்டங்களைக் கவனித்துப் பராமரித்து வேலை செய்வதற்கு நன்கு பழகிப் பணியாற்றும் தொழிலாளர் தொகுதி தேவையாயிற்று. நாட்டிலே தொழிலாளர் கிடைக்காதமையினால் தோட்டத்துரைமார் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் தருவித்தனர். இத்தொழிலாளர்கள் சுரண்டலுக்கும் மற்றும் குறைபாடுகளுக்கும் மத்தியில் தொழிலாளர் தோட்டத்துக்கு தோட்டம் மாறியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவர்கள் ஒன்று பட்டுச் செயலாற்றும் நிலை ஏற்படவில்லை. எழுதுவினைஞர் ஏனைய ஊழியர்களும் கூட தொழிற்சங்கங்கள் அமைப்பில் நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் பரஸ்பர சலுகைக்கழகங்கள் மாத்திரம் உண்டாக்கியமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் பொதுச்சேவை பரஸ்பர

சேமலாபநிதிக் கழகம், வர்த்தக சேமலாப நிதிக்கழகம் முக்கியமானவை. சட்டசபைக்கு முறைப்பாட்டு மனுக்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் தொழிலாளர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இம்முறை அப்போதைய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவில்லை. எனவே தொழிலாளர்களின் குறைபாடுகளைத் தீர்க்கவும் அவர்களுக்கு நியாயமான ஊதியத்தையும் அவர்கள் வேலைசெய்யும் தலங்களைச் சீர்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு தேசியத் தலைவர்கள் தன்னியல்பான தொழிற்சங்கங்களை உருவாக்கினர். இப்படியான சங்கங்களுள் முதலிடம் பெறுவது 1893ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கமாகும். இச்சங்கத்திற்கு எச்.ஜே.சி.பெரேரா தலைமை தாங்கினார். 1893ம் ஆண்டு யூலை மாதம் வெளிவந்த சஞ்சிகையில் ஆனந்தக் கல்லூரி அதிபர். ஏ.ஈ. புல்ற்ஜென்ஸ் வெளியிட்ட கட்டுரை இத்தகைய சங்கம் அமைப்பதற்கு உயிரூட்டியது. இலங்கையில் தொழிற்சங்கங்கள் உருவாதலின் அவசியத்தையும் விடேமாக அச்சுத் தொழிலாளர் ஒன்று சேர்ந்து தொழிற்சங்கமொன்றை நிறுவுதலின் உசிதத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தை அமைத்த கொழும்பு எச்.டபிள்யூ.கேவ் கம்பனியைச் சேர்ந்த அச்சுத்தொழிலாளர்கள் 1893ம் ஆண்டு செப்டெம்பர் 12ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரை சம்பளம் கொடுப்பதில் ஏற்பட்ட தாமதத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தம் தோல்வி அடைந்தது மட்டுமன்றி இதனை நடத்திய தலைவர்கள் வேலையிலிருந்தும் நீக்கப்பட்டனர். ஆனால் இச்சங்க அமைப்பாளர்கள் தொழிற்சங்க வளர்ச்சியில் நம்பிக்கை இழக்காமல் செயற்பட்டனர்.

மேலும் பல வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. அவை சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம். (1896) யாழ்பாணச் சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்(1886) டைம்ஸ் ஓப் சிலோன் அச்சுத் தொழிலாளர் வேலைநிறுத்தம் (1898) துறைமுக தொழிலாளர் வேலைநிறுத்தம் (1901) என்பனவாகும். ஆயினும் இவற்றுள் மிகத் தீவிரமான போராட்டம் 1906ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பைச் சேர்ந்த 5000 மாட்டு வண்டக்காரர்கள் மேற்கொண்ட வேலைை நிறுத்தமாகும். கொழும்பு மாநகரசபையின் புதிய சட்டங்களுக்கு எதிராகவே இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வண்டிக்காரருடைய ஒன்றிய போராட்டம் நாட்டின் வர்த்தகப் பகுதியான புறக்கோட்டையை நிலை குலையச் செய்தது. 1912இல் நடந்த ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை தொழிலாளர் வர்க்கத்தால் செயலிழக்கச் செய்யலாம் என்பதை முதல் தடவையாக நிருபித்தது. சம்பள உயர்ச்சியும் ஏனைய கோரிக்கைகளையும் முன்வைத்த வேலை நிறுத்தம் நாட்டின் சகல ரயிலவேத் தொழிலாளர் களையும் ஒன்றிணைத்தது. இவ்வேலை நிறுத்தம் தோல்வி அடைந்த போதிலும் இலங்கைத் தொழிலாளர் சேமலாபநிதிச் சங்கத்தை அமைப்பதற்கு காரணமாக விளங்கியது.

1919ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் நலச்சங்கம் பொன்னம்பலம் அருணாசலம் தலைமையில் உருவாக்கப்பட்டது. இச்சங்கம் 1920 இல் இலங்கைத் தொழிலாளர் கூட்டுக்கழகம் ஆகமாறியது. 1922இல் ஏ.ஈ.குணசிங்காவின் தலைமையில் இலங்கைத் தொழிற்சங்கம் உருவாகியது.1923 பெப்ரவரியில் ஏ.ஈ.குணசிங்காவின் தலைமயில் பொது வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இவ்வேலை நிறுத்தம் மூன்று வாரங்களுக்கு தொடர்ந்தது. பல்வேறு தொழில் துறைகளையும் சகல இனப்பிரிவுகளையும் சார்ந்த 20000 தொழிலாளர்கள் இதில் பங்கு பற்றினர். நீண்ட காலமாக வழங்கப்படாமலிருந்த சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே இவ்வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கையாக அமைந்தது. இதன் பயனாக இச்சம்பள உயர்வு 1925ம் ஆண்டு வழங்கப்பட்டது.

இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் 1928ஆம் வருடம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் தனது முதற்கட்ட அமர்வை ஏ.ஈ.குணசிங்காவின் தலைமையில் நடத்தியது. மேலும் பல கோரிக்கைகளுடன் பின்வரும் கோரிக்கைகள் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. அவையாவன:

(1) தொழிற்சங்கங்களைச் சட்ட பூர்வமாக ஏற்றுக்கொள்ளுதல்.
(2) தொழிலாளர் நஷ்டஈடு
(3) நடுத்தீர்வு மன்றங்கள்
(4) பேறுகாலச் சலுகைகள்

1931ம் ஆண்டு (Times) பத்திரிகை நிறுவனத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் ஏ.ஈ.குணசிங்கா சத்தியாக்கிரக முறையில் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. கருங்காலிகளின் உதவியுடன் வேலை நிறுத்தத்தை முறியடிக்க முனைந்திருந் முதலாளிமாரின் மனதை மாற்றிற்று குணசிங்க அனுட்டித்த 5 நாள்

உண்ணாவிரதம். இவ்வேலை நிறுத்தத்தின் விளைவால் தொழிற் பிணக்குகள் உத்தரவுச்சட்டம் (Industrual Disputes Ordinance) 1931ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. இவ்வுத்தரவு தொழிற்பிணக்குகளை இணக்கங்களாலும் நடுத்தீர்வுகளாலும் தீர்த்து வைக்க வழிவகுத்தன.

1935ம் ஆண்டு தொழிற்சங்க வரலாற்றிலே மைல் கல்லாகும். இவ்வாண்டிலேதான் தொழிற்சங்க 14ம் இலக்க உத்தரவுச் சட்டம் (Trade Union Ordinance 14 of 1935) பிறப்பிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கான விண்ணப்பம் தொழிற்சங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய விதிகள் ஆகியன இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. தவிர இக்கட்டளைச்சட்டம் தொழிற்சங்களுக்கு சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொடுத்தது. இச்சட்டத்தின்படி தொழிங்சங்க மொன்றின் நோக்கம் பின்வருவனவற்றுள் ஒன்றாகவோ அல்லது பலவாகவே அமைதல் வேண்டும்.

(1) தொழிலாளருக்கும் தொழிலாளருக்கு மிடையேயுள்ள உறவு, தொழிலாளருக்கும் தொழில் கொள்வோருக்குமிடையேயுள்ள உறவு தொழில் கொள்வோருக்கும் தொழில்கொள்வோருக்குமிடையேயுள்ள உறவு இவற்றை நெறிப்படுத்தல்.

(2) வேலைத்தலத்திலுள்ள நிலைமைகளைச் சீர்படுத்தல்

(3) தொழிற் பிணக்குகளில் தொழிலாளருக்காக அல்லது தொழிற் சங்கதத்துக்காக தோற்றுதல்

(4) வேலை நிறுத்தங்கள் - கதவடைப்புக்களை நடத்துதல், ஊக்குவித்தல், பணஉதவி கொடுத்தல்.

இச்சட்டம் தொழிற்சங்க மொன்றில் ஆகக் குறைந்தது ஏழுபேராவது அங்கத்தவர்களாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டது.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கம் இலங்கைத் தொழில் கொள்வோர் சம்மேளனமாகும். (Employers: Federation of Ceylon) இச்சம்மேளனம்1936ம் ஆண்டு ஜனவரி 31ந் திகதி பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை மோட்டார் ஓட்டிகள் சங்கம் ( Sri LAnka Chauffers Association) இலங்கை தொழிலாளர் சங்கம் (Ceylon Labour Union) இலங்கை வர்த்தக சங்கம் (Ceyloin Mercantile Union) இரத்மலானை புகையிரதத் தொழிலாளர் சங்கம் (Ratmalana Railway Workers Union) இலங்கை இந்திய தோட்டத்தொழிலாளர் சம்மேளனம் (Ceylon Indian Estate Workers Fedration) ஆகியன பதிவு செய்யபட்பட்டன.

1943இல் 53 வேலை நிறுத்தங்கள் 1944இல் 92 வேலைநிறுத்தங்கள் 1945இல் 81 வேலை நிறுத்தங்கள் 1946இல் 156 வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றன. இலங்கை தொழிற்சங்க வரலற்றிலே 1946ம் ஆண்டு குறிப்பிடத்தக்க வருடமாகும். அக்டோபர் மாதம் 17ம் திகதி ஆரம்பமான பொதுவேலை நிறுத்தம் 22ம் திகதிவரை நீடித்தது. ஊதியத்தின் உயர்வு, தொழிற்சங்க உரிமைகள் தொழிலாளர் நலனுக்கான வசதிகள் வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கைகளாக இருந்தன. அரசாங்க பரிபாலன அதிகாரியாகக் கடமையாற்றிய சர்.ஜோன் ஹோவாட்டின் தலையீட்டினால் வேலை நிறுத்தம் சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

1948ஆம் ஆண்டு அரசாங்கத்தால் தொழிற்சங்கங்கள் சீர்திருத்த இலக்கம் 15ஐக் கொண்ட சட்டம் அமுலாக்கப்பட்டது. இச்சட்டம் சிறைச்சாலை உத்தியோகஸ்தர், பொலிஸ்படையினர் போன்றோர் தொழிற்சங்கங்களை அமைப்பதை தடைசெய்தது. 1949ம் ஆண்டு 94 வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றன. தொழில் தகராறுகள் பெருகவே 1950ம் ஆண்டு தொழிற் பிணக்குகள் சட்டம் (Industrial Disputes Act.) உருவாக்கப்பட்டது.

1970 ம் ஆண்டில் தொழிற்சங்கங்கள் சீர்திருத்த இலக்கம் 24 ஐக் கொண்ட சட்டப்படி நீதிபரிபாலன உத்தியோத்தர், முப்படையினர் ஆகியோர் தொழிங் சங்கங்களை அமைக்க முடியாது. மேலும் இதன் பிரகாரம் சமாதான அதிகாரிகளையும் உயர் அதிகாரி களையும் தவிர்ந்த ஏனையோர் வேறு தொழிற் சங்கங்களுடன் இணையவும் கலக்கவும் நிதிகளை ஒதுக்குவதற்கும் வழிவகுக்கிறது. தவிர வெளியார் ஒருவரைப் பொதுக்கூட்டமொன்றில் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ தெரிவு செய்வதற்கு இச்சட்டம் இடம் கொடுக்கிறது. 1977ம் ஆண்டின் பின் ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆண்டு கால ஆட்சியில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது அரசாங்கத்தின் எதிர்நடவடிக்கையும் தொழிலாளர் வேலை இழப்பும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முழுமையாகக் கட்டுப்படுத்தியது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அரசாங் கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொழிற் சங்கங்களை அரச இயந்திரத்தினால் கட்டுப்படுத்தும் தன்மையைக்கொண்டதாக மாறிச் செல்வதை

அவதானிக்க முடிகின்றது.

## 1.3 தொழில் சங்கங்களுக்கான சட்டக் காப்பு.(Legal Protection for Trade Union)

தொழில் சங்கக் கட்டளைச்சட்டத்தினால் தொழில் சங்கங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழில் சங்க சட்டம் பிரிவு 2.(Trade Union Ordinanc Section:2) இதன்படி தற்காலிக, நிரந்தர தொழிலாளர்கள் தொழில் தருநர்களின் இணைப்பே தொழிற் சங்கமாகும். தொழிற்சங்கம் ஒன்று தொழிலாளர் தொழில் தருநர்களின் உறவை நெறிப்படுத்தவும் தொழில் நிபந்தனைகளை முன்வைக்கவும் தொழில் பிணக்கில் பிரதிநிதித்துவம் செய்யவும் தோற்றுவிக் கப்படலாம்.

தொழில் சங்கம் ஒன்று தொழில் சங்கப் பதிவாளாரிடம் பதிவு செய்யப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட தொழில் சங்கமொன்று பதிவு செய்யப்பட்டதும் சட்ட நபரத்துவ அந்தஸ்த்தை அடைகின்றது. இதன்மூலம் வழக்கிடவும் ஒப்பந்தக் கடப்பாட்டை உருவாக்கவும் சொத்துக்களை தம்பெயரில் வைத்திருக்கவும் முடிகின்றது. பிரிவு 26,27 இன்படி பதிவு செய்யப்பட்ட தொழில் சங்க நடவடிக்கையின் போது குடியியல் தீங்கியல் பொறுப்பு களுக்கு உள்ளாக்க முடியாது.

தொழிங்சங்கங்களின் கோரிக்கைகள் கூட்டு உடன் படிக்கை இணக்கத்தீர்வு, நடுத்தீர்ப்பு, தொழில் நீதிமன்றம், தொழில்மன்று அல்லது நியாயசபை போன்ற வழிமுறைகள் மூலம் அடையலாம். இவற்றுக்கப்பால் தொழிற்சங்கம் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கையே வேலை நிறுத்தமாகும். வேலை நிறுத்தம் என்பது தொழில் சங்கத்தின் ஊடாக வேலை செய்ய கூட்டாக மறுப்பதாகும். வேலை நிறுத்தம் செய்ய 21 நாளுக்கு முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும். ஆயுதப்படை, சிறைச்சாலை அலுவலர்கள் போன்ற அத்தியாவசிய வேலையில் ஈடுபடுகின்றவர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாது.

வேலைநிறுத்தம் செய்கின்ற தன்மையைக் கொண்டு அதன் சட்டம் பெறுமானம் தீர்மானிக்கப் படுகின்றது. தொழிலாளர் வேலை நிலையத்தினுள் புகாது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது. இது சட்ட முரணாவதில்லை. மேலும் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் வேலை நிலையத்தினுள் செல்வர். எந்த வேலையையும் செய்யாது தங்களது வேலை இருப்பிடத்தில் அமர்ந்திருந்து வேலை முடிவுறும் நேரத்திற்கு வேலை நிலையத்தை விட்டு அகன்று செல்வர். இலங்கையில் இதன் சட்ட நிலைமையை வெளிப்படுத்தும் கட்டுப்படுத்தும் முற்தீர்ப்புகள் எதுவும் இல்லை. வேலை நிறுத்தம் நிகழும் அதேவேளையில் கோரிக்கைகளை சுலோகங்களாகவும் பதாதைகளாகவும் தாங்கி பவனி வரலாம். பொதுச் சொத்துக்களுக்கு பங்கம் இன்றியும் பொதுத்தொல்லை இன்றியும் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது மட்டுப் படுத்தப்பட்ட அளவில் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

தொழில் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப் பட்ட அளவிலும் பார்க்க குறைந்த வேலையை அல்லது தாமத வேலையைச் செய்வது பிறழ்நடத்தை யாகும். முழுவேதனத்தையும் பெற்றுக்கொண்டு உரியளவு வேலையைச் செய்யாதிருப்பது வேலையை தொழில் தருநர் முடிவுறுத்தத்தக்க குற்றச் செயலாகும். மேலும் தொழிலாளர் தொழில் தருநருக்கு துணை நிலைச் செயல்களைச் செய்ய மறுப்பதோடு தொடர்புடைய பிறதொழிற்சங்கங்களையும் தூண்டி தமது தொழில் தருநருக்கு தாக்கத்தைக் கொடுக்கும் செயலை தொழில்சங்கச் சட்டங்களாலோ வழக்குத் தீர்ப்புக்களாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவ்வாறு செய்யும் தொழிலாளர்களை தொழில்தருநர் வேலையில் இருந்து அகற்றி விடுவதோடு இழப்பீடு கொடுக்கவும் மறுக்கலாம்.

## 1.4 தொழிற்சங்கங்களில் காணப்படும் குறைபாடுகள்:

(1) முகாமைத்துவத்திலும் தொழில் உறவுமுறையிலும் பல புதிய மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் தொழிற்சங்கங்களைப் பொறுத்தமட்டில் நாட்டிலே எதுவித மாறுதல்களும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பழைய பாணியிலேயே பொரும்பாலான தொழிற்சங்கங்கள் இயங்கி வருவதனால் இன்று தொழிற்சங்க இயக்கம் செயலற்று ஆட்சியாளர் கைப்பொம்மையாக இருக்கின்றது.

(2) முகாமை வளர்ந்துவரும் அதேநேரத்தில் தொழிற்சங்கங்கள் ஒற்றுமையின்றி ஒரு நிறுவனத் திலேயே பிளவுபட்டு தொழிற்பிரிவு அரசியல் ரீதியாக பல சங்கங்கள் அமைக்கப்பட்டு செயலற்று இருக்கின்றன.

(3) இன்றைய தொழிற்சங்கள் பெரும்பாலாக அரசியல் ரீதியாக அமைந்து அரசியல் தலைவர்களது விருப்பு வெறுப்புகட்கேற்ப இயங்கி வருகின்றன.

(4) அரசாங்கத்தில் மாறுதல்கள் ஏற்படும் பொழுது

தொழிற் சங்க அங்கத்துவத்திலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு அரசாங்க கட்சியைச் சேர்ந்த தொழிங்சங்கமே பலம் வாய்ந்ததாக அமைந்து விடுகின்றது.

(5) ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத்தை விட்டு ஆட்சியில் மாறுதல் ஏற்படும் பொழுது தொழிலாளர்கள் மாறுவதன் மூலம் தொழிலாளர்கள் தமது நலனையே முக்கியமாகக் கருதுகின்றனர் என்பது வெளிப்படை.

(6) அரசாங்க தொழிற்சங்கத்தில் சேர்ந்து தமது நலனைத் திறம்பட பேணமுடியுமென்ற தொழிலாளர் கருதுவதற்கு முகாமையினரதும் ஆட்சியாளரதும் நடைமுறை நடவடிக்கைகளும் காரணகர்த்தாவாக அமைகின்றன. இதனால் தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு ஒரு சில சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்துகின்றன.

(7) இதனால் ஆட்சியில் மாற்றம் ஏற்படும் போது அரச நிறுவனங்களில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவற்றினுள் சிலர் வேலை இழப்பதும் வேறு பலர் இடமாற்றப்படுவதும் சர்வசாதாரணமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

(8) அரசியல் ரீதியான தொழிற்சங்க நடவடிக்கையினால் தொழில் நிறுவனம் திறமையின்றி ஊழல்கள் பெருகி உற்பத்தி குன்றிப் பெரு நஷ்டத்தில் இயங்கி நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவினை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தினை குறைப்பதற்கு ஒரு காரணியாக அமைகின்றது. மேற்படி பொதுவான சில குறைபாடுகளை இலங்கையில் அவதானிக்கலாம்.

## 1.5 தொழிற்சங்க வளர்ச்சிக்கு இன்றியமையாதவை:

மேற்போந்த கருத்துக்களிலிருந்து இலங்கையில் தொழிற்சங்கங்கள் வளர்ச்சி அடைய வேண்டுமாயின் சில அடிப்படை அம்சங்களை கவனத்தில் கொள்ளவேண்டும். அவையாவன:

(1) தொழிற்சங்க வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் முக்கிய காரணம் போட்டி மனப்பான்மையுடன் பல்வேறு தொழிற்சங்கங்கள் புற்றீசல்போல் இயங்கி வரும் நிலையாகும். இது மாறவேண்டும் . ஒரே தொழிலகத்தில் பல தொழிற்சங்கங்கள் இயங்குவதால் கருத்து மோதல்கள் பூசல்கள் ஏற்பட ஏதுவாகின்றது.

(2) தொழிற்சங்கத் தலைவர்கள் பொறுப்புணர்ச்சி யுடைடயவர்களாக விளங்கி தொழிலாளர்களை முன்னேற்றப் பாதையில் முனைந்து செல்ல வழிவகுக்க வேண்டும்.

(3) தொழிற் பிணக்குகள் ஏற்படும் போது நாட்டின் நலன் கருதி பேச்சுவார்த்தை மூலம் இரு சாராரும் தீர்க்க எத்தனிக்கும் மனப்பான்மை வளர வேண்டும்.

(4) காலத்தையும் மக்களின் அபிலாசைகளையும் உணர்ந்து செயலாற்றத் தொழிற்சங்கங்கள் முன்வரவேண்டும்.

(5) நல்லாற்றல் வாய்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய தொழிற்சங்கங்களுக்கு மட்டுமின்றித் தாங்கள் கடமை செய்யும் நிறுவனங்களுக்கும் சிறப்பாக நாட்டிற்கும் இன்றியமையாதவராவர். எனவே தொழிலாளர்கள் நல்லாற்றல் வாய்ந்தவர்களாக தொழிலாளர் கல்வியில் தொழிற்சங்கங்கள் நாட்டம் செலுத்தவேண்டும்.

(6) தொழிற்சங்கங்கள் சமுதாய மாற்றங்களின் கருவி களாகத் திகழவேண்டும்.கல்விக்கு ஊக்கமளித்தல், சுகாதார சேவைகளில் ஈடுபடுதல், சேமிப்புக்கு ஊக்கம் கொடுத்தல், கலாசார விவகாரங்கள் போன்ற பல விடயங்களில் தொழிற்சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

(7) இவற்றுடன் திட்டமிட்டமுறையில் பெருகும் சனத்தொகையின் காரணமாக நாட்டில் தோன்றியுள்ள மிகவும் சிக்கலான பிரச்சினைகளை உணர்ந்து குடும்பத்திட்டம், குடும்ப சுகம் ஆகியவற்றினைத் தொழிலாளருக்கு எடுத்துக்கூறவேண்டும். தொழிலாளர் நிறைவான நல்வாழ்வு வாழ குடும்ப நலமுறைகளை விளக்கி அவர்களை நல்வழியில் செயற்பட வேண்டியதைச் செய்தல் தொழிற்சங்கங்களின் இன்றியமையாத கடமையாகும்.

## 1.6 முடிவுரை.

ஆகவே தொழிற்சங்கங்களின் பிரதான குறிக்கோள் அதன் உறுப்பினர்களது நலன் பேணுதலாக அமைந்திருந்தாலும் அதன் பாரம்பரிய குறிக்கோளாக அமைந்துவிடக்கூடாது. உறுப்பினரின் நலன்கருதி நிறைந்த வேதனத்திற்காகவும் சிறந்த சேவை நிபந்தனைகளுக்காகவும் பரந்த கடமைச் சூழ்நிலைகளுக்காக மட்டுமே தொழிற்சங்கங்கள் வாதிடுவது போரிடுவது ஒரு குறுகிய மனப்பான்னை நோக்கினையே ஓங்கும். எனவே தொழிற்சங்கங்கள் நாட்டு மக்களது அபிலாசைகளையும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையையும் நன்கு உணர்ந்தறிந்து அதற்கொப்பத் தமது தொழிற்சங்க இயக்கங்களைக் கட்டிக்காத்து வளர்த்திடல்வேண்டும்.

# இன்றைய தமிழர் பண்பாட்டில் இசை பெறும் இடம்

**செல்வன். ஆர். ஜெகநாதன்**
மூன்றாம் வருடம், நுண்கலைத்துறை

இசைக்கலையானது ஒலியின் ஒழுங்க மைப்பிலேயே தங்கியுள்ளது.இது இயற்கையில் காணப் படுகின்றவற்றை உள்வாங்கி இயற்கை வளத்தின் ஊடாக ஒரு ஒலியமைப்பில் தருகின்றது. ஒலிகள், ஒலிகளின் அர்த்தங்கள், குரல்களின் ஏற்ற இறக்கங்கள் என்பன இசையின் தளங்களாக உள்ளன. உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்து வதற்கு இந்த ஒலிகள் தேவைப்படுகின்றன. உண்மையில் இசை என்பது உணர் உந்துதல் உள்ள ஒரு அசாதாரண நிலையில் மனிதனிடத்தில் தோன்று வதாகும். இதனால் எப்பொழுதும் ஒலியின் பிரதான தளமாக மனிதப் பிறவியையே கொள்வார்கள். இசை ஒலிக்குறிகளைக் கொண்டதனால் அது மொழிக்கு அப்பாலான ஒரு கவர்ச்சியைக்கொண்டது. இதனால் இசையை ஆத்மாவின் மொழி எனக் கூறுவர். இவ் இசை மனித உள்ளங்களை கவர்வதில் மிகமுக்கியமாக உள்ளது. மனிதர்கள் தொடக்கம் மிருகங்கள் வரை இசையினால் கவரப்படுகின்றன. புல் மரம் போன்றவையும் கூட இசையின் தாக்கத்தை பெறுவனவாகவே கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இசை மனித வாழ்க்கையில் மிகமுக்கியமான தொன்றாகும். இந்த வகையில் தமிழர்களது பண்பாட்டிலும் இசையானது ஒருமுக்கியமான இடத்தை வகிக்கின்றது.

தமிழர் பண்பாட்டில் இசைபெறும் இடத்தினை நாம் நோக்குகின்ற பொழுது, தமிழர்களது வாழ்க்கையிலும், சமூகத்திலும், நடைபெறுகின்ற நிகழ்வுகளையும், அந்நிகழ்வுகளில் பயன்படுத்தப் படுகின்ற இசையையும் அவ் இசையில் பயன்படுத்து கின்ற கருவிகளையும் அவ் இசைக் கருவிகளைப் பயன் படுத்துகின்றமுறைகளையும், அதனைப் பயன்படுத்துகின்றவர்களையும் அவர்களுக்கு சமூகத்தில் உள்ள அந்தஸ்தையும், எந்தெந்த நிகழ்வுகளுக்கு எந்தெந்த பாணிகளில் பயன்படுத்துகின்றார்கள் என்றும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வெகுமதிகளையும் ஒரு நிகழ்வுக்கு பயன்படுத்தப்படும் இசை அந்நிகழ்வுகளுக்கு முக்கியமா என்றும் அதாவது ஒரு நிகழ்வுக்கு பயன்படுத்தப்படும் இசை அந்நிகழ்வுக்கு அவசியமா? அந்த இசை இல்லாமல் அந்த நிகழ்வு இடம் பெறமாட்டாதா? என்றும் பார்க்க வேண்டும். அப்போதுதான் தமிழர் பண்பாட்டில் இசைக்கு கொடுக்கப்படும் இடம் பற்றி அறியக் கூடியதாக இருக்கும்.

தமிழர்களது வாழ்க்கையிலும் சமூகத்திலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளை நாம் பொதுவாக சமய நிகழ்வுகள், வாழ்க்கை வட்ட நிகழ்வுகள், பொது வைபவங்கள் எனப் பார்க்கலாம். சமய நிகழ்வுகளை கோயில் சார்ந்த நிகழ்வுகள், கோயில் சாராத

நிகழ்வுகள் என்ப்பார்க்கலாம். வாழ்க்கை வட்ட நிகழ்வுகளை பிறந்தநாள் கொண்டாட்டம், மங்கைப் பருவ கொண்டாட்டம், திருமணக் கொண்டாட்டம், மரணச் சடங்கு போன்ற நிகழ்வுகளாகப் பார்க்கலாம். பொதுவைபவங்கள் என்னும் போது கலாசார விழா திறப்புவிழா, அடிக்கல்நாட்டு விழா, பட்டமளிப்பு விழா, அரங்கேற்றவிழா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.இவை தவிர தொழில் நிகழ்வுகள், பொழுது போக்கு நிகழ்வுகள் எனப்பார்க்கலாம்.

சமய விழாக்களில் ஆலயம் சார்ந்த விழாக் களையும் அதில் பயன்படுத்தப்படும் இசையையும் இசைக்கருவிகளையும் அதனை இசைப்பவர்களையும் அவர்களுக்கு கொடுக்கப்படும் வெகுமதிகளையும் அவர்களுக்கு சமூகத்தில் உள்ள அந்தஸ்தையும் இவ்விழாவில் இசையின் முக்கியத்துவத்தையும் நோக்குவோம். இதில் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள், உற்சவவிழாக்கள் என்கின்ற நிகழ்வுகள் நிகழ்கின்றன. இறைவனை இசைவடிவாக இந்துக்கள் கருதுவதனாலும் இசையால் வசமாகா இதயம் எது என்பதற்கேற்ப இசையால் இறைவனை மகிழ்விப்பதனாலும் இந்நிகழ்வுகளில் இசைமுக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நித்திய பூசைகளில் இடம் பெறும் இசையினை நோக்கும் போது பண்ணிசைபாடுதல், மந்திர உச்சாடனம், தேவார திருப்பாசுரங்கள் பாடுதல், பூசையின் போது தவில் அடித்தல், மணிகள் ஒலித்தல் என்பன இடம்பெறும் விசேட நாட்களில் இடம் பெறும் இசையினையும் திருவிழாக்காலங்களில் இடம் பெறும் இசையினையும் நோக்கும் போது இறைவனுக்கு பூசை இடம் பெறும் போதும் தீர்த்தம் ஆட இறைவன் செல்லும் போதும் இசை முக்கியம் பெறுகின்றது. இவற்றில் பண்ணிசை பாடுதல் பண்ணிசையின் போது டோலக் , ரவ்பானம், சுருதிப்பெட்டி, சல்லாரி, மரக்காஸ் போன்றன இசைத்தல், மந்திர உச்சாடனம், பூசையின் போது மேளம், நாதஸ்வரம், சுருதிப்பெட்டி, சல்லாரி போன்றன இசைத்தல், தெய்வத்தின் புகழ்பாடிய வண்ணம் ஆட்டம் போன்றன இடம் பெறும். அத்தோடு தீர்த்தம் ஆட இறைவன் செல்லும் போது மேற்கூறியவற்றுடன் காவடியாட்டம் அதற்கான பாடல் அதற்கேற்ப டோலக், ரவ்பானம், சல்லாரி போன்றன இசைக்கப்படும். இவை தவிர ஆகமம் சாராத ஆலயங்களிலும் சாஸ்திரிய மயப்படுத்தப்படாத இசைகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு மந்திர உச்சாடனம் சாஸ்திரிய மயப்படுத்தப் படாமல் நாட்டாரியற்பாங்கில் அத்தெய்வத்தின் புகழ் பாடுவதாக அமையும். இதில் கூடுதலாக உடுக்கு எனும் கருவி பாவிக்கப்படும். இதில் பாவிக்கப்படும் பாடல் அம்மானை, குளுத்தி போன்றனவாக அமையும். அத்தோடு ஆலயத்தின் விசேட நாட்களில் தற்பொழுது இசை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இதில் பக்திப்பாடல்களும் அதற்கான இசையும் நிகழ்த்தப்படும். இதில் டோலக்,ஒகன், தபோலா, வயலின், சுருதிப்பெட்டி. மரக்காஸ் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றோடு கரகாட்டம், வசந்தன், நாட்டுக்கூத்துக்கள் இடம் பெறுவதும் மரபாகும்.

ஆலயம் சாராத சமயக் கொண்டாட்டங்களை நாம் நோக்குகின்ற பொழுது தினசரி அனாதை இல்லங்கள், சமய மடாதினங்கள் போன்ற இடங்களில் இடம் பெறும் பூசைகள், விசேடநாட்களில் இல்லங்கள், குருகுலமடங்கள், பாடசாலைகள், மன்றங்கள், நிறுவனங்களில் இடம்பெறும் நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். குறிப்பாக தைப்பொங்கல், நவராத்திரி பூசை, கார்த்திகை விளக்கீடு, தீபாவளி, சித்திரைப் பிறப்பு, என்பனவற்றைக் குறிப்பிடலாம். இங்கு இடம் பெறும் இசைகளாக தேவாரம் பாடுதல், காயத்திரி மந்திரம் உச்சாடனம் செய்தல், சத்திய சாயிபாவா பஜனை, பண்ணிசைபாடுதல், இசைக்கச்சேரிகள் இடம் பெறுதல் என்பனவும் அப்போது டோலக், தபேலா, சல்லாரி, சுருதிப்பெட்டி, ஓகன், மரக்காஸ் போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படும்.

சமயக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படும் இசைகள் இச்சமய நிகழ்வுகளுக்கு முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது. இதில் மந்திர உச்சாடனம் தேவாரம், மணிஒலித்தல் போன்ற இசைகள் இல்லாமல் பூசைகள் அனேகமாக இடம்பெறமாட்டாது. எனவே இவ் இசைகள் இந்நிகழ்வுகளுக்கு அவசியமானதாக காணப்படுகின்றது. ஏனைய பண்ணிசைபாடல், இசைக்கச்சேரிகள் போன்றனவும் அதில் பாவிக்கப்படும் இசைகள் போன்றன இந்நிகழ்வுகளுக்கு அவசியமானதாக அமையாத

போதும் அவைகளைப் பயன்படுத்துவது பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இதனால் இவைகள் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகவுமுள்ளது.

சமயக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படும் இசைக்குரியவர்களை நோக்கும் போது இதில் மந்திர உச்சாடனம் என்பவற்றிற்கும் அப்போது ஒலிக்கப்படும் மணிக்கும் உரியவர்களாக குருக்கள் என்பவர்கள் இருப்பார்கள். இவர்கள் அதிகமாக பிராமணர்களாகவே இருப்பார்கள் ஆனால் பிராமணர் இல்லாதவர்களும் குருக்களாக இருப்பர். இவர்களில் பிரதம குரு, சீடர்கள் என்கின்ற வகையில் காணப்படுவர். பிரதம குரு அறிவு, அனுபவம் போன்றவற்றில் சிறந்தவராக இருப்பார். இவருக்கு பொன்னாடை வழங்கப்பட்டிருக்கும். அத்தோடு இவர்களுக்கான சம்பளம் ஆலய நிருவாகத்தினால் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படும். இவர்கள் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் மதிக்கப்படுவர். சிறு ஆலயங்களில் உள்ள பூசகர்கள் பரம்பரையினராக அல்லது குருசீட முறையில் காணப்படுவர். இவர்கள் கூடுதலாக தொண்டடிப்படையில் பூசைசெய்வர். சிலவேளைகளில் அக்கிராம மக்களால் தட்சணை வழங்கப்படும். பண்ணிசை பாடுபவர்கள் அக்கிராமத்தின் தொண்டர் நிலையங்களை சார்ந்தவர்களாக காணப்படுவர். இவர்கள் தொண்டடிப்படையிலே இதனைச் செய்வர். சிலவேளை ஆலயத்தால் இதற்கென ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கும். இதற்கான கருவிகளை ஆலய நிருவாகம் கொடுத்திருக்கும் மேளம், நாதஸ்வரம், சல்லாரி போன்ற கருவிகளை இயக்குபவர்கள் அதற்கென ஒரு சாதியைக் கொண்டிருப்பர். இவர்களை 'மேளகாரர்' எனக் கூறுவர். இவர்களின் அறிவு, அனுபவம், புலமை என்பவற்றிற்கு ஏற்ப மேளம் வாசிப்பவருக்கு பொன்னாடையும், நாதஸ்வரம் வாசிப்பவருக்கு மெடலும் வழங்கப்பட்டிருக்கும். இவர்களுக்கான சம்பளத்தை ஆலய நிருவாகம் மேளம் அடித்த நாட்களுக் கேற்பவும் அவர்களின் தகுதிக்கேற்பவும் கொடுக்கும் முறை காணப்படுகின்றது.

பக்தி சார்ந்ததும் பொழுதுபோக்குத் தன்மை கொண்ட நிகழ்வுகளான கொம்புமுறி, கரகாட்டம், வசந்தன், நாட்டுக்கூத்து, தெய்வம் ஆடல் போன்ற நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் இசைகளை நோக்கும் போது கொம்புமுறி விளையாட்டில் இந்நிகழ்வு நடைபெறுகின்ற நாட்கள் முழுவதும் இசைப் பயன்பாடு பல்வேறு பாணிநிலைப்பட்டதாக பயன்படுத்தப் படுகின்றது. வசந்தன் கூத்தோடு தொடர்புடைய நாட்டாரியற்பாடல்கள் அதற்கான இசைக்கென உடுக்கு, மத்தளம், சல்லாரி போன்றனவும் பாவிக்கப்படும். இக்கொம்புமுறியில் வருகின்ற பாடல்களையும் அதற்கான இசையையும் பாடுவதற்கும் இசைப் பதற்குமென அண்ணாவியார் ஒருவரை உள்ளடக்கிய ஒரு குழு இருக்கும் இக்குழு அக்கிராம மக்களால் பிரிக்கப்பட்ட வடசேரி, தென்சேரி பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாக இருப்பர். இவர்கள் இதனை எவ்வித வருமானமும் இன்றியே செய்கின்றார்கள். இது ஆலய முன்றலிலேயே செய்யப்படுகிறது.

கரகாட்ட நிகழ்வையும் அதில் பயன்படும் இசையையும் நோக்கும் போது இதில் சமயம் சார்ந்த கதைகளை நாட்டாரியற் பாங்கில் பாடும் முறையும் அதற்கேற்ப மத்தளம், உடுக்கு, சல்லாரி போன்ற கருவிகள் கொண்டு இசையமைக்கும் தன்மையும் காணப்படுகின்றது. இப்பாடல்களுக்கும் இசைக்கும் 12-15 வயதுக்கிடைப்பட்ட பெண்கள் ஆடுவர். இதில் நன்றாக மத்தளம் அடிக்கக்கூடிய அண்ணாவியாரும் நன்றாக பாடக்கூடிய ஒருவரும் சேர்ந்த ஒரு குழு இதனை முன்னின்று நடத்தும். இவர்களை 'கரகாட்டக்காரர்கள்' என பொதுவாக அழைப்பர். இந்நிகழ்வை ஆலய உற்சவங்களில் செய்வர். இவர்களுக்கான வெகுமதியாக பணமும் சிலவேளை இவர்களின் களைப்புத்தீர மதுபானமும் வழங்கப்படும். இவ்வெகுதியை இக்கரகாட்ட நிகழ்வை முன்நின்று நடத்துபவர்கள் கொடுப்பர்.

கரகாட்டம் போன்றே வசந்தன் அமைந்திருக்கும். ஆனால் இதில் கிராமங்களின் வாழ்வியல் அம்சங்களான அருவிவெட்டல், சூடுபோடல் போன்றன பாடல்களாக பாடப்படும். இதற்கேற்ப மத்தளமும் சல்லாரியும் பாவிக்கப்படும். அத்தோடு இதனை 12-15 வயதிற் கிடைப்பட்ட ஆண்பிள்ளைகள் ஆடுவர், இவர்கள் கால்களில் சலங்கையும் கைகளில் இரு கோல்களும் வைத்திருப்பர். இவர்கள் ஆடும் போது கால்களில் கட்டப்பட்ட சலங்கையும் கைகளில் வைத்திருக்கும் கோல்களினால் அடித்துக் கொள்ளும் போது ஒரு

இ.ரிய ஓசை உருவாகும். இவ்வசந்தன் கூத்தினை அண்ணாவியாரும் பாட்டுக்காரர்களும் உள்ளடங்கிய ஒரு குழுவே செய்யும். இவர்களை 'வசந்தன் கூத்துக்காரர்' என அழைப்பர். இவர்கள் ஆலய உற்சவங்களில் இதனைச்செய்வர். இவர்களுக்கு பணமும் மத்தளம் அடிப்பவர், பாட்டுப்பாடுபவர்கள் ஆகியோருக்கு மதுபானமும் வெகுமதியாக வழங்கப்படும். இது விழாக் குழுவினரால் வழங்கப்படும்.

தமிழர் மத்தியில் இன்றும் காணப்படுவதும் தமிழர்களின் தேசிய நாடகவடிவம் எனக் கூறப் படுவதுமான ஒன்றே நாட்டுக் கூத்தாகும். இது வடமோடி, தென்மோடி என இருவகையில் ஆடப்படும். இது இதிகாச புராணக் கதைகளை கூடியளவு பாடல்களாகப் பாடி ஆடுவதாகும். இதில் மத்தளம், சல்லாரி என்பன பாவிக்கப்படும். அத்தோடு இதை ஆடுபவர்களின் சலங்கையும் ஒரு இனிமையான இசையைத்தரும். இதில் அண்ணாவியாரே முக்கியம் பெறுகின்றார். 'இவரோடு பிற்பாட்டுக்காரர், சல்லாரி போடுபவர் இணைந்திருப்பர், அண்ணாவியாருக்கு அவரின் மத்தளம் அடிக்கும் அவரின் அனுபவத்திற்கும், புலமைக்கும் ஏற்ப பொன்னாடை போட்டுக் கௌரவிக்கப்படுவார். தற்பொழுது பணம் வெகுமதியாக கொடுக்கப்படுகிறது. அண்ணாவியார் பரம்பரை பரம்பரையாகவும் குருசீட முறையிலும் சமூகத்தில் காணப்படுவர்.

தெய்வம் ஆடும் போது உடுக்கு பாவிக்கப் படுகின்றது. இதற்கென ஒரு பரம்பரை இருக்கும். மற்றும் பறைமேளக் கூத்தில் பாவிக்கப்படும் இசையை நோக்கும் போது இங்கு பறை, சொர்நாலி, தம்பட்டம் என்பன பாவிக்கப்படும். இதனை பறையர் என்கின்ற சாதியினரே செய்வர். இதில் அறிவு, அனுபவம், புலமை என்பவற்றிற் கேற்ப மூப்பன் என்கின்ற பட்டம் கொடுப்பர். இவரே அச்சமூதாயத்தில் உயர்ந்தவராக காணப்படுவார். இது ஒரு குலத்தொழிலாகவே கொள்ளப்படுகிறது.

வாழ்க்கைவட்ட நிகழ்வுகளையும் அதில் பயன்படுத்துகின்ற இசைகளையும் நோக்கும் போது முதலில் பிறந்தநாள் கொண்டாட்டம் அமைகின்றது. இக்கொண்டாட்டத்தின் போது மேளம், நாதஸ்வரம் என்பன ஒரு சில இல்லங்களிலேயே இசைக்கப்படும். அனேகமாக ஓடியோக் கெசட்டுக்களே பாவிக்கப் படுகின்றன. அடுத்து மங்கைப் பருவ கொண்டாட்டத்தை நோக்கும் போது இங்கு மேளம், சல்லாரி, நாதஸ்வரம் சினிமாப்பட ஓடியோக் கெசட் என்பன பாவிக்கப் படுகிறது. மேளமும், நாதஸ்வரமும் பக்திப்பாடல் களுக்கோ அல்லது சினிமாப்பாடல்களுக்கோ வாசிக்கப் படும். இதனை 'மேளகாரர்களே வாசிப்பர். இவர்களுக் கான பணத்தை அவர்களின் தகுதிக்கேற்ப வீட்டுக்காரர் கொடுப்பர். இவர்களின் தகுதி இவர்கள் பெற்ற பொன்னாடை, மெடல் என்பவற்றின் மூலம் கணிக்கப்படும். ஆனால் இவ் இசை இல்லாமலும் இக்கொண்டாட்டம் நடைபெறுவது மனங்கொள்ளத் தக்கது.

திருமணக் கொண்டாட்டம் இடம் பெறும் போதும் மேளம், நாதஸ்வரம்,சல்லாரி, சுருதிப்பெட்டி என்பன பயன்படுத்தப்படுகின்றதோடு சினிமாப்பாடல்களும் பயன்படுத்தப்படுகின்றன. இக்கொண்டாட்டத்தின்போது மேளம், நாதஸ்வரம், சல்லாரி, சுருதிப்பெட்டி என்பன மாப்பிள்ளையை அழைத்துவரும் போதும் தாலிகட்டும் போதும் முக்கியம் பெறுகின்றது. தாலிகட்டும் போது சில வீடுகளில் பூசகரால் மந்திர உச்சாடனம் செய்யவும் படுகின்றது. மேளவாத்திய இசையை மேளகாரர்களே வழங்குவர். பெண் வீட்டார் விருந்தினர் களிப்போடு இருக்க சினிமாப்பபாடல்களை பயன்படுத்துகின்றனர். அத்தோடு தற்காலத்தில் மேளகாரர் இசையை பதிவுசெய்து ஓடியோ கெசட்டில் பாவிக்கும் முறையும் உள்ளது. இச்சினிமாப்பாடல்களையும் மேளதாள இசையையும் (ஓடியோக் கெசட் மூலம்) வழங்க தனியார் அமைப்புக்கள் உள்ளன. இவர்களுக்கு நாட் சம்பளம் வழங்கப்படும். இவ் இசை இல்லாமலும் இக் கொண்டாட்டம் நடைபெறும்.

மரணச் சடங்கில் பயன்படுத்தப்படும் இசையை நோக்கும்போது இங்கு பறை, இதனோடு இசைக்கப்படும் சொர்நாலி என்பன முக்கியம் பெறுகின்றது. இவ் இசையானது மரணச் செய்தியை மற்றவர்களுக்கு தெரிவித்து அவர்களையும் மரணவீட்டிற்கு அழைப்பித்து அத்துக்கத்தில் பங்கேற்க உதவுகின்றது. எனவே இப்பறையும் சொர்நாலியும் தொடர்புபடுத்தும் சாதனம் போலத் தொழிற்படுகின்றது. இவ் இசையை பறையர் என்கின்ற ஒரு சாதியினரே இசைக்கின்றனர்.

இது ஒரு குலத்தொழிலாகவும் உள்ளது. இவர்களில் அறிவு, அனுபவம், புலமை ஆகியவற்றில் சிறந்த ஒருவர் இருப்பார். இவரை மூப்பன் என அழைப்பர். இவரே இக்குழுவிற்கு தலைமை வகிப்பர். இவர்களுக்கு பணம் வழங்கப்படும். இது அவர்களின் சேவையைப் பொறுத்து அமையும். ஆனால் இன்று இவ்இசை இல்லாமலும் மரணச் சடங்குகள் நடைபெறுகின்றன.

பொது வைபவங்களில் இடம்பெறும் நிகழ்வு களையும் அதில் பயன்படும் இசைகளையும் நோக்குகின்ற பொழுது காலாசார விழாவும் அதில் பயன்படும் இசையும் இவற்றுள் ஒன்றாகவுள்ளது. கலாசார விழாவானது பல்வேறுநிகழ்வுகளை உள்ளடக்கிய ஒன்றாகவுள்ளது. இதில் முதலாவதாக விருந்தினரை வரவேற்கும் நிகழ்வு இடம்பெறும். இதில் அவர்களை பேண்ட் வாத்தியங்களின் இசையோடு வரவேற்கின்றனர். பின்தேசிய கீதம் இசைக்கப்படும். கலாசார நிகழ்வுக ளிலும் அந்நிகழ்வுகளுக்கேற்ப இசை பயன்படுத்தப் படுகின்றது. இங்கு கூத்து, நாடகங்கள் போன்ற நிகழ்வுகளும் அதற்கேற்ப இசையும் இடம்பெறும். இது போன்றே திறப்பு விழா, அடிக்கல் நாட்டுவிழா போன்ற நிகழ்வுகளிலும் அங்கு வருகின்ற விருந்தினரை வரவேற்க பேண்ட் வாத்தியம் பயன்படுத்தப்படுகின்றது. இப் பேண்ட் வாத்தியங்களை இசைக்க கூடுதலாக பாடசாலை மாணவர்களே ஒரு குழுவாக இருப்பர். இதற்கான வாத்தியங்களை பாடசாலைகளுக்கு அரசாங்கம் வழங்கியிருக்கும். சிலவேளை இதற்கென தனியார் குழுக்களும் உண்டு அரங்கேற்ற விழாவின் போது இசைபயன்படுத்தப் படுகின்றது. அதாவது ஒரு அரங்க நிகழ்வு முதலில் மேடையேறும் போது நடைபெறுவதே அரங்கேற்ற நிகழ்வாகும். இந்நிகழ்வினை என்ன நிகழ்வு மேடை ஏறுகின்றதோ அந்நிகழ்வுக்கேற்ப இசை இடம் பெறும் இதே போன்றே பட்டமளிப்பு விழாவின் போது மேளம், நாதஸ்வரம், சல்லாரி போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. இதனை மேளகாரர்களே செய்வர்.

தொழில் நிகழ்வுகளின் பொழுதும் இசை பயன்படுத்தப்படுகின்றது. அருவி வெட்டும் போது, சூடுபோடும் போது , களைபிடுங்கும் போது, மீன்பிடிக்கும் போது என பல்வேறு தொழில் நிகழ்வுகளில் இசை பயன்படுத்தப்படுவதைக் காணலாம். "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்பதற்கேற்ப தொழில் நிகழ்வுகளில் இசை பயன்படுத்தப்படுவது மரபாகி விட்டது. இவ் இசையானது கிராமிய பாடல்களாகவே காணப்படுகிறது. இன்று ஒவ்வொரு இல்லங்களிலும் வானொலி, தொலைக்காட்சி என்பன காணப்படுகின்றன. இவற்றிலே அதிகமாக சினிமாப்பாடல்களே ஒலிபரப்பப் படுகின்றது. அத்தோடு பக்திப் பாடல்களும் பயன் படுத்தப்படுகின்றன. இவற்றோடு இன்று 'இசை நிகழ்வுகள்' என்ற பெயரோடு கிராம பொது இடங்களில் இசை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. இவற்றில் மேற்கத்தைய இசைக்கருவிகளான ஓகன், வயலின், கிற்றார், ஆர்மோனியம், தபேலா போன்றனவே கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றது. இதனை இசைக் குழுக்கள் தங்கள் வருமானத்திற்காகவும் மக்களின் பொழுது போக்கிற்காகவும் செய்கின்றன. இவர்கள் 'டிக்கட்' விற்பனை மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். இவ் இசை நிகழ்வானது தமிழர் பண்பாட்டில் மேற்கத்தைய இசையின் தாக்கத்தையே புலப்படுத்துகின்றது. அத்தோடு கல்விச்சாலைகளிலும் இசை ஒரு பாடமாக பயிலப்பட்டும் வருகின்றது.

இவ்வாறாகத் தமிழர் பண்பாட்டிலே இசையானது வாழ்வியலோடு இணைந்த ஒன்றாக காணப்படுகின்றது. இசையானது உணர் உந்துதல் உள்ள ஒரு அசாதாரண நிலையில் மனிதர்களிடத்தில் தோன்று வதனால் அவர்களின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் இசை பயன்படுத்தப்படும் ஒன்றாக போய்விட்டது. இதற்கும் மேலான இவர்களின் மதம் இறைவனை இசைவடிவாக நோக்குகின்ற காரணத்தினாலும் இசை இப்பண்பாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனாலும் தமிழர்களுடைய ஆரம்பகால இசையின் நோக்கும் இன்றைய நோக்கும் வேறுபட்டுச் செல்லும் தன்மையும் காணப்படுகின்றது. இது மேற்கத்தைய இசையின் மேலாண்மை தமிழர் பண்பாட்டில் காணப்படுவதையே புலப்படுத்துகின்றது.

**உசாத்துணைநூல்:**

தமிழர் தோற்கருவிகள் - ஆர்.ஆளவந்தார்.

# தீர்வுப் பொதி

செல்வன் சே.சுரேஷ்குமார்
இரண்டாம் வருடம்



தீர்வுப் பொதியே
உன்னுள் இருப்பது
நாங்கள் உயிர்வாழும் காற்றா?
அல்லது
எங்கள் நிம்மதியை-
அரிக்கும் கறையானா?

✻

இன்று நாலா பக்கமும்
வேர்விட்டு ஆழமாய் பதிந்துவிட்ட
இனப் பிரச்சினையினை
வெட்டியெறியும் அரிவாளா?
அல்லது
நிர்ணயம் செய்யப்பட்ட
எங்கள் எல்லைகளை மடத்தனமாய்
கூறுபோட வந்த அரிவாளா?

✻

முடிவு எப்போது
என்று தெரியாமல்
இதயங்கள் முழுவதும்
தினம் தினம்
வேதனைகளை விதைத்து
கண்ணீரை அறுவடை
செய்யும் கண்களுக்கு
ஆறுதல் சுமந்து வந்த வைத்தியரா?
அல்லது
மேடைதோறும்
உன்னைப் பற்றி
விவாதங்கள் நடத்தி
நேரங்களை நகர்த்த வந்த-
அரசியல் வாதிகளின்
பொழுது போக்கு அம்சமா?

✻

இக் கேள்விகளுக்கு
முடியுமானால் பதில் சொல்
உன்னால் மட்டுமல்ல
உன்னைப் பெற்றவர்களாலும்
முடியாது என்பது
எங்களுக்கு தெரியும்
ஏனென்றால்
எங்கள் தேடல்களின்
தீர்வுகள் உன்னுள் இல்லை.
எரிகின்ற நெருப்புக்கு
எண்ணெய்தான்
உன்னுள் இருக்கிறது.

✻

உனக்குத் தெரியுமா
உன்பெற்றவர்களாலேயே - நீ
நான்கு பக்கமும் காவலிடப்பட்டு
கௌரவமான கைதியானது
உனக்குத் தெரியுமா?

✻

உன்னை!
தொட்டுப் பார்க்க பேச முடியாமல்
எங்கள் கைகளுக்கும் வாய்களுக்கும்
விலங்குகள் பூட்டப்பட்டுவிட்டது - ஆனால்
புரியாத விளக்கம் மட்டும்
எங்கள் காதுகளுக்குள்
தினம் தினம் ஓதப்படும்

✻

ஆனால்
என்றோ ஒருநாள்
உன்னை பிரசவித்தவர்களின்
ஆட்சியின் ஆயுட்காலம்
இறந்து உதிரும் போது
உன் உயிரும் உருகிவிடும்.

✻

மீண்டும் ஒரு
கறையானாய், காற்றாய்
அரிவாளாய், பொழுதுபோக்கு அம்சமாய்
உனக்கொரு சகோதரனோ, சகோதரியோ
பிறக்கக் கூடும்
அப்போதும் நாங்கள்
- - - - - - - - - ???

# கூத்தர்களது பார்வையில் கூத்தின் அன்றைய நிலையிலிருந்து இன்றைய நிலையின் இடம்

செல்வி. ப.பரமேஸ்வரி
மூன்றாம் வருடம் ~ நுண்கலை விசேடம்.

கூத்து எமது பாரம்பரிய நாடக வடிவமாகக் கணிக்கப்படுகின்றது. இக்கூத்து எமது பழைய கால மக்களது இதிகாசங்கள், புராணங்கள், வரலாறுகள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. சிறந்த கலைவடிவமாகவும் முக்கிய பொழுதுபோக்கா கவும் இலகுவாகக் கதைகளை எமக்குக் கூறவும் கூத்து ஆட்டப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் இந்த நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. இதுபற்றி கூத்தர்களிடம் கேட்டபோது அவர்கள் மிக மனவேதனையடைந்து கொள்கின்றார்கள். அவர்கள் இதுபற்றி; இதன் வளர்ச்சி பற்றி பல்வேறு கருத்துக் களைக் கூறுகின்றார்கள். இவர்களது கருத்தினைத் தந்து கூத்தின் தற்கால நிலைமையைப் புரிய வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கூத்தின் இன்றைய நிலைக்கு கூத்தர்கள் பல காரணங்களைக் கூறினர். இதில் முதல்நிலையில் காலச் சூழல் காணப்படுகின்றது. பழைய காலத்தில் நாட்டு நிலைமை பயங்கரமற்ற ஒரு சூழலாகக் காணப்பட்டது. இரவு பகலெல்லாம் மக்கள் சுதந்திரமாக எங்கும் நடமாடக்கூடிய காலம். இதனால் கூத்துக்கள் எந்த நேரத்திலும் ஆடுவதற்கு காலச்சூழல் எவ்வித தடை யாகவும் இருக்கவில்லை. அத்தோடு கூத்து ஆடுப வர்கள் மத்தியில் பல பிரச்சனைகள் எழுந்தாலும் அதைத் தீர்க்க ஊர்ப்பெரியவர்கள் ஈடுபட்டனர். அவர்களை எல்லோரும் மதித்ததனால் பிரச்சினைகள் உடனுக் குடன் தீர்க்கப்பட்டன. இப்படியான சூழ்நிலையில் கூத்தானது வெளித்தாக்குதல்கள் எதுவும் இன்றி வசதியாகப் பழகக் கூடிய சந்தர்ப்பத்தை உருவாக் கியது. ஆனால் தற்காலத்தில் ஒரு கூத்துப் பழகுவதற்கு எவ்வளவோ பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இரவில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலை பகலில் பழகுவ தென்றால் கூத்தர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. இதனால் கூத்துக்களின் வளர்ச்சியில் தடை ஏற்பட காலநிலை பிரதான பங்காற்றுகின்றது.

ஆரம்ப காலங்களில் கிராமப் புறங்களில் படிப்பது மிகக் குறைவு இதனால் அரசாங்கத் தொழில் செய்வோர் அருகியே காணப்பட்டனர். இவர்கள் விவசாயம் செய்வதிலேயேதான் சீவியத்தை நடத்தினர். இவர்களது பிரதான தொழிலாக வேளாண்மை செய்தல், வெற்றிலைத் தோட்டம் செய்தல் என்பன காணப்பட்டது. வேளாண்மை செய்வோர் அருவி வெட்டு முடிந்ததும் ஓய்வான நேரத்தைப் பெறுவர். இந்த ஓய்வு நேரத்தை கூத்துப் பழகுவது, பார்ப்பது ஊடாக இனிமையாகக்

கணிக்கலாம் என்ற எண்ணத்தின் காரணமாக கூத்து ஆடுவதற்கான ஆயத்தங்களை இவர்கள் செய்கின் றார்கள். இதனால் கூத்தின் வளர்ச்சியானது மேலும் மேலும் வளரத்தொடங்கியது. ஆனால் காலப்போக்கில் இந்த நிலை மாறத் தொடங்கியது. இக்காலத்தில் தேவைகள் அதிகம் அதனால் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் கூத்துப்பழக ஓய்வு கிடைப்பது அரிது இதனால் கூத்தின் நிலை வர வர மந்தகதி அடைந்து வருகின்றது.

பழைய காலங்களில் மக்கள் தேவைகள் மிகக் குறைவு இதனால் கூடியளவு பணம் இவர்களிடம் மிகுதியாக இருந்தது. ஒரு கூத்து ஆடுவதென்றால் கிட்டத்தட்ட அக்காலத்தில் ரூபா 25,000 அளவில் தேவைப் பட்டது. இத்தொகைப் பணத்தை அக்காலக் கூத்தர்கள் செலவு செய்யத் தயங்கவில்லை. கூத்துப்பழகத் தொடங்கினால் சிலவேளை ஒரு வருடமும் எடுக்கும் எனக் கூறப்படுகின்றது. சிலவேளைகளில் வேலைப்பளு காரணமாக நிறுத்தி பின்பு தொடர்ந்து ஆடுவர். இக்காலங்களில் அண்ணாவியாருக்குப் பணம், சிற்றுண்டி, தேனீருக்கான பணம், குடிவகைகளுக்குப் பணம் எனக் கூடிய தொகை வரும். இதைக் கூத்தர்கள்தான் செலவழிப்பர். ஆனால் தற்காலத்தில் தேவைகள் அதிகம் மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு போக கூடியளவு பணம் தேவைப்படுகின்றது. இதனால் இப்படியாகக் கூத்துக்குச்செலவு செய்ய அவர்களுக்குப் பணம் பற்றாக் குறையாகக் காணப்படுகின்றது. இதுவும் இப்போதையக் கூத்தின் நிலையில் பிரதான பங்கெடுக்கின்றது.

ஆரம்ப காலங்களில் கூத்துத்தான் மிகப்பிரதான பொழுது போக்கம்சமாகக் காணப்பட்டது. இதனால் எல்லோரும் கூத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். இதனால் கூத்து ஆடுவோர்க்கு ஒருவித ஆர்வம் ஏற்படுகின்றது. அது மட்டுமல்லாது அக்காலத்தில் கூத்து ஆடுவதுஒரு மதிப்பான செயலாகவும் கருதப்பட்டது. ஆரம்பத்தில் உயர்ந்தோர்தான் கூத்து ஆடுபவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் இந்நிலை மாறிவிட்டது என்றுதான் கூறவேண்டும். இப்போது பிறகலைகளின் தாக்கத்தினால் பல்வேறு பொழுது போக்கம்சங்கள் காணப்படுகின்றது. உதாரணமாக சினிமா, சிறுகதை, வானொலி என எத்தனையோ பொழுது போக்குச் சாதனங்கள் வந்து விட்டன. இது புதுமையாகவும் கவர்ச்சியாகவும் மக்களை இலகுவாக ஈர்க்கக் கூடிய நிலையில் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது குறைந்த செலவில் கூடிய பயனடையக் கூடியதாக உள்ளதால் எல்லா மக்களும் இவைகளின் பால் ஈர்க்கப்படுகின்றார்கள். இதனால் கூத்தின் மதிப்பு குறைந்து விடுகின்றது. இதனால் கூத்தர்கள் மிகவும் மனமுடைந்து கூத்தினைத் தொடர்ந்தும் ஆடும் மரபினை நிறுத்தக் கூடிய நிலைக்குத தள்ளப்படுகின்றனர்.

அக்காலத்தில் கூத்து ஆடும் இளைஞர்கள் நல்ல சத்துள்ள உணவுகள் சாப்பிட்டு நல்ல தைரியசாலிகளாகக் காணப்பட்டனர். இதனால் மணிக் கணக்கில் கூடியளவு களைப்பு இல்லாமல் ஆடுவர் ஆனால் இக்காலத்தில் இளைஞர்கள் மணிக்கணக்கில் ஆடும் தைரியமில்லாமல் காணப்படுகின்றனர் என்றே கூறவேண்டும். இவர்கள் கூடிய நேரம் களைப்பில்லாமல் ஆடமாட்டார்கள்.

அக்காலத்துக் கூத்துக்கள் ஆடத்தொடங்கினால் ஒரு நாள் இரவு முழுவதும் ஆடுவர். இக்காலங்களில் மக்கள் மகிழ்ச்சியுடன் விடிய விடிய இருந்து தங்கள் வசதிக்கேற்ப கூத்துப்பார்ப்பர். அவர்களுக்கு அலுப்போ சலிப்போ ஏற்படுவதில்லை காரணம் அவர்களது சொந்தக்காரர் ஒருவரோ பலரோ இக்கூத்தில் ஆடுவர். ஆனால் இக்காலத்தில் மக்களுக்கு வேலைப்பளு அதிகம் அதனால் இரவிரவாக இருந்து கூத்துப் பார்க்க அவர்களுக்கு முடியாது. அத்தோடு கூத்துப் பார்க்க அவர்களுக்கு ஆர்வமும் குறைவு இப்படியான காரணத்தால் கூத்து தற்காலத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளது.

பழைய காலத்தில் கூத்தை இயற்றுவதற்கு சிறந்த புலவர்கள் பலர் காணப்பட்டனர். இவர்கள் இயற்றும் கூத்துக்கள் மிகவும் இன்னிசையாகக் காணப்படும். அது மட்டுமல்லாது அக்காலத்து மக்கள் பரம்பரை பரம்பரையாக கூத்துக் கதைகளை அறிந்து வைத்திருப்பர். அதனால் அவர்களுக்கு கூத்துப் பார்க்க ஆர்வம் உண்டாகின்றது. ஆனால் இக்காலத்தில் சிறந்த கூத்துப் பாடல்களை இயற்றும் புலவர் இல்லை என்றே சொல்ல வேண்டும். கூத்துக்கதைகளை அறிந்தவர்களும் மிகக்குறைவு இதனாலும் கூத்தின் நிலையில் தளம்பல் ஏற்பட்டுள்ளது.

இக்காலங்களில் கூத்துப் பழக்கும் அண்ணாவிமார்கள் பரம்பரை பரம்பரையாக தமது வருங்காலச் சந்ததியினருக்கு கூத்துக் கலையை கையளிப்பர். இதனால் கூத்துக்கலை வளர வாய்ப்பேற் பட்டது. ஆனால் இக்காலத்து வருங்காலச் சந்ததியினரான குறிப்பாக இளைஞர்கள் கூத்துக் கலையைப் பழக விரும்புவதில்லை. இவர்களுக்கு வேறு கலைகளில் இருக்கும் நாட்டமே முக்கிய காரண மாகும். அத்தோடு அண்ணாவியாருக்கு அவர்களுக்குரிய இடத்தினை அரசோ, மக்களோ, வழங்குவதில்லை. இதனால் இவர்களுக்கு கூத்தினை வளர்க்க வேண்டிய ஆர்வம் குறைவாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இவர்கள் கட்டாயப்படுத்தியாவது தமது திறமையை தமது வாரிசுகளுக்குக் கொடுக்க ஆர்வமற்றுக் காணப்படுகின்றனர்.

நகரத்தார் கூத்தினை ஒரு மாற்றாந்தாய் பார்வையோடு பார்க்கின்றார்கள். கூத்தென்றால் அது பாமர மக்களுக்குரியது என்று இவர்கள் நினைக கிறார்கள் போலும் கூத்தில் முக்கியமாக தென்மோடி, வடமோடி என இரண்டு வகையுண்டு. அதில் தென்மோடி ஆட்டம் வடமோடியினை விட நுணுக்கமானது. இது பரத நாட்டிய உருப்படிகள் போன்றது. ஆடுவதும் கஷ்டம் அப்படிப்பட்ட கூத்தினை ஏன் படித்தவர்கள் பெரிதாக மதிப்தில்லை எனக் கூத்தர்கள் மனவேதனை யடைகின்றர்.

அந்தக் காலங்களில் பெற்றோர்கள் கூத்தில் கூடுதலாக ஆர்வமுள்ளவர்கள். தங்களது பிள்ளைகளை ஒரு கூத்திலாவது பங்கு பெற வைக்கவேண்டும் எனப் பாடுபடுவர். அப்போதுதான் தங்கள் பிள்ளைகள் எல்லோருடனும் பயம் இல்லாமல் கதைத்துப் பழகுவார்கள் என்பது அவர்கள் அபிப்பிராயமாக இருந்தது. அப்படி இக்காலத்துப் பெற்றோருக்கு காணப்பட்டாலும் அவர்களைக் கூத்தில் ஈடுபடுத்தாமல் நாடகம், பேச்சு, ஆடல்பாடல்களில்தான் பங்கு பெற வைக்கின்றனர்.

கூத்தின் இன்றைய நிலைக்கு கூத்துப் பற்றிய எண்ணக்கருவும் ஒரு காரணமாகும். அதாவது ஆரம்பத்தில் சில கூத்துக்கள் சாதியடிப்படையில் காணப்பட்டது. அதை ஏனையவர் கற்றுக் கொள்ளத் தயங்கினர். உதாரணமாக பறைமேளக் கூத்தினை எடுத்துக் கொண்டால் அது ஆரம்ப காலத்தில் செல்வாக்குப் பெற்றதொரு கூத்து வடிவமாகக் காணப்பட்டது. ஆனால் இக்காலத்தில் அதன் செல்வாக்கு மிகமிக அருகிவிட்டது. இதை ஏனையோர் பழகுவதற்குத் தயங்கினர். பழகி ஆடினால் அவர்களையும் பறையர் என இழிவாகக் கருதிவிடுவர் என்ற பயம்தான் இதற்குக் காணரம் . இந்த நிலை மாற வேண்டும். எந்தச் சாதியானாலும் கூத்துக்கலை இருந்தால் அதைத் கட்டிக்காத்து அதன் இடத்தை அதற்குக் கொடுக்கவேண்டும்.

அக்காலத்து கூத்தர்களுக்கான உடைகளை தாங்களே செய்யக்கூடிய நிலையில் இருந்தார்கள். இதற்குக் காரணம் அவர்கள் பல கூத்துக்களையும் பார்த்து அது பற்றிக் கூடிய தகவல் தெரிந்தவராகவும் அவர்களுக்கு முன்னுள்ளவர்களது அனுபவமுமாகும். இக்காலத்து கூத்தர்கள் உடுப்புகள் செய்யத் திறனற் றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இப்படியாக கூத்தர்கள் பல பேருடன் உரையாடியதிலிருந்து மேற்கூறப்பட்ட காரணங்கள் தெளிவாகியதனால் கூத்தர்களினது பார்வையில் அன்றைய நிலையிலிருந்து இன்றைய இடத்தினை அறியக் கூடியதாக உள்ளது. இந்நிலையிலிருந்து இன்றைய இடத்தினை அறியக் கூடியதாக உள்ளது. இந்நிலையினால் கூத்தர்கள் கவலையடைந்து காணப்படுகின்றனர். கூத்தின் அருமை பெருமைகளை உணர்ந்த சில புத்திஜீவிகள் கூத்தின் புத்துரு வாக்கத்திற்கு அரும்பாடுபட்டு வருகின்றார்கள். தேவைக் கேற்ப மாற்றி கூத்து பாமர மக்களுக்கேயுரியது என்ற நிலையினை மாற்றி படித்தவர்கள் மத்தியிலும் கூத்தினை ஒரு சிறந்த கலையாக எடுத்துக் காட்டியுள்ளார்கள் இப்பணியானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் முற்று முழுதான வளர்சியினை இது இன்னும் அடைய வில்லை. எனவே இதன் வளர்ச்சிக்கு எல்லோரும் பங்களிப்புச் செய்து எமது பாரம்பரிய கலைப் பொக்கிசமான கூத்துக் கலையினை வளர்ப்போமாக.

# வரலாறு பற்றிய ஒரு பார்வை

செல்வி. கு.சுபாஷினி
மூன்றாம் வருடம்
மெய்யியல் விசேடம்

மெய்யியலில்,வரலாறு பற்றி இருவிதமான சிநதனைப் போக்குகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றான ஒருமைவாத சிந்தனைப் போக்கு ஹெகலினால் முன்வைக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து மாக்ஸிஸ்டு களும், "ரொயின்பி" போன்ற வரலாற்றாசிரியர்களும் வரலாறு பற்றிய ஒருமைவாத சிந்தனைகயை முன்வைத்தனர். இவ்வொருமை வாத சிந்தனையை மறுத்து "காள்பொப்பர்" வரலாறு பற்றிய பன்மைவாத சிந்தனையை முன்வைத்துள்ளார். அவரைப் போலவே நியட்சே, பூக்கோ போன்றவர்களும் வரலாற்றுப் பன்மைவாதத்தை ஏற்றுக்கொண்டவர்களாவர். நீட்சேயினால் முன்மொழியப்பட்டு பூக்கோவினால் தொடர்ந்து வளர்க்கப்பட்ட வரலாறு பற்றிய "வழிவிளக்க அணுகுமுறை" பாரம்பரியமாக வரலாறு பற்றிக் கொண்டிருந்த கருத்தோட்டங்களுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. நிகழ்காலத்தை கடந்த காலத்தின் தொடர்ச்சியாக பார்ப்பதுதென்பது இதுவரைகாலமும் வரலாற்றாசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு முறையாகும். இப்பார்வை நீட்சேயினால் நிராகரிக்கப்பட, அவரைத் தொடர்ந்து பூக்கோ வரலாற்றைத் தொடர்ச்சியாக காணும் அணுகுமுறையை நிராகரித்தார். கடந்த காலத்தை நிகழ்காலத்திலிருந்து அன்னியப் படுத்தி இதனைச் சாதித்தார். இது வரலாறு பற்றிய ஒரு புதிய கருத்தோட்டத்தை அறிவுலகில் முன் வைத்தது.

வரலாறு பற்றிய பார்வைகளுள் ஹெகலினது முழுமைவாதம் நோக்க இயல்திட்டத்தை முன்வைத்தது. அது "முழுமையை நோக்கிச செல்லுகின்ற ஒரு சமூகத்தின் வளர்ச்சி பற்றியது. முழுமையை நோக்கி செல்கையில் ஒரு சமுகமானது தனது புறச்சூழ்நிலைக் கிணங்க ஒரு உற்பத்தி முறையிலிருந்து பிறிதொரு உற்பத்தி முறைக்கு மாறி முன்னேறிச் செல்வதென்பதே வரலாற்றின் சாராம்சமாகும். காள்மாக்ஸ் தனது சமுக மெய்யியல் கோட்பாட்டில் ஹெகலினுடைய கொள்கையை உள்வாங்கி அதனைப் பொருள்முதல்வாத அடிப்படை யில் விளக்கினார். இது 'வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ' என அழைக்கப்பட்டது. இவரது அபிப்பிராயப்படி வரலாறு என்பது வளர்ச்சிடைந்து வருகின்றதொன்று. இவ்வளர்ச்சி புராதன கம்யூனிச நிலையிலிருந்து விருத்தியடைந்த கம்யூனிசம் என்ற இலக்கை நோக்கிச் செல்லுகிறதென்று குறிப்பிட்டார். சமுகங்களினதும், அரசுகளினதும் வரலாற்றை நாம் இதன் அடிப்படையிலேயே நோக்கவேண்டுமென மாக்ஸ் குறிப்பிட்டார். வரலாறு பற்றிய நோக்கக் கொள்கைக்கு இது ஒரு உதாரணம். இதைப் போல ரொயின்பி என்ற வரலாற்றாசிரியரும் "நாகரிகங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற நூலில் வரலாறு ஒரு இலக்கை நோக்கிய பயணம் என்ற கருத்தைக் தெரிவித்தார். மாக்ஸிஸ்டுகளும் ரொயின்பி போன்றோரும் சமுகவரலாற்றுக்கு ஒரு தொடக்கப்புள்ளியும், இறுதிப்புள்ளியும் இருத்தல் வேண்டுமென்றதொரு அடிப்படையில் இலக்கினை நோக்கிய பயணமே வரலாறு என விளக்கினர்.

வரலாறு என்பது முழுமையான ஒன்று என்றும், அந்த முழுமையினை வரலாறு பற்றிய ஆய்வின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளலாம்" எனவும், சமுகத்தில்

சில விதிகள் செயற்படுகின்றன என்றும் நோக்க இயற்றிட்டவாதிகள் கூறுவோர் வாதிடுகின்றனர். ஆனால் பொப்பர் இதனை மறுக்கிறார். சமுகவிஞ் ஞானத்தில் செயற்படும் விதிகள் எப்போதும் நிபந்னைக் கூற்றுக்களாகவே இருக்குமென பொப்பர் குறிப்பிடு கின்றார். நிபந்தனைகள் மாறாதவையல்ல. சந்தர்ப் பத்திற்கு சந்தர்ப்பம் எமது தேவைகள் மாறுபட நிபந்தனைகளும் மாற்றமடைந்து கொண்டே போகும். எனவே மாறாவிதிகள் என நாம் எதனையும் கூற முடியாது என்றார். வரலாற்றை நாம் விஞ்ஞான பூர்வமாக அணுகுதல், உண்மையான வரலாறு என்ற ஒன்று உள்ளது எனக் கூறுதல் எல்லாம் தவறான விளங்கங்களே என பொப்பர் தெரிவிக்கிறார். இவரது அபிப்பிராயப்படி வரலாற்றை நாம் ஒருமைவாத அணுகு முறையில் ஆராய்தல் கூடாது. ஒருமைவாதம் என்பது நோக்கக்கொள்கைவாதம் - முழுமைவாதம் என்பதற்கு இடமளிக்கும். இது சமுகவிஞ்ஞானங் களுக்கு ஏற்புடைய பார்வையல்ல. எனக்கூறி பன்மைவாதக் கோட்பாட்டை முன்மொழிகிறார். இதன்படி ஒரு நாட்டின் வரலாற்றை நாம் அந்நாட்டில் வாழும் சமுகங்களுக்கிடையிலான போராட்ட வரலாறாக எழுதலாம் அல்லது அந்நாட்டில் வாழும் மக்களின் பண்பாட்டு வரலாறாகவோ, சமயவரலாறாகவோ எழுதலாம். அதுவுமின்றி வர்க்கங்களின் வரலாற்றாகக் கூட எழுதலாம். எல்லாவற்றையும் இணைத்து ஒரு வரலாறு படைத்தல் ஒருபொழுதும் முடியாது. ஏனென்றால் வரலாற்றை என்னென்ன விதமாக எழுதலாமென நாம் ஒரு போதும் திட்டவட்டமாக முன்கூறமுடியாது. இது பொப்பரின் வரலாறு பற்றிய பன்மைவாத நோக்காகும்.

பொப்பரைப் போலவே, வரலாறு பற்றிச் சிந்தித்த சமகால மெய்யிலாளர்களுள் பூக்கோவும் குறிப்பிடத் தக்கவர். வரலாறு பற்றிய இவரது அணுகுமுறைகள் நீட்சேயின் விளக்கத்தை அடியொற்றியதென ஏலவே கூறப்பட்டது.. இது வரலாறு பற்றிய சமகால புரிந்து கொள்ளலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியதால் அனைவரது கவனத்தையும் தன்பால் ஈர்க்கவல்லதாய் உள்ளது.

நீட்சேயும், பூக்கோவும் பாரம்பரியமாக இருந்து வரும் வரலாற்றுப் பார்வையை ஒரு கற்பனை என்றும் அது வெறும் ஊகமே என்றும் ஆதாரங்கள் எதுவுமற்றது என்றும் கூறி நிராகரித்தனர். இதற்கு பதிலாக வரலாற்றைக் கூறுபடுத்தி வேறுபாடுகளை முன்னிலைப் படுத்தும் வரலாற்று முறையொன்றினை நீட்சே முன் மொழிந்தார். இதனை விமர்சன உத்தியினடிப்படை யில் எழுதப்படுகின்ற வரலாறு எனலாம்.

பூக்கோ, நீட்சே முன்மொழிந்த இவ்வரலாற்று பார்வையை ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் வரலாறு பற்றிய புதிய முறையியல் ஒன்றை முன் மொழிந்தார். “விமர்சன உத்தியிலான வழிவிளக்க ஆய்வுமுறை” என இவ்வரலாற்று முறையியலை நாம் அழைக்கலாம். ''மருத்துவத்தின் வரலாறு'' , “பித்துநிலையும் நாகரிகமும்” , “பாலியலின் வரலாறு ஆகிய நூல்களில் பூக்கோ வரலாற்று ரீதியான ஒரு அணுகுமுறையினைக் கையாண்டார்.

நீட்சேயின் வேறுபாட்டுத் தத்துவம் நிகழ்காலத் திற்கும் கடந்தகாலத்துக்குமிடையே இடைவெளி இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. அதே போல கடந்தகால வரலாற்றினுள்ளும் பல இடைவெளிகள் உண்டெனவும் வற்புறுத்துகிறது. பூக்கோவின் வரலாறு பற்றிய பார்வை நீட்சேயின் வேறுபாட்டுத் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. வரலாற்றில் காணப்படும் தொடர்சியின்மை பூக்கோலினால் அவ்வாறே விளக்கப்படாது விடப்பட்டுள்ளது. தொடர்சியைப் பேணும் நேரத்தில் அதே இடைவெளிகளை ஊகங்களால் நிரப்ப பூக்கோ விரும்பவில்லை. வேறுபாட்டின் வழிவிளக்கம் என்ற வரலாற்றுப் பார்வையை ஊகங்கள் சிதறடித்து விடுமென்பது இவரது நிலைப்பாடாகும்.

நீட்சேயினால் முன்மொழியப்பட்டு ∴பூக்கோவி னால் பின்பற்றப்பட்ட வழிவிளக்க ஆய்வுமுறையானது பலவழிகளில் பாரம்பரிய அணுகுமுறையிலிருந்து வேறுபடுகிறது. முழுமையாக வரலாறு என்ற இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட பாரம்பரிய அணுகுமுறையானது பல்வேறு தனித்தனிச் சம்பவங்களையும் ஒன்றாக இணைந்து வரலாற்றை விழுமிய தோற்றத்தைத் தரவல்லதோர் விளக்கமாகவும் தொடர்ச்சியான வளர்ச்சியாக வரலாற்றைக் காட்டுவதாகவும் இருப்பதுடன் வரலாற்றில் முதன்மை பெற்ற கணப்பொழுதுகளையும், தனிநபர்களையும் போற்றுவதாகவும் மூலத்தைச் சுட்டும் ஆவணங்களைத்

தேடி அலைவதாகவும் இருக்கும். உதாரணமாக "மகாவம்சம்"த்தில் நாம் இத்தகைய அணுகுமுறையைக் காணலாம்[1] . ஆனால் வரலாறு பற்றிய பூக்கோவின் வழிவிளக்க அணுகுமுறையோ சம்பவங்களின் தனித்தன்மையைப் பேணும் விதத்திலும் அவறின் தனித்தனி அலகுகளைப் பேணுவதிலும் ஆர்வம் கொண்டதாகும். இது பகட்டுக் காட்சிகளான வரலாற்றுச் சம்பவங்களிலிருந்து விலகி கறைபடிந்னவும், புறக் கணிக்கப்பட்டவையுமான நிகழ்சிகளின் பால் கவனத்தை செலுத்துகிறது. அதாவது வரலாறும் மறுக்கப்பட்ட மக்களையும், அவர்களோடு தொடர்புடைய சம்பங்களினதும் வரலாறுகளை அறிய உதவுகிறது. உதாரணமாக தஞ்சைப்பெருங்கோயில் சோழப்பேரரசன் ராஜராஜன் கட்டினான் என்பது அனைவரும் அறிந்ததொரு வரலாறு ஆனால் அம்முயற்சியில் பெரும் தொகையான அடிமட்ட மக்கள் ஈடுபடுத்தப்பட்டமையும் துன்புறுத்தப்பட்டமையும் தற்கொலைகள் பல இடம் பெற்றமையும் எழுதப்பட்ட வரலாற்றிலில்லை. இது தொடர்பாக தற்கால தென்னிந்திய வரலாறாசிரியாகள் பல சான்றுகளை வெளிக்கொண்டு வந்திருப்பது அவதானிக்கத்தக்கது.

புலமைசார்ந்த அறிவெனப் போற்றிப் பாதுகாக் கப்படாதனவையும் எமது அறிவுத் தொகுதியில் இருப்பதாக பூக்கோ குறிப்பிடுகின்றார். அறிவடுக்கில் கீழ்நிலையிலுள்ளதும் விஞ்ஞான பூர்வமற்ற தெனப் புறக்கணிக்கப்பட்டதும் வழி விளக்க வரலாற்றாய்வில் தன் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுகிறது. கடந்த கால சமூகப்போராட்டங்கள் பற்றிய சரியான வரலாற்றுப் பார்வையைப் பெறுவதற்கு இது உதவியாக இருக்குமென பூக்கோ வாதிடுகிறார். வடிகட்டப்பட்டு உண்மையெனத் தரப்படும். வரலாற்று அறிவிற்குப் பதிலாக தொடர்ச்சியற்றதும், அடக்கி ஒடுக்கப்பட்டதும் புறக்கணிக்கப்பட்டு வரலாறு மறுக்கப்பட்டதுமான மக்களின் வரலாற்றை வழிவிளக்க வரலாற்றாய்வுமுறை வெளிக்கொண்டுவருகின்றது.

வழிவிளக்க வரலாற்றாய்வாளர்கள் ஒரு விமர்சனப் பாங்கிலான அணுகுமுறையைக் கொண டிருந்தனர். மூலம் அல்லது தொடக்கத்தைத் தேடும் முயற்சிகளில் பயனற்ற தன்மையை எடுத்துக் காட்டினார். இதுவரை எழுதப்பட்ட வரலாற்றின் வலுவற்ற இயல்பையும் வரலாற்று சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்ற பன்முத்தான காரணிகளையும் வெளிக்கொண்டுவர வழிவிளக்கஆய்வு முறை முயல்கிறது. இதன்மூலம் விழிம்புநிலை மக்களையும் வரலாற்றின் நாயகர்களாக்குகிறது. வரலாறு பற்றிய பாரம்பரிய அணுகுமுறையில் இத்தகைய மக்களுக்கு இடமிருக்கவில்லை. இதனாலேதான் வரலாறு என்பது அரசர்களின் வரலாறாக அவ்வரலாற்றாசிரியர்களால் எழுதப்பட்டது. பூக்கோவின் வழிவிளக்க ஆய்வுமுறை ஒரு சமுகத்தின் வரலாற்றை அச்சமுகத்தையாண்ட அரசர்களின் வரலாறாக சித்தரிப்பதை நிராகரிக்கிறது. ∴பூக்கோவின் எழுத்துக்கள் முன் உதாரணப்படுத்தும் வரலாற்றின்படி தொடர்ச்சியான வரலாறு என்றோ, வரலாற்றின் சாராமசம் என்றோ அல்லது இடையீடின்றிய தொடர்ச்சியான வரலாற்று நகர்வுகள் என்றோ எதுவுமில்லை.

பூக்கோவின் ஆரம்பகால முயற்சிகள் சமுக அல்லது மானிட விஞ்ஞானங்கள் என அழைக்கப்படும் ஆய்வுத்துறைகளின் வரலாறு பற்றியதாகும். வரலாற்று ரீதியாக மானிடவிஞ்ஞானங்கள் எவ்வாறு சாத்திய மாயின? அவ்வாய்வுகளின் பெறுபேறுகள் யாது? என்பது போன்ற வினாக்களுக்கு பூக்கோ விடைதேட முயன்றார். குறிப்பாக 18ம் நூற்றாண்டை மையப் படுத்தியதாக அவரது ஆய்வுகள் காணப்பட்டன. சமுக விஞ்ஞானங்களுக்கான ஆய்வுமுறைகள் உருவாக் கப்பட்டு அவற்றின் இன்றைய வடிவம் அக்காலத் திலேயே உருப்பெறத் தொடங்கியது. அறிவைத் தேடுபவனும் அறிவின் விடயமும் மனிதனே என்ற சிந்தனை உதயமாகியது. இதனால் வரலாற்றால் புறக்கணிக்கப்பட்ட தற்செயல் சம்பவங்களும் தொடர்ச்சியின்மைகள் பற்றியும் ஆராயவேண்டி யேற்றபட்டது. இவ்வாய்வின் பெறுபேறாகவே "வழிவிளக்க வரலாறு" என்ற புதிய ஆய்வு முறை பூக்கோவினால் தோற்றுவிக்கப்பட்டது.

1. "மகாவம்சம் " ஒரு வரலாற்று நூலோ என்பதில் வராற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு.

உசாத்துணை:

1.Foucault and the Writins of History
Auther: "Gold Blein"

# அம்மம்மா

செல்வி.ந.விஜயகுமாரி,
தமிழ் விசேடம் (3ம் வருடம்)

அன்று மகப்பேற்று விடுதியில் மகப்பேற்றுக்காய் தங்கியிருந்தேன். அது எனது முதல் பிரசவமாக இருந்தபோதும் எந்தவிதமான பயமோ, பீதியோ, காணப்படவில்லை. மாறாக இந்தக் குழந்தை எப்போது பிறக்கும்? ஆணா? பெண்ணா? யாரின் சாயலில் இருக்கும்? என்ற பரபரப்பும் எதிர்பார்ப்புமேதான் நிறைந்து கிடந்தது. தாய்மை அடைந்த எல்லாப் பெண்களும் என்னைப் போல்தான் பிள்ளையைச் சுமக்கும் பொழுது கனவுகளையும், எதிர்பார்ப்புகளையும் சுமப்பார்களா?

நான் தாய்மை அடைந்த நாள் முதல் என் நினைவில் அடிக்கடி என் அம்மம்மா சொன்ன இறுதி வார்த்தைகள்தான் வந்து நிழலாடின - "மனே நான் உன்னோடதான் கடைசிவரை இருப்பன். தப்பித்தவறி செத்துத்தனெண்டா உனக்கு பிள்ளையாகவாவது வருவன்". என்பதுதான். என்னதான் நான் விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்த போதும் எனக்கு நான் படித்த படிப்புக்கும் இந்த நம்பிக் கைக்கும் நேர்மாறாய் இருந்தது. எனது படிப்பையும் மாறி அவளது அன்பு வார்த்தைகளில் அதித நம்பிக்கையும், அது உண்மையாக வேண்டும் என்ற பிரார்த்தனையும் உள்மனதில் நிறைந்து கிடந்தது.

எப்படியாவது என்னைவிட்டுப் பிரிய அவருக்கு விருப்பமில்லை என்பதனை பலமுறை எனக்கு ஏதாவதொரு விதமாக காட்டியிருந்தார். என் பன்னிரெண்டாவது வயதிலேயே அவளது வீட்டை என் பெயருக்கு எழுதிவிட்டாள். மாமா தனது பதினான்கு வயதில் கதிர் அறுத்து செய்து கொடுத்த நச்சத்திரத் தோட்டையும் எனக்குத்தான் தந்தாள். இறக்கும் போதும் அவள் அணிந்திருந்த மாலையையும் எனக்குத்தான் கொடுக்கச் சொல்லியிருந்தாள்.

என்னுடன் ஏனைய சகோதரர்கள் இருந்தும் ஏன் என்னிடம் இவ்வளவு அன்பு வைத்திருந்தாள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஒருவேளை நான் அவளின் சாயலை ஒத்து இருந்ததால் தானோ தெரியாது. அவளது பழைய நண்பர்கள் என்னைக் கண்டால் "நீ சரியாக கொம்மம்மாதான். நீ வளர வளர அவளுக்கு ஆகாது" என்று சொல்வதில் ஏதோ உண்மை உள்ளது என்பதனை நான் வளர வளர அவள் நோயால் வாடி அவள் ஆவிதேய்ந்து மாயமானபோது அறிந்து கொண்டேன்.

அவள் என்னைப் பொறுத்தவரை வெறும் அம்மம்மா மட்டுமல்ல எனக்கு அம்மா அவள்தான். தாயாக மட்டுமல்ல தாதியாக, செவிலியாக, தோழியாக, என் நல்வழிப்படுத்தும் ஆசானாக இருந்தார். இதிகாசமும், புராணமும் அவளுக்குப் பழக்கம். நாட்டுக்கூத்தின் அடிகள் நாவில் தவழும். அவள் சோறு ஊட்டும் போது, கலையையும் ஊட்டிவந்தாள்.

என் திருமணத்தை நடத்திச் சிறப்புப்பார்க்க, என் படிப்பு முடியும் நாட்களை எண்ணியிருந்தவள் பாதியிலேயே பறந்துவிட்டாள்.

அவள் என்மேலுள்ள அன்பை வெளிக்காட்டி, என்னைப் பைத்தியமாக்கி அவள் பிரிந்தபோதுதான் புரிந்துகொண்டேன் நான் அவளில் தங்கி இருந்தேன் என்பதை அனாதையாகி விட்ட உணர்வு என் தனிமையை அதிகரித்துக் கொண்டே செல்ல, மிகவும் அமைதியாக என் பெற்றோர் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

இப்பொழுது, என் குழந்தை உயிரில் கருவான நாளிலிருந்து என் தனிமை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து செல்ல ஆரம்பித்தது.

அவளது ஞாபகத்தில் புதைந்து போன என் சிந்தனையைக் கலைப்பது போல் என் அடிவயிற்றில் திடீரென்று ஓர் உதை. அதனைத் தொடர்ந்து ஓர் வலி அடி வயிற்றிலிருந்து பரவி வியாபித்தது. அதுதான் பிரசவ வலியாம்.இதுவரை இல்லாத பயம், பீதி, அம்மா... அம்மா என்ற முனகல்.

நான் எப்பொழுது பிரசவ அறைக்குள் சேர்க்கப்பட்டேன்? எப்பொழுது குழந்தை பிறந்தது? என்பதுவும் தெரியாது.

ஒரு குழந்தையின் அழுகுரல். அருகில் ... மிக அருகில் கேட்டது. அப்பொழுதுதான் நான் நினைவுக்கு வந்தேன். என் வயிற்றில் தடவிப் பார்த்தேன். சுமை இறங்கி இருந்தது. அது என் குழந்தையின் அழுகுரல் தான்.

அருகில் என்தாய். என் தலையை வருடியபடி நின்றுகொண்டிருந்தார்.

"என்ன பிள்ளை?" என்றேன்.

"பொடியன்"

ஏனோ முகம் எனக்கு சோர்ந்து போனது,அது அம்மம்மா இல்லை என்ற வெறுப்புடன் ஸ்பரிசித்தேன். அது எனக்குப் பழக்கமான ஸ்பரிசமாக இருந்தது. அம்மம்மா இறுதிநாட்களில் இப்படித்தான் மென்மையாக இருந்தாள். அவளாக இருக்கக்கூடாதா? என்ற ஏக்கம் பெருமூச்சாக வெளிவந்தது.

இரண்டு நாட்களின் பின்பு என்னை வீட்டுக்கு கொண்டு சென்றார்கள்.பக்கத்து வீட்டு பார்வதி ஆச்சி என்னைப் பார்க்க வந்திருந்தாள். அவளும் என் அம்மம்மாவும் நெருங்கிய நண்பர்கள். அவள் என் குழந்தையை உச்சிமுதல் உள்ளம் கால்வரை கூர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் சுருங்கிய தோல்களுக்கிடையில் ஒரு பிரகாரசம்.

என் குழந்தையை ஆசையுடன் வருடியபடி, எனக்கு மட்டும் கேட்கும் குரலில், "அடிபிள்ள கொம்மம்மா உன்னை விட்டுப் போகல்லடி சீவன் மாறி வந்திருக்காள். கொம்மம்மாவின் அதே பார்வை இவனிட்ட இருக்கு நரிவிரட்டக்குள்ள அவள் மாதிரியே சிரிக்கான்" என்றாள்.

என் இதயத்தில் அடங்கிக் கிடந்த சந்தோச அலை மீண்டும் ஆர்ப்பரிக்கத் தொடங்கியது முன்பிலும் வேகமாக.

என் குழந்தையின் காதருகில், அவன் மட்டும் கேட்கும் படி "நீ அம்மம்மாவா" எனக் கேட்டேன்.

அவன் மெல்லச் சிரித்தான்.

அது நரிவிரட்டலா?

என்வினாவுக்கு விடையா?

எனினும் அவன் என்னிடம் சேர்ந்து விட்ட திருப்தியிலோ தெரியாது அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தான்.

என் நம்பிக்கை மேலும் சுடர்விட, இரண்டு கைகளாலும் கற்கண்டை அள்ளி ஆச்சியிடம் கொடுத்தேன்.

அவருக்கும் சந்தோசம் என்னைப்போல்.

## மலராத நினைவுகள்

பெண்ணினத்தின் வாழ்க்கைகள்
விளம்பரமாகிவிட்ட சமூகத்தில்
விடிவுகள்தான் இல்லையா
மானிடமே
விளக்கங்கள் கூறுங்கள்.

பள்ளிப்பருவமாய் அடக்கப்பட்ட
வாழ்க்கைகள் - பெண்களுக்கு
பாரினில் இது கொடுமை.

குடும்பத்தில் பாரம் பெண்கள்
குலத்தின் சாபக்கேடுகள்
கருவிலே சிதைவுறும் சின்னங்கள்.

சீதனத்தால் பெண்ணை
சிதைவுபடுத்தும் - மானிடமே
சிந்தித்துப்பாருங்கள்.

கனவுகள் மட்டும் - இங்கு
இலவசம் என்றால்
நிஜங்களின் நித்தியதரிசனம்
எப்போது...

ஆண்பாதி பெண்பாதி - என்று
ஆண்டவன் சந்நிதியில்
ஆனால் அடிமைகளாய் இன்று...
ஓ... பெண்ணின்
சிந்தனைகளை குழிதோண்டி
புதைக்கச் சொல்லும் சமூகம்
ஏன் இந்த அடிமைநிலை.

அகலிகையாய் வாழாதே
எழுந்துவிடு இலட்சியங்களால்
பாரதிகண்ட புதுமைப் பெண்ணாய்
புதுயுகம் படைக்க புறப்பட்டுவிடு

பெண்ணே இனியாவது
கல்லறையில் மட்டும்
உணர்வுகளை அடக்காதே
சுதந்திரமாய் வெளியிடு
சரித்திரம் சாட்சிகள்
சொல்லும் - உன்
தடயங்களை.

த.குமுதினி.
2ம்வருடம்

# அண்மைக்காலத்து மேனாட்டு இலக்கிய விமர்சனம் ஓர் அறிமுகக் குறிப்பு.

**கார்த்திகேசு சிவத்தம்பி**

தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் - யாழ்பல்கலைக்கழகம்.
வருகைப் பேராசிரியர் - கிழக்குப் பல்கலைக்கழகம்.

மேனாட்டு இலக்கிய சிந்தனை முறையில் இருபதாம் நூற்றாண்டு மிகமுக்கியமான ஒரு காலப் பகுதியாகும். ஏறத்தாழ 1900 வரையில் முக்கியத்துவம் பெறத்தொடங்கும் "தோற்றப்பாட்டுவாதம்" (PHENOMENOLOGY) முதல், 1920/30களில் முக்கியத்துவம் பெறும் மார்க்ஸீய்வாதம், 1940/50களில் முக்கியத்துவம் பெறும் புதுமுறைவிமரிசனம் (NEW CRITICISM) ஆகியன ஊடாக, 1960களில் மேற்கிளம்பும் அமைப்பியல் வாதம் (STRUCTURALISM) அதனைத் தொடர்ந்து வரும், பின்-அமைப்பியல் வாதம் (POST - STRUCTURALISM) அந்த பின்அமைப்பு வாதத் தினுள் இடம் பெறும் கட்டவிழ்ப்பு வாதம், ∴பூக்காவின் அதிகாரமையவாதம், லக்கானின் நினைவிலி (UNCONSCIOUS) பற்றிய நோக்கு ஆகியன வரையும் பின்னர் 1980 களில் முக்கியம் பெறும் பண்பாட்டியல் ஆய்வு (CULTURAL STUDIES) நவவரலாற்று வாதம் (NEW HISTORICISM) பண்பாட்டுப் பொருள்முதல் வாதம் (CULTURAL MATERIALISM) ஆகியன வரை மேனாட்டு இலக்கிய விமர்சன மரபு பாரிய சிந்தனை யோட்டங்களின் தாக்கங்களுக்கு முகம் கொடுத்தது. இவற்றினூடே தோன்றி முக்கியத்துவம் பெற்ற வாசகர்மைய (READER-ORIENTED THEORIES) வாதங்களும் மிக முக்கியமானவையே.

இவையாவும் இலக்கிய விமர்சன மாணவர் களுக்கு அத்தியாவசியமான அறிவைத் தருபவையாக வுள்ளன. இத்தகைய சிந்தனை மரபினூடே இலக்கிய விமர்சனத்தில், இலக்கிய கொள்கை(LITERARY THEORY) எனும் கருதுகோளே முக்கிய இடம் பெறத் தொடங்கிற்று. மேற்கூறிய கருதுகோள்களை, இப்பொழுது இலக்கியக் கொள்கைகள் என்றே குறிப்பிடுகின்றனர்.

இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.இவை ஒவ்வொன்றும் இலக்கியத்தின் ஆக்கம், அர்த்தப்பாடு, தொழிற்பாடு ஆகியனவற்றில் வேறுபாடான கருத்துக்களைக் கொண்டுள்ளன. எனவே உண்மையில் இவை இலக்கியத்தின் உருவாக்கம், இயல்பு பற்றிய "கொள்கைகளே" (THEORIES)

இந்த மாற்றங்களைக் காலவரன் முறைப்படி வைத்து நோக்கும் பொழுது இவற்றினூடே ஐரோப்பிய அமெரிக்க அரசியல், பொருளாதார "வளர்ச்சிகளின்" தாக்கத்தை அவதானிக்கலாம்.

இக்கட்டுரையில் இரண்டாவ உலக யுத்தத்தின் பின்னர் முக்கியத்துவம் பெறுகின்ற இலக்கியக் கொள்கைகளே மிகச்சுருக்கமாக எடுத்துக் கூறப்படு கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிநிலையில் நிற்கும் நாம் இங்கு " அண்மைக்காலம்" எனும் பொழுது, நாம் முன்னர் எடுத்துக்கூறிய எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள முடியாது என்பது உண்மையே.

இருபதாம் நூற்றாண்டின் பின்அரைப் பகுதியில் ஏற்பட்ட சிந்தனைகளில் "அமைப்பியல்வாதம்" (STRUCTURALISM) என்பது முக்கியமானதாகும். சமூகவிஞ்ஞானத்துறையில் பெருத்த நோக்கு வேறுபாட்டினை ஏற்படுத்திய இச்சிந்தனை மரபின் போதாமைகள் வெகுவிரைவில், அமைப்பியல் வாதத்தைக் கேள்விக்குள்ளாக்கும் சிந்தனைச் செல்நெறிகளைத் தோற்றுவித்தன. இவற்றை "அமைப்பியல் வாதத்தின் பின்வந்தவை" என்ற கருத்துப்பட ஆங்கிலத்தில் போஸ்ட் - ஸ்ரக்சரலிசம் (POST - STRUCTURALISM) எனத் தொகுதி நிலையாகக் குறிப்பிடுவர். இந்தச்சிந்தனை மரபுகள் 1970 களிலே முக்கியத்துவம் பெற்றன. இவற்றினூடே மார்க்சியம் தனது முக்கியத்துவத்தை மேலும் வளர்த்துக் கொண்டது. மெய்யியற் சிந்தனை (AHLOSOPHICAL TRADITION) மரபில் ஏற்பட்ட இச்சிந்தனை மரபுகளுக்குச் சமாந்தரமாக இன்னுமொரு முக்கிய சிந்தனை எழுச்சி கண்டது. அதுதான் "பெண்ணிலைவாதம்" (FEMINISM) என்பதாகும்.கலை, இலக்கியம் பற்றிய நோக்கில் இது ஒரு புதிய பார்வையை ஏற்படுத்திற்று.

ஆகவே இந்த முக்கிய இலக்கிய நோக்குகளை உள்ளடக்கும் வகையில் இக்கட்டுரையில் 1960களிலும் அதன் பின்னரும் மேனாட்டுச் சிந்தனை மரபில் ஏற்பட்ட பின்வரும் இலக்கிய நோக்குகள் ( கொள்கைகள்) பற்றிய மிகச்சிறிய விளக்கக் குறிப்புகள் இடம் பெறும்.

முதலாவது **அமைப்பியல்வாதம** பற்றிய விளக்கமாகும்.

1960களில் முக்கியத்துவம் பெற்ற இவ்வாதத்தின் தோற்றம், வளர்ச்சியில் சசூரே (SAUSURRE) எனப்படும் மொழியியலாளரும், லெவிஸ்ரோஸ் (LEVISTRAUSS) எனப்படும் மானிடவியலாளரும் முக்கியமானவர்களாவர்.

அமைப்பியல் வாதம் என்பது மனிதத்தொடர்புகள் இயக்கம் ஆகியவற்றின் "அமைப்பு" (STRUCTURE) பற்றிப் பேசுவது (தமிழைப் பொறுத்தவரையில் இதனை "அமைப்பு" என்பதிலும் பார்க்க "அமைவு" என்பதே பொருத்தமானதாகும். ) இது "மொழி" பற்றியது ஆகும். இங்கு மொழி எனும் பொழுது நாம் பேசுகின்ற கூற்றுக்கள் (கிளவிகள்) பற்றி மாத்திரம் குறிப்பிடாது பொதுப்படையாகக் "குறிகள்" (SIGNS) குறியீட்டு முறைமைகள் பற்றியதாகும். அதாவது மனிதர்கள் எவ்வாறு ஒருவருக்கொருவர் தரவுகளைப் பரிமாறிக் கொள் கின்றனர் என்பது பற்றியதாகும். (அந்த அளவில் ஒரு நாவலும் மருந்து பற்றிய துண்டும் ஒரே நிலைப பட்டனவே)

அமைப்பியல் வாதத்தின்படி, மனித நிகழ்ச்சி எல்லாமே, ஒரு குறியீட்டு முறைமையின் பெறுபேறுகள் தாம். குறிப்பீட்டு முறைமைகளுக்குள்ளே உறவு (தொடர்பு) மூலம் தான் பொருள் (அர்த்தம்) தோன்றுகின்றது. இந்தக் குறிப்பீட்டு முறைமை இல்லாது நாம் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளமுடியாது.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இவ்வாதம் இலக்கியம் பற்றி இதுகாலவரை நிலவி வரும் ஒரு முக்கிய கருத்தை மறுதலிக்கின்றது. அதாவது, இலக்கியம் என்பது ஒரு யதார்த்தத்தின் பிரதிபலிப்பு அல்ல, அது சில அர்த்த ஆக்க மரபுகளினடியாக் தோற்றுவிக்கப்படுவதாகும்.

இந்தப் புதிய எடுகோளை ஏற்றுக்கொண்டால், இலக்கியம் என்பது (ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள) ஒரு பாடம் (Test) பற்றிய அமைப்புநிலை ஆய்வாகும். அந்தப் பாடத்தில் அர்த்தம் அந்தப் பாடத்தினுள்ளே யுள்ள குறிப்பீட்டு முறைமையின் ஒழுங்கை அறிந்து கையாள்வதாகும். அந்தக் குறிப்பீட்டு முறை ஒழுங்கு ஒரு "எடுத்துரைப்பு" (NARRATION) முறையைக் கொண்டதாகும்.

இந்த நோக்கு முறைமை பல தொகுதிநிலை அர்த்தங்களைக் கொண்டது.

முதலாவது ஒரு பாடத்தை அது அமைவு

பெற்றுள்ள முறைமையிலேயே - அதாவது ஒரு காலநிலையிலேயே - வைத்துப் பார்த்தல் வேண்டும். இங்கு காலங்களினூடாகப் பார்க்கின்ற வரலாற்று நோக்கு முக்கியமற்றுப் போய்விடுகிறது.

இரண்டாவது, ஆசிரியர்கள் சில நிஜங்களைப் பிரதிபலிக்கின்றார்கள் எனும் நிலைப்பாட்டை விடுத்து, நிஜங்கள் மொழியினால் கொண்டமைக்கப்படுகின்றன எனும் நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

மூன்றாவது இந்த நோக்கில் "ஆக்குபவர்" (ஆசிரியர் / Author) என்பவர் முக்கியத்துவமில்லாது போய்விடுகின்றது.

நான்காவது, வாசகர் ஒரு மைய இடத்தைப் பெறுகின்றார். உண்மையில் "அர்த்தம்" (Meaning) என்பது அவரால் கண்டறியப்படுவதே.

இந்தச் சிந்தனை முறைமை பலத்த வாதவிவாதங்களுக்கு இடமளித்தது. அந்த எதிர்த்தாக்கங்களை அறிவதற்கு முன்னர், இக்கால கட்டத்தின் முக்கிய இலக்கிய நோக்கு முறைமைகளில் ஒன்றான வாசகர் மையவாதம் (READER -ORIENTED THEORIES) தோன்றுவதற்கு இது காரணமும் சந்தர்ப்பமும் ஆகின்றது என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும்.

அமைப்பியல் வாதம் முனைப்புப் பெறுகின்ற அதே காலகட்டத்திலேதான் (1960களில்) பெண்நிலைவாதம் முக்கிய ஒரு இலக்கிய நோக்காக எடுத்துப் பேசப்படுகின்றது. இந்த நோக்கில் காலம் போகப்போகப் பல முக்கிய வளர்ச்சிகள் காணப்படுகின்றன. ஆனால் இதனை அறிமுகம் செய்வதற்கான பொருத்தமான இடம் இதுவேயாகும்.

பெண்ணிலை வாதத்தின் பிரதான நிலைப்பாடுகள் பின்வருமாறு:

(அ) மேனாட்டு நாகரிகம் ஆண் ஆதிக்க அடிப்டையில் தோன்றியது. இது பெண்ணின் அந்தரங்கமான உணர்வு/உணர்ச்சிநிலைப்பாடுகளைப் புறக்கணித்து, குறைத்து மதிப்பிடுவது.

(ஆ) பாலியல் (SEX)வேறுபாடுகள் உண்டு. அவை உடல் சம்பந்தப்பட்டவை. அதன் அடிப்படையில் கட்டியெழுப்பப் பெற்ற பால் நிலை (GENDER) வேறுபாடுகள் சமூகம் திணித்தவை. (தமிழில் SEX ஐயும் GENDER ஐயும் வேறுபடுத்திக்காட்டும் சொல் இல்லை)

(இ) இப்போதைய இலக்கியங்கள் ஆணாதிக்க நிலைப்பட்டவை.

(ஈ) பெண்ணின் "மொழி" ஒன்றுண்டு அதனை ஆணாதிக்கம் என்றும் கணக்கில் எடுத்ததில்லை.

(உ) ஆணாதிக்க இலக்கியம் எப்பொழுதும் ஆண்களை மனங்கொண்டே எழுதப்படுகிறது. இதனால் பெண்கள் கூட ஆண்களின் நிலைநின்றே வாசிக்கப் பழகிவிடுகிறார்கள்.

இன்று பெண்ணிலைவாத இலக்கியக்குரல்கள் தமிழ் இலக்கியத்திலே கேட்கத் தொடங்கியுள்ளன.

அமைப்பியல் வாதக்கருத்துக்கள் ஏற்கனவே நிலவிய கருத்துக்களை மறுதலித்த அதே வேளையில் காலம் செல்லச் செல்ல அதனுடைய கொள்கைநிலை போதாமைகளும் படிப்படியாகத் தெளிவாகத் தொடங்கின. முதலில் அமைப்பியல் வாதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் படிப்படியாக மாறத்தொடங்கினார்கள். அத்தகையோருள் றோலன்ட பார்த் (Roland Barthes) என்பவர் முக்கியமானவர். இவர் 70 களில் தமது நிலைப்பாட்டை மாற்றினார். ஒரு பாடத்திற்கு ஒரு வாசிப்பு (அர்த்தம்/ பொருள் ) என்பதிலிருந்து பாடம் பன்முகப்பட்டது, அதற்குப் பன்மைநிலை அர்த்தங்கள் உண்டு என்றார். அவர்தமது பிற்கால எழுத்தில் ஆசிரியர் முனைப்புப் பாடங்கள் (இவற்றின் வாசிப்புக்கு வாசகர் அதிகம் சிரமப்படவேண்டியதில்லை - சனரஞ்சக நாவல்கள்) வாசகர் முனைப்புப் பாடங்கள் (இவற்றின் வாசிப்புக்கு வாசகர் "முயற்சி" அவசியம்)

[Writerly / readerly] என்று பாடங்களைப் பகுத்தார்.

பார்த்தின் எழுத்துக்களில் அமைப்பியல் வாதத்திலிருந்து பின் அமைப்பியல் வாதத்துக்கான பெயர்வினைக் காணலாம்.

பின் - அமைப்பியல் வாதத்தின் முக்கிய இலக்கியக் கொள்கைகளுள் ஒன்று கட்டவிழ்ப்புவாதம் என்பதாகும்.

கட்டவிழ்ப்பு வாதத்தினை முன்வைத்தவர் ஜாக்டெறிடா.(Jaqub Derrida)

"கட்டவிழ்ப்பு" (deconstruction) என்பது ஓர் ஆக்கத்தில் அதன் அர்த்தப்பாடு எவ்வாறு நிகழ்கின்றது என்பதை அறிவதற்காக மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வு முயற்சியாகும். இது ஒரு வகை வாசிப்பு முறையாகவும் பகுப்பாய்வு முறையாகவும் அமைகின்றது.

அமைப்பியல் வாதத்தின் முக்கிய எடுகோள் களை டெறிடா மறுதலித்தார். "அமைப்பு" (Structure) எனும் பொழுது ஒரு மையத்தைச் சுற்றி செய்யப்படும் ஓர் ஆக்கப்பாடு என்ற தொனி மேல் எழும்புகின்றது. பாடங்கள் அப்படிப்பட்டவையல்ல. அவற்றுள் அர்த்தப்பாடு (meaning) எவ்வாறு தோன்றுகின்றதென்பதைப் பார்க்கும் பொழுது, பாடத்தின் அமைவில் கருத்து பின்தள்ளிக் கொண்டு செல்லப்படுவதை உணரலாம். பாடத்தின் அமைப்பிலுள்ள அக இறுக்கம், அதன் பொருளை மறுதலிப்பதை அவதானிக்கலாம் என்பது டெறிடாவின் வாதம் . அதாவது ஒரு பாடத்தின் மொழியமைப்பு அப்பாடத்தின் அக ஒருமைப்பாட்டை இயைபை நிலைநிறுத்தப் போதுமானது எனும் கொள்கையை டெறிடா மறுதலிக்கின்றார். மறுதலித்து பாடத்தி னுள்ளேயே முரண்கொண்டு (அல்லது எதிர்நிலைப் பட்டுக்கொண்டு) நிற்கின்ற அதன் அமைப்பு நிச்சயமான நிரந்தரமான வாசிப்பை இயலாமற் செய்து விடுகின்றது என்று கூறினார். வித்தியாசமான முறையிலே வாசிப்புக்கள் மேற்கொள்ளப்படலாம் என்பது இவ்வாதத்தின் பிரதான எடுகோளாகும்.

இவ்வாதம் பெருத்த வாதவிவாதத்தைக் கிளப்பிற்று."மையமற்ற உலகம்'', அர்த்தங்களின் பன்மை'' என்பவை பல வாதங்களைக் கிளப்பின.

டெறிடாவின் இந்தவாதம், அமெரிக்காவில் உள்வாங்கப்பட்ட பொழுது சில வேறுபாடுகள் காணப்பட்டன. அமெரிக்காவில் இவ்விடயத்தில் முன்நின்றவர் போல்டிமான் ( Paulde mann) என்பவர்.

பின் அமைப்பியல் வாதத்தின் பிரதான வெளிப்பாடாக எடுத்துக் கூறப்படுவது மிஷேல் ஃபூக்காவின் நிலைப்பாடு ஆகும்.

இவரது கருத்துப்படி "கருத்தாடல்'' என்பது (இதனைச் சிலர் சொல்லாடல் என்பர்; கருத்தாடல் என்பது எழுதப்படும் / பேசப்படும் விடயங்கள் பற்றிய கருத்துப் பரிமாற்றம் ஆகும்.) சமகாலத்தில் நிலவும் அதிகாரத்துடன் இயைந்து நிற்பது என்றும் "மனிதாயதம்'' என்பது கூட இந்த அதிகார முறைமை யினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்றும் கூறினார். இவர் தொல்லியல் (Archaeology)தரும் பகுப்பாய்வு முறையை அதாவது ஒரு முறைமை (System) யிலிருந்து இன்னொன்றுக்குச் செல்லும் முறைமையைக் கையாண்டு இந்த அதிகாரத்தள நிலையினை எடுத்துக்காட்டினார்.

ஃபூக்காவின் இந்தக்கருத்து மனித சமூகம் பார்க்கப்படுகின்ற முறைமையை மாற்றியது. இவரும் உலகின் பன்முகப்பாட்டை ஏற்றுக் கொண்டார்.

பின்அமைப்பியல்வாதக் கொள்கைகளுள் முக்கியமான மூன்றாவது ஜாக்லக்கான்(Jacquees Lacan) என்பவரது கொள்கையாகும். இது உண்மையில் உளவியல் விமர்சனத்தைச் சார்ந்ததாகும். (உளப்பகுப்பு விமரிசனம்-Psychoanalytic Criticism) இவர் ஃபிராய்டின் கொள்கைகளுக்குப் புதிய விளக்கங்கள் கொடுத்தார். இவருடைய கொள்கைப்படி நனவிலி(Unconconscious) என்பது மொழியைப் போன்றே அமைக்கப்பட்டதாகும். அத்துடன் அது மொழியினால் தோற்றுவிக்கப் படுவதுமாகும். ( இது ஃபிராய்டின் கருத்துக்கு

முரணானது) லக்கானின் கருத்துப்படி மொழிவெளிப்பாடு வியாக்கியானம் என்பது இழக்கப்பட்ட மீட்டுப்பெற முடியாத ஒன்றைப் பிடிப்பதற்கான விருப்பினால் உந்தப்படுகின்றது என்றும் அந்த உந்துதல் நிச்சயமான ஒரு தளமற்று ஓடிக்கொண்டிருக்கும் என்றும் கூறினார்.

லக்கானின் கருத்துப்படி மனிதன் மொழிக்கு அப்பாலே செல்வது என்பது முடியாத ஒரு காரியமாகும்.

இக்கட்டத்தில் வாசகர் மையவாதத்தின் முக்கிய நிலைப்பாடுகளைக் குறித்துக் கொள்ளுதல் பொருத்த மானதாகும்.

வாசகர் - மையவாதத்திற்கான தளம் அமைப்பியல் வாதத்திற்கு முந்திய தோற்றப்பாட்டு வாதத்துடன் நிறுவப்படுகின்றது. வாசிப்பின் முக்கியத்துவம் அதன் காலநிலைப்பட்ட வேறுபாடுகள் ஆகியன குறித்துப் பொருள்கோள்வாதம் (HERMANEUTICS) பேசிற்று.

ஆனால் அமைப்பியல் வாதத்துடனும் பின்-அமைப்பியல் வாதங்களினுடனேயே வாசகர் முக்கியத்துவம் பெரிதும் அழுத்தப்படுகின்றது.

வாசகர் மையவாதத்தின் எடுகோள்கள் முக்கியமானவை:

1. வாசிப்பவர் "வெற்றுப்பொருள்" அல்லர்.

2. அவர்தான் அதற்குப் பொருளைக்கொடுக்கிறார்.

3. வாசிக்கப்படும்வரை ஒன்றுக்கு ஒரு பொருளில்லை. இலக்கியம் வாசகரிடத்திலேயே நிறைவுபெறுகிறது.

வாசகர் மையவாதத்தினுள் பல சிந்தனை யாளர்களின் பங்கு உண்டு.

அண்மைக்கால இலக்கியக் கொள்கை, விமரிசனம் பற்றி ஆராயும் பொழுது முக்கியத்துவம் பெறவேண்டிய ஒரு விமரிசன முறைமை மார்க்சீய விமர்சன முறைமையாகும்.

மார்க்சீய இலக்கிய கொள்கையின் பிரதான தளங்கள் பின்வருமாறு:

(அ) நமது சமூக இருப்பு நமது பிரக்ஞையைத் தீர்மானிக்கின்றது. சமூக இருப்பு என்பது சமூக உறவுகளின் ஒட்டு மொத்தமாகும்.

(ஆ) உற்பத்தி முறைமைகளில் ஏற்படும் மாற்றங்கள் சமூகநிலைமைகளைப் பாதிக்கும். அவற்றுள்ளும் சில மேலாண்மைச் சக்தியுடை யனவாகும்.

(இ) மனிதப்பிரக்ஞை கருத்து நிலையினைக் கொண்டது.

மனிதர்கள் (ஒன்று பற்றிய) தங்கள் புலப்பதிவைச் செய்து கொள்வதற்கு உதவும நம்பிக்கைகள், பெறுமானங்கள், சிந்தனைமுறைகள் உணர்வுகள் ஆகியவற்றைத் தடயங்களாகக் கொள்கின்றன. அதாவது அங்கு அவர்கள் கருத்துநிலை தொழிற்படுகின்றது.

1960களின் பின்னர் மார்க்ஸீய விமர்சனம் பின்வருவோரின் சிந்தனைத் தொழிற்பாடுகளினால் விரிவடைந்தது.

**(1) அல்தூஸர்**

இவர் அமைப்பியல் வாதத்தை மார்க்ஸீயத்துக் குள்ளே கொண்டுவந்தார். சமூக உருவாக்கம் (Social formation) எனும் கருத்தை இவரே பிரபலியப்படுத்தினார். அத்துடன் மார்க்ஸீயத்தின் "கருத்துநிலையின்" (Ideology) முக்கியத்துவத்தையும் கொண்டு வந்தவர் இவரே.

**(2) ஃபிராக்ஃபேற் அறிவுப்பள்ளி அறிஞர்கள்**

இவர்கள் நவீனத்துவ எழுத்தாளர்களின் ஆக்கங்களைப் புகழ்ந்து அவை பராதீனப்படும் மனிதனின் அவலங்களைக் காட்டுவதாகக் கொண்டனர்.

**(3) அபேற்றோல்ட் பிறெப்பற்**

தொலைப்படுத்தல் உத்தியைப் பயன்படுத்தி நாடக உலகில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தினார்.

**(4) வால்ற்றர் பெஞ்சமின்**

வளர்ந்த முதலாளித்துவ உலகில் ரசனை முறைமைகள் பற்றி எடுத்துரைத்தார்.

அண்மைக்கால மார்க்ஸீய விமர்சகர்களுள் மஷிறே,ரெறிஈகிள்ற்றன் என்போர் முக்கியமானவர்கள். மார்க்ஸீய இலக்கிய விமர்சனப் படைப்பின் சூழலுக்கு முக்கியத்துவமளிக்கின்றது.

இக்கட்டத்தில் மிகச் சுருக்கமாக மூன்று கருதுகோள்களை எடுத்துக் கூறல் அவசியமாகின்றது.

(1) நவீனத்தும் (Modernism) (முதலாவது உலக யுத்தத்தின் காரணமாக உலகக்கலை இலக்கியத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் இப்பெயர் கொண்டழைக்கப்படும்)

(2) பின் - நவீனத்துவம் (Post - modernism) (1970க்குப் பிந்திய ஐரோப்பிய அமெரிக்கப் பண்பாட்டையும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் குறிப்படுவதற்குப் பயன்படும் தொடர். இது அண்மைக்காலத்துத் தொழினுட்ப மாற்றங்களினால் மேலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பின் - அமைப்பியல் வாதத்துக்குச் சாமாந்தரமாக அமையும் கலை, பண்பாட்டு நிலையைக் குறிக்க இத்தொடர் பயன்படும்.)

(3) பின்- காலனித்துவம் (Post - colonialism) (காலனித்துவ ஆட்சிக்குள் வந்த நாடுகள் அந்த ஆட்சி முறையிலிருந்து விடுபட்ட பின்னர், அந்நாடுகளை எதிர்நோக்கும் சகலதுறைப் பிரச்சினைகளும் இதற்குள் வரும். இது பெரும்பாலும் மூன்றாவது உலகநாடுகள் சம்பந்தப்பட்ட ஒரு கருத்து நிலையே)

இறுதியாக இப்பொழுது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றிக் குறிப்படல் வேண்டும். குறிப்பாக மார்க்சீய நோக்குச் சார்ந்த அறிஞர்கள் தற்பொழுது

(1) நவ வரலாற்று வாதம்(New historicism)

(2) பண்பாட்டுப் பொருள் முதல்வாதம் (Cultural Materialism)

இவை மார்க்ஸீய அடிப்படையிலான நோக்குகளாகும். இவற்றைவிட மார்க்ஸீய அடிப்படையிலான சில அமிசங்களை ஏற்றுக் கொள்கின்ற பண்பாட்டு ஆய்வியல் (Cultural Studies) மிக முக்கியமானதாகும்.

(விரிவஞ்சிக் கட்டுரையை இவ்விடத்தில் நிறுத்துவது அவசியமாகிறது.)

உசாத்துணை:


1. J.A.CUDDON- DICTUONARY OF LITERARY TERMS AND LITERARY THEIRY.
   PENGUIN - 1991
2. M.H.ABRAMS - A GLOSSARY OF LITERARY TERMS
   U.S.A. 1993
3. TERRY EAGLETON - LITERARY THEIRY.
   U.S.A 1996.
4. PETER COLLIER AND HELGA GEYER RYAN - LITERARY THEORY TODAY.
   LONDON-1992
5. WILLIAM RAY -
   LITERARY MEANING
   LONDON - 1989.

4ம் வருடம்



3ம் வருடம்



2ம் வருடம்



1ம் வருடம்



# நிழல் முகங்கள்.



ஆர்.பரமநாதன்,
புளியாலங்குளம்,
செட்டிக்குளம்,
வவுனியா.



ரி. மலர்ச்செல்வன்,
வேளாளர் வீதி,
ஆரையம்பதி - 3



கே. கமலசேகரன்,
அஞ்சலக வீதி,
கிரான்.



எஸ்.எஸ்.சந்திரகுமார்,
418, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.



க.ரவிச்சந்திரன்,
"துளசி இல்லம்"
பனங்காடு,
அக்கரைப்பற்று.



என். ஜெயதீஸ்வரன்.
1ம்குறிச்சி,
மண்டூர்.



கி.ரத்தினாதேவி,
சிவன்கோவில் வீதி,
கொக்கொட்டிச்சோலை.



எஸ்.கோமதி.
ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன்,
கல்லடி - உப்போடை,
மட்டக்களப்பு.



கே.பிறேமளா,
"மலரகம்"
தேற்றாத்தீவு-02,
தேற்றாத்தீவு.



எம்.சிவானந்தி,
சிவபுரம்,
குருக்கள்மடம்.



என்.தயாளசிங்கம்,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.



பி.அருணகிரிநாதன்,
துறைநீலாவணை-5



கே.திருச்செல்வம்,
15/ 146 நாவிதன்வெளி,
கல்முனை.



ரி.ரஞ்சனிதேவி,
விநாயகர் வீதி,
கோவில்போரதீவு- தெற்கு
பெரியபோரதீவு.



இ.ஜெகநாதன்,
13 / 32 சங்கர்புரம்,
மண்டூர்.



ஆர்.ஞானராஜன்,
பதுளை றோட்,
செங்கலடி.



வி.அனுசியாதேவி,
பிரதான வீதி,
குருக்கள்மடம்.



ரி.குகாஞ்ஜலா,
குககிரி,
பெரியகல்லாறு,
கல்லாறு



சண்முகம் வளர்மதி,
குமாரர் கோயில் வீதி,
கிரான்.



இ.ஜெயமலர்,
இல.09, சுங்க வீதி,
திருகோணமலை.



கே.குருசாந்தன்,
புற்றடி வீதி,
1ம்குறிச்சி,
கோட்டைக்கல்லாறு.



ஏ.எல்.பாறூக்,
93/1 ஓடாவியார் வீதி,
ஏறாவூர்-02



என்.திருமால்,
14/32 1ம்குறுக்குத்தெரு,
பாரதி ஒழுங்கை,
மட்டக்களப்பு.



எஸ்.கருணாகரன்,
வைத்தியசாலை3ம்ஒழுங்கை,
கல்முனை-01



ச.தயாபரன்,
வெல்லையடிமடு,
வாகரை.



ஏ.பரமேஸ்வரன்,
சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.



கே.சிறிதரன்,
மத்திய வீதி,
குருக்கள்மடம்.



வி.சிவகுமார்,
பிரதான வீதி,
பழுகாமம் -02,
பெரியபோரதீவு.



கே.உதயராணி,
கல்முனை வீதி,
கோட்டைக்கல்லாறு.



எஸ்.நிர்மலா,
ஆலங்கேணி,
கிண்ணியா,
திருகோணமலை.



வி.ஜெகதீஸ்வரி,
தேற்றாத்தீவு -1,
களுவாஞ்சிக்குடி.



திருமதி. எஸ்.தயாளன்,
இலுப்படிச்சேனை,
செங்கலடி.



வி.லோகேஸ்வரி,
பெரியகல்லாறு-02,
கல்லாறு.



எஸ்.லிங்கேஸ்வரி,
இல.19, சிவபுரி,
திருகோணமலை.



எஸ்.மேகலா,
1ம்,குறிச்சி,
மண்டூர்.



எஸ்.பிரேமலதா,
இல.35/1கண்ணகிஅம்மன்வீதி,
அமிர்தகழி,
மட்டக்ளப்பு



என்.நிரோஜினி,
மாதர் வீதி,
நாவற்குடா,
மட்டக்ளப்பு.



வ. சுமதி,
பிரதான வீதி,
கிரான்.



ரி.ஜெயவதனி,
கனகவனம்,
ஏறாவூர்-05
செங்கலடி.



ரி.பாலச்சந்திரன்,
தபால்அதிபர் வீதி,
காரைதீவு -05



ரி.திருவருட்செல்வன்,
திக்கோடை,
பெரியபோரதீவு,
மட்டக்களப்பு.



எஸ்.புவனேந்திரன்,
பாரதி லேன்,
இராஜதுரைக்கிராமம்,
ஆரையம்பதி-03.



பி.குமுதமலர்,
பொன்னுத்துரை ஆசிரியர் வீதி,
ஆரையம்பதி-03



எஸ்.லூட்ஸ்மலர்,
இல426,அன்புவெளிபுரம்,
திருகோணமலை.



கே.உதயகுமார்,
சரவண வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.



எஸ்.துள்சிநாதன்,
துரைச்சாமி வீதி,
ஆறுமுகத்தான்குடியிருப்பு,
தன்னாமுனை.



கே.ரஞ்சிதமலர்,
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.



வி.தேவராஜன்,
பாடசாலை வீதி,
விநாயகபுரம்,
வாழைச்சேனை.



ஆ.சிறிதரன்,
19, குமாரவேலியார்கிராமம்,
செங்கலடி.



கே.ஆர்.சசிகலா,
பிரதான தபால் அதிபர்
குடிமனை,
திருகோணமலை.



எம்.பிரசாந்தினி,
"ஞானோதயம்",
கல்லடி,
மட்டக்களப்பு.



ஸிராணி மோசஸ்,
14, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.



என்.ஜோதிலிங்கம்,
செம்மலை,
அளம்பில்,
முல்லைத்தீவு.



எஸ்.இளங்கோவன்,
164/7A கீழ் வீதி,
உவர்மலை,
திருகோணமலை.



கே.வசந்தகுமாரன்,
கோளாவில்,
அக்கரைப்பற்று.



எஸ்.கே.ரஜனி ரீட்டா.
34/3சின்னஉப்போடைவீதி,
மட்டக்களப்பு.



வ.குழந்தவடிவேல்,
37/1சத்துருக்கொண்டான்,
மட்டக்களப்பு.



அ.கிருபானந்தன்,
வைத்தியசாலை வீதி,
செட்டிபாளயம்,
மட்டக்களப்பு.



பெ.ரவிகுடி,
வன்னியா வீதி,
களுதாவளை - 1,
களுவாஞ்சிக்குடி.



கு.நீதிமதி,
49, குடியிருப்பு,
வவுனியா.

வி.விஜயா,
94, பழைய கல்முனை வீதி,
கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

ரி.பிரபாகரன்,
வன்னியார் வீதி,
களுதாவளை,
களுவாஞ்சிக்குடி.

PRINTED BY: SELECTION OFFSET AKKARAIPATTU.